முரசொலி

அண்ணாமலர் - 1977 ..... விலை ரூ. 1.50



L+B+Q=SESHPAPER

As you know, 'L' - the length and 'b' the breadth are constants in measuring varieties of papers. But 'Q'-Quality, the third ingredient is also a constant, non-variable in Seshpaper.

Quality covers the durability and evenness of the surface, both in coated and non-coated stock, produced by us.

Naturally, 'Seshpaper' is the right choice of the Printer, the Writer and the Packaging Expert.

Seshasayee Paper & Boards Limited

PALLIPALAYAM

Cauvery R. S. P.O. Salem District.

வாழ்த்திடுக நீ வளர்த்த கழகத்தை!

என் அண்ணனே,

என் கண்ணீர்த்துளிகள் உன் காலடிகளில்பட்டு அந்த ஈரத்தின் சில்லாப்பில் "என்ன தம்பி!" எனக் கண்விழித்துப் பார்ப்பாய் என்ற நம்பிக்கையுடன் இந்தக் கடிதத்தை எழுது கிறேன். எழுத்துக்களல்ல இவைகள்! எல்லாமே என் விழிநீர் முத்துக்கள்தான்! நீ உறங்கத் தொடங்கிய இந்த ஒன்பது ஆண்டுகளில் நீ விட்டுச்சென்ற பணிகளை அயராமல் நிறை வேற்றிய தம்பிகளில் ஒருவனாகிய நான் எழுதும் மடலில் ஒன்பது ஆண்டுக் கால வரலாற்றின் சுருக்கத்தைத் தருகிறேன்

ஓய்வுகொள்ளுமிடத்திற்கு நீ ஊர்வலமாகச் சென்றபோது உன் அமைதியைக் கெடுத்திடக் கூடாதென்று முப்பது லட்சத் திற்கு மேற்பட்டோர் உன் பின்னால் நடந்து வந்தனர். சந்தனப் பேழைக்குள் நீ துயில் கொள்ளத் தொடங்கியவுடன் அருகி ருக்கும் வங்கக்கடல் அலை நாக்கால் தாலாட்டுப் பாடிற்று. எத்தனை நாள் உழைப்பு! எத்தனைநாள் கண் விழிப்பு! எத்தனை எததனை ஏச்சுக்களும் பேச்சுக்களும் எதிரிகளிடமிருந்து கிடைத்தபோதும் "மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணமுண்டு" எனப் பண்பார்ந்த மொழி பேசிய உன் இனிய இதழ்களை மூடிக்கொண்டு, அகன்ற விழிகளின் இமைக் கதவுகளைத் தாளிட்டுக் கொண்டு நீ படுத்துக் கொண்டாய் என்றாலும் - உன்னால் எழுப்பிவிடப்பட்ட தமிழ் உணர்வு தமிழர் நெஞ்சங்களில் உலவிக்கொண்டு தானிருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகப் "பூம்புகார்" உருவாயிற்று. வள்ளுவர் கோட்டம், வையம் புகழ எழுந்து நின்றது. வீரபாண் டியக் கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங் குரிச்சிக்கும் புதுமை சேர்ந்தது தில்லையாடி வள்ளியம்மைக்கோர் திருநகரமே

தோன்றியது சிதம்பரனார் இழுத்திட்ட செக்கும் நினைவுச் சின்னமாகியது. பாவாணரைக் கொண்டு 'அகர முதலி எழுதும் பணி' தொடங்கப் பெற்றது. தமிழகத்தின் வரலாறு எழுதிட ஓர் குழு வரதராசனார் தலைமையில் அமைந்து அரும்பணி நிகழ்த்தியது. அடித்தளத்து மக்கள், கிராமப்புறம் வாழ்வோர் நடுத்தர மக்கள் நல்வாழ்வு ஒன்றையே மையமாக வைத்துச் சமுதாய அரசு திட்டங்களைத் தீட்டும் என்று ஆட்சி மன்றத்தில் நீ அறிவித்தாயே; அந்த அறிவிப்பினை ஆணையாக ஏற்றுச் செயல் பட்டோம் நாங்கள்! சிற்றூர் பேரூர் எங்கணும் மின்னொளி! கதியற்ற ஏழையர் லட்சக்கணக்கானோர்க்குக் கண்ணொளி! தாழ்த்தப்பட்டோர்க்கும் மீனவர்க்கும் தரமான வீடுகள் இலவசமாக' குடிசையிலே வாடிக்கிடந்தோர்க்கு குடியிருப்புக்கள் பல்லாயிரம்; குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக! குக்கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் திட்டமொன்று குடியிருப்பு மனைகளை விவசாயத் தொழிலாளர்க்குச் சொந்தமாக்கினோம் இலட்சக் கணக்கில்! தொழில் வளர்த்தோம்! நாட்டின் எழில் வளர்த்தோம்' மும்மடங்காகக் கல்லூரிகளைப் பெருக்கினோம் தேசீயமயமாக்கும் திட்டங்கள்-உச்சவரம்புச் சட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. இருபதாண்டுக் கால ஆட்சியைக் காட்டிலும் இருமடங்கு பாசனவசதி பெருகிற்று! தொழுநோய் இரவலர்க்கு மறுவாழ்வு மனைகள் - விதவைகளின் வாழ்வுக்கு மறுமலர்ச்சித் திட்டங்கள் - ஆதரவற்ற சிறார்க்குக் கருணை இல்லங்கள் - ஊனமுற்றோர்க்கு விரிவான நல்வாழ்வுத் திட்டங்கள் - ஏடு கொள்ளாது அண்ணா - எண்ணிறந்த சாதனைகளை எடுத்துச் சொல்ல!

இடையிலே எத்தனையோ எதிர்ப்புக்கள்' எத்தனையோ துரோகங்கள்! ஏன்; நீ சமுகத் தலைமை ஏற்றிருந்தபோது ஏற்படுத்தினரே கட்சிக்குள் குழப்பம்; அவர்களின் மோசடிப் பட்டியல் முடியாமலே இருந்திருக்கிறது அந்தக் கணக்கைக் காட்டாமல் நீ கண்ணுறங்கப் போய்விட்டாய்! எனினும் நீ யார் யாரை எப்படி அளந்து வைத்திருந்தாய்-எந்த இடத்தில் வைத்திருந்தாய் - என்பதெல்லாம் நான் அறிவேன் என்றாலும் சற்றுத் தாராளமாகவும் தயவு தாட்சண்யம் காட்டுபவனாகவும் நடந்து கொள்ளலாம் என நான் எடுத்த முடிவு: கண்ணுக்குத் தெரியாமல் இருந்த துரோகிகள் கைவரிசை காட்டுவதற்குக் காரணமாகி விட்டது. நீ அமைத்த ஆட்சிதனைக் கவிழ்ப்பதற்கு சூதுவலை பின்னத் தொடங்கினர். அவர்தம் எண்ணம் பலிக்கவில்லை நமது வலிவுதனைக் கண்டு. எப்படியும் இதனைப் பிளக்க வேண்டுமெனக் கருதிய பிரதமர் இந்திராவும் இந்தத் துரோகிகட்குத் துணை நின்றார் எப்படையாலும் வெல்ல முடியாது எனக் கண்ட பின்னர் அவதூறுப்படையை ஏவி விட்டனர் அதனைச் சமாளிக்கக் கிளம்பிய போது ஜனநாயகத்திற்கே ஆபத்து சூழ்ந்தது இந்தியாவில்' போரின் வெற்றி தோல்விகளுக்குப் பருவகாலத்துச் சீதோஷ்ண நிலைகள் காரணமாக அமைந்து விடுவது உண்மையல்லவா அண்ணா! அதே போலத்தான் ஜனநாயகத்தை மீறிய சர்வாதிகாரப் புயல் காற்றின் வேகத்தில் நாடே சுழன்றது — அப்போதும் ஜனநாயகக் காவலனும் உன்னால் உருவாக்கப்பட்ட இந்தக் கழகம் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தது அதன் காரணமாக ஆட்சிக் கவிழ்ப்பு — அவதூறுப் பிரச்சாரம் — சிறைக்கோட்டம் — இத்யாதி இத்யாதி — கொடுமைகளைக் கழகம் தாங்க நேரிட்டது பதவியில் இருந்தவரையில் துணைக்கு நின்ற தோழமைக் கட்சிகள் சென்ற இடம் தெரியவில்லை தந்தை பெரியாரின் பேரிழப்புக்குப் பிறகு அனாதைகளாகி விட்டோமா என்ற அச்சத்துக்கு இடமின்றி திராவிடர் கழகத்தினரின் துணையொன்றே மிச்சம்

நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியால் கழகத்திற்கு அரும்பாடம் ஒன்று கிடைத்தது. வெற்றிமுனை நோக்கிச் செல்லும் வரையில் தான் சிலர் இருப்பர் கழகத்தில்-துன்பம் வந்துற்ற போழ்து துணை நிற்காதது மட்டுமல்ல; துரோகமும் இழைப்பர் என்ற உண்மைக்கு "உதாரண மனிதர்கள்' சிலர் புறப்பட்டனர்

"வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் ஒன்றாக இருப்போம்' என நீ அடிக்கடி கூறுவாயே—அதனை நினைத்தவாறு நாங்கள் விடாமல் நடத்திய இலட்சியப் பயணத்தின் வெற்றியினை எங்களால் இன்று உணர முடிகிறது.

உன் பெயர் சொல்லி ஆதாயம் பெற ஒரு கூட்டம் நாட்டில்! உன் கொள்கை சொல்லி ஆவி தரவும் தயாராக இருக்கும் ஒரு கூட்டம் கழகமெனும் பாடி வீட்டில்!

கட்டைவிரல் வேண்டுமென்று கேட்டால் ஏன்' என்று கேட்காமல் உடனே வெட்டித்தரக் கூடியவன் கருணாநிதி என்று ஒருமுறை சொன்னாயே; அந்தத் தயக்கமற்ற தன்மையுடன் கழகம் காத்திட உயிர்தர நேரிடினும் தயார் என என்னைப்போல் இலட்சக்கணக்கானோர் இருக்கின்றனர் இந்த இயக்கத்தில்!

தமிழ்ச் சமுதாயத்திற்கு உழைப்பதாகக் காட்டிக்கொள்ள அல்ல; உண்மையிலேயே உழைப்பதற்காக - உன்னால் அமைந்த கழகம் இருக்கிறது அதன் கனல் அணையாமல் அப்படியே இருக்கிறது - உன்னை ஊட்டிடும் உயிரோடும் உணர்வோடும் இணைத்துக் கொண்டவாறு என்றென்றும் அழியாமல் இருக்கும் இந்தக் கழகம்!

இந்த உறுதிமொழி - உன் பிறந்த நாளில் உனக்கு மகிழ்வூட்டும் பரிசல்லவா?

வேறென்ன பரிசு இருக்கிறது எங்களிடம்?

வேறெந்தப் பரிசைத்தான் நீ வேண்டுவாய்?

அண்ணனே! இதயமே! இந்தப்பரிசை ஏற்றுக் கொண்டு எங்களை உன்வழியில் மேலும் ஊக்கப்படுத்த வாழ்த்திடுக நீ வளர்த்த கழகத்தை!

உன் தம்பி

மு. கருணாநிதி





தஞ்சைத் தரணியில் செப்டம்பர் 14, 15 தேதிகளில் தலைவர் கலைஞர் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது பட்டுக்கோட்டையிலும் தஞ்சாவூரிலும் அண்ணாவின் சிலைகளுக்கு மாலையணிவித்து வணங்கிய காட்சிகள் மேலே காணப்படுகின்றன.

அண்ணுவின் தனிப்பெருமை

பொதுச்செயலாளர் பேராசிரியர்

தமிழ்கூறும் நல்லுலகெங்கும் உள்ள இல்லந்தோறும் போற்றி நினைவில் கொள்ளப்படுபவரும், தமிழ் மக்கள்தம் உள்ளமெல்லாம் ஒரு புதிய நம்பிக்கையை ஒளிரச் செய்தவரும்—இன்றும் செய்பவராக இலங்கும் பெரும் புகழுக்குரிய பேரறிஞர் அண்ணுவின் ஆற்றல் பலப்பல திறத்தால் உருவானதாகும்.

பேரறிஞர் அண்ணு நிறைந்த கல்வியும்—பரந்த அறிவும், நுண்மாண் நுழைபுலமும் கொண்ட ஆழ்ந்த சிந்தனையாளர், எண்ணத்தை வகைப்படுத்தி எடுத்தியம்புவதில்,

''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்—
வேட்பமொழிவதாஞ் சொல்,''

—என்னும் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டான பேச்சாளர்,

எழுத்துத் துறையிலோ—சொல்லுக்குச் சொல் பொருள் சேர்க்கும் வல்லமையோடு எண்ணங்களுக்கு வண்ணஞ் சேர்த்து வகை வகையாகத் தீட்டிடும் பலதுறை எழுத்தாளர்,

நாடகம் அமைப்பதிலோ நாட்டு நடப்பையே நாடக மாந்தர் மூலம் சித்தரிப்பதிலும், என்றோ எழுதப்பட்ட இலக்கியக் காட்சிகளையும் புதிய சிந்தனையோடு காணச் செய்யும் காட்சியாக்குவதிலும், புதுமை முழங்கப் பழமை ஒடுங்க பாத்திரங்கள் படைப்பதிலும் வல்லமைமிக்க நாடகாசிரியர், தானே இயற்றிய நாடகத்தில் தானே நடிக்க முற்பட்டாலோ—நாடகப் பாத்திரத்தின் இயல்பு இம்மியும் மாருமல் காண்போர் தம் மனம் கதையொடும் கருத்தொடும் ஒன்றிடச் செய்யும் வகையில்—நடிப்புக் கலைக்கே புத்துயிரூட்டும் நடிப்பு வல்லோன்,

சமுதாயத்தின் மூடப் பழக்கவழக்கங்களை முறியடித்து—மண் மூடிப் போகச் செய்ய அயராது உழைப்பதிலே ஒரு சீர்திருத்தச் செம்மல், புதுமைக்கான விளக்கத்தையும் விவேகத்தையும் மக்கள் பெறத் தூண்டுவதிலே ஒரு தலைசிறந்த பகுத்தறிவுவாதி!

சமுதாய வாழ்வு சமதர்மத்தோடு இயங்க வேண்டும்—நாடு, பொதுவுடமைப் பூங்காவாக மலர வேண்டும். இரப்போர் எவரும் இருக்கத் தேவை இல்லாத உழைப்போர் உலகமாக, உழைப்பை உறிஞ்சுவோர்க்கு இடமில்லாத வையமாக இது ஆக வேண்டும் என்று வகுத்த கொள்கையாலே ஒரு முற்போக்குத் தத்துவவாதி,

பரவலான ஒரு உணர்வாக மட்டுமே திகழ்ந்த ஓர் இயக்கத்தை ஒரு குறிக்கோளும்—கட்டுதிட்டமும் உள்ள அரசியல் கட்சியாக—திராவிட முன்னேற்றக் கழகமாக உருவாக்கிய அரசியல் வித்தகர்,

தமது கட்சி—சட்டமன்றம் புகாத நாளிலும், புகுந்து எதிர்க்கட்சியாகப் பணியாற்றிய காலத்தும், ஆளும் கட்சியாகப் பொறுப்பேற்ற காலத்தும் ஆட்சியும் நிருவாகமும் எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதை உணர்த்திய நல்லாட்சிக்கு வழிகோலிய ஆட்சிமுறை வல்லுனர்,

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' பொது விதியை மேற்கொண்டவர்க்கு—அநீதியும் அக்கிரமமும் எங்கெங்கு நிகழ்ந்தாலும் அதை எதிர்த்து—கொடுமைக்கு ஆளாவோர்க்குத் துணையாவதே 'மனிதத் தன்மை' என உணர்ந்து எடுத்துக்காட்டிய 'மனித குலத் தொண்டன்,'

எல்லோரிடத்தும், எப்போதும், எந்நிலையிலும் இன்முகத்தோடு அன்புரை வழங்கிப் பண்போடு நடந்து பரிவுடன் செயல்பட்ட பண்பாளன்—

என்றெல்லாம் வகை வகையாகப் போற்றப்படுவதை நாம் அறிவோம்! நாடறியும்!

இவையே அன்றி,

இசைத் துறையிலே ஆழ்ந்த ஈடுபாடு; கூத்துக் கலையிலும் நாட்டிய நாடகத்திலும் நாட்டம்; கவிதைகள் வரைவதிலே களிப்பு, கேலிச் சித்திரம் தீட்டுவதிலும் ஆர்வம்; பட்டிமன்றங்களிலே பங்கு கொள்வதில் தனி மகிழ்ச்சி; மனத்துக்கினிய நண்பர்களுடன் மணிக்கணக்கில் மனங்கலந்து உரையாடுவதிலே தனிச் சுவை; அறிந்தோரிடம் நகைச்சுவை தோன்றப் பேசிடுவதிலே ஓர் எக்களிப்பு—உடையவராகத் திகழ்ந்தவர் அண்ணு!

மலர்ந்த முகம்; விரைந்த நடை; எளிய தோற்றம்—இவைகளுடன் காட்சி தந்த அண்ணுவின் உள்ளமோ—பெரியது! மிகப் பெரியது!

அவரது பார்வை, அனைவரிடத்தும் கனிவு காட்டுவது! அவரது உரை யாரிடம் பேசினும் அன்பு ததும்புவது! அவரைக் காணினும்—அவரது முகம் நோக்கினும், அவரது நாவசைந்து நான்கு சொற்களைக் கேட்பினும் கண்டு கேட்போர்க்கு ஒரு மகிழ்ச்சி, மன நிறைவு தானே பிறக்கும்.

''கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை''—என்னும் உண்மையை—இயல்பாகவே தெளிந்த அண்ணு இந்த இயல்பை என்றும் மாருது காத்து வந்தார்.

பரந்து விரிந்த அறிவாலும், பக்குவப்பட்டு உயர்ந்த உள்ளத்தாலும் சிறந்த அண்ணு அவர்கள், பிறர் குற்றம் காண நேரிடினும் அதைப் பொருட்படுத்தாமலும், அப்போதே மறந்திடுபவராகவும், பிறர் நலமும், திறமும் காணுமிடத்து அதைப் போற்றி உரைக்கும் மாட்சி உடையராகவும் விளங்கினர்.

''ஏதிலார் குற்றம் போல்—தம் குற்றங் காணும்'' தனிப் பண்பு அவரிடம் நிலைபெற்றிருந்தது.

நாளும் உடனிருந்து நெருங்கிப் பழகி ஒரே நோக்குடன் பணியாற்றும் தமது தோழர்களிடையே—தம்பிமார்களிடையே குற்றம் குறை காணும்போது—அதுவும் இன்னொருவருக்குத் தீங்காகி இயக்கத்திற்கு ஊறு செய்யும் தன்மை உடையதானல்தான் அதனைக் கண்டு கொள்வார். அதனையும்—தமது சினம் வெளிப்பட சுடச்சுட கூறிப் புண்படுத்தாது ''இனிய உளவாக இன்னுத கூறல்'' ஏனே என்று தவிர்த்து, நகைச்சுவையோடும்—நயமோடும் உரைத்து—அந்தக் குற்றம் மேலும் தொடராது—மாற்ற முற்படுவார்.

நாளும் பழகிய சிலரே — தமக்கு வேதனை தரும் வண்ணம் நடந்து கொண்டால்—தன்னையே புண்படுத்தினல்—அதனை உள்ளத்திலே அடக்கிக்கொண்டு அறியாதவர் போலவே நடக்க முயற்சிப்பார். அவர்களைச் சந்திக்க நேரிட்டாலும்—அவரிடம் பேச முற்பட்டால் உள்ளம் வெடித்து உண்மையைக் கூற நேரிட்டுவிடும் என்று பேசாமலே செயல்படுவார். அவர் படிப்பதிலோ எழுதுவதிலோ ஈடுபட்டவாறு அவர்களைக் கவனிக்காததுபோல் இருந்துவிடுவார்.

தவறு இழைத்தவர்கள் தம் குற்றம் உணர்ந்துவிட்டார்கள் என்று அவருக்குத் தோன்றுமானல் அதன் பின்னர் அவர்களிடமும் வழக்கம்போன்று பழகத் தலைப்படுவார்.

''அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான்
குற்றமே கூறிவிடும்''—என்னும் வள்ளுவர் வாக்கினை நடைமுறையில் மேற்கொண்டு தம் பெருமை காத்தவர் அண்ணு!

யாரையும் தம்முடைய அன்புப் பிணைப்பிலிருந்தும் இலட்சிய உறவிலிருந்தும் எளிதிலே அறுத்துக்கொண்டு போக இசையமாட்டார் அண்ணு! ஏதேனும் அரசியல் உள்நோக்கத்தோடு—தம்மை விட்டுப் பிரிய சிலர் தவருன முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று அறிந்த நிலையிலும், அவர்தம் உள்நோக்கம் எதுவாயினும் அதைப் பொதுமக்களே உணரும் நாள் வரை—பொறுத்திருக்கும் இயல்போடு, தன் வலிமையைக் காட்டாது, கட்சி கட்டாது, அவர்தம் விருப்பத்தையும்கூட தாம் ஏற்க முற்பட்டவராக உடன்பாடு கொண்டவராகவே செயல்படுவார்.

''குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை,'' என்னும் பழமொழியின் கருத்தைத் தமிழ் இனத்தையும் மொழியையும் காப்பதற்கு—தான்

மேற்கொள்ள வேண்டிய நெறியாகக் கொண்டு பெரு நோக்குடன் செயல்பட்டவர் அண்ணு!

''நண்பாற்ரு ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ரு ராதல் கடை''—என்னும் குறள் வழியில், தமக்குக் கேடு எண்ணியவர்கட்கும்—தாம் ஏதும் கேடு எண்ணுமல், யாதொன்றும் தீது கருதாமல் ஒதுங்கி மகிழ்ந்தவர் அண்ணு!

'பொறுத்தார் பூமியாள்வார்'—இல்லையேனும் நல்ல நண்பர்களை யாவது ஆள்வார், அஃதாற்ருர் தம் இல்லத்தையும் ஆளமாட்டார் என்று உள்ளம் தெளிந்த ஞானியாய்த் திகழ்ந்தவர் அண்ணு!

'அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பிலா தவர்''—என்னும் குறள் கூறும் இலக்கணத்துக்கு இலக்கியம் அவர்!

கடமையை உணர்த்தி—கட்டுப்பாட்டை நிலைநிறுத்தி—கண்ணியத்தை வளர்த்து தமிழ்ச் சமுதாயத்தை நடத்திக் காட்டியவர் அண்ணு அவர்கள்.

தமது உள்ளத்தில் கனிவையும், உரையினில் பணிவையும், மேற்கொண்ட செயலில் துணிவையும் காட்டி—'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்னும் மொழிக்கேற்ப வாழ்ந்தவர்—நம்மை வாழச் செய்தவர் பேரறிஞர் அண்ணு!

அப்படிப்பட்ட பண்புடையாளரால் அன்ருே—தமிழ் உலகம் இன்றும் உளதாவது! அதுவன்ருே அவர்தம் பெருமை!

புகழாரம்

சிறு கதை

— ப. உ. சண்முகம்

பெண்கள் பொழுதுபோக்கு சங்கத்தில் 'பெண்ணின் கடமை' என்பது பற்றி பேச ஆரம்பித்தது முதல் முடிக்கும் வரை இடை இடையே பலத்த முழக்கம் தந்து முடித்ததும் கட்டிடமே அதிரும் வகையில் பெரும் ஆரவாரத்தைப் பெற்ருள் மாவட்ட நீதிபதி நடேச ஐயர் மனைவி கல்யாணி அம்மாள்!

கூடியிருந்த கூட்டத்தில் பெரும் பகுதியினர் வழக்கறிஞர்களுக்கு வாழ்க்கைப்பட்ட வனிதையர்கள். ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சென்று கைகொடுத்தனர்! பாராட்டினர்! புகழ்ந்தனர்!

"இசை மழைபோல் பேச்சு இருந்தது' என்ருள் ஒருத்தி! "இல்லை, தேனுறு'' என்ருள் இன்னொருத்தி! 'நேரம்போனதே தெரியவில்லை' என்ருள் ஒருத்தி! ''இவ்வளவு சீக்கிரம் முடித்துவிட்டீர்களே'' என்று வருத்தப்பட்டாள் மற்ருெருத்தி! இப்படிப் புகழாரம் பாடுவோர்புடைசூழ பெருமையோடு நின்றிருந்த கல்யாணிக்கு ''மேடம், காபி'' என்று நீட்டினுள் வக்கீல் வரதாச்சாரியின் மனைவிமங்களம்.

''தாங்க்ஸ்' என்றவாறே வாங்கி உதட்டுச் சாயம் கலைந்துவிடக்கூடாதே என்ற பெருத்த கவலையோடும், எச்சரிக்கையோடும் சிறிது காப்பியை அருந்திவிட்டு கிளம்பினுள் கல்யாணி.

எல்லோரும் கார் வரை சென்று வழியனுப்பினுர்கள்.

கல்யாணி அம்மாளின் கார் சென்றதும் எல்லோரும் புறப்பட்டார்கள். சிலபேர் தங்கள் தோழிகளைப் பார்த்து உதட்டைப் பிதுக்கிக் காட்டிக் கொண்டார்கள்! சிலர் கேலிச் சிரிப்பை வெளியில் காட்டியும், அடக்கிக் கொண்டும் சென்ருர்கள்! இவ்வளவு சேட்டைகளையும் கவனித்துக் கொண்டிருந்தாள் 'கிளப்' வேலைக்காரி முனியம்மாள்.

எல்லாரும் போனதும் விளக்குகளை அணைத்துவிட்டுப் பூட்டிக்கொண்டு வீட்டிற்குப் போய் சேர்ந்தாள் முனியம்மாள்.

ஆறுமுகம், நீதிபதி பியூன். அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்தான். மனைவி முனியம்மாள் குழந்தைக்கு உணவு ஊட்டிக்கொண்டிருந்தாள்.

முனியம்மாள் தன் கணவன் உணவுத்தட்டைக் கழுவி வைத்துவிட்டுச் சாப்பாடு போட்டாள். ஆறுமுகமோ தான் சாப்பிட ஆரம்பிக்கும் முன், இருக்கும் சாப்பாட்டின் அளவைப் பார்த்துக்கொண்டு சாப்பிட்ட உணவைக் குறைத்துக்கொண்டு தன் மனைவியைச் சாப்பிடச் சொன்ஞன். சாப்பாடு முடிந்ததும் கிளப்பில் நடந்ததை முனியம்மாள் கணவனிடம் சொல்லிச் சிரித்தாள்.

கல்யாணியின் அபத்தமான பேச்சுக்கு வக்கீல்களின் மனைவிகள் வாரி வழங்கிய முகஸ்துதியை முனியம்மாள் சொல்லக் கேட்டு ஆறுமுகம் சிரித்துக்கொண்டிருந்தான்.

அடுத்த நாள் காலையில் நீதிபதியின் பங்களாவிற்குள் வழக்கறிஞர் வரதாச்சாரி வந்தார். நடேச ஐயரைப் பார்த்ததும் ''ஒன்றுமில்லை. தங்கள் மிஸஸ் கிளப்பிலே நேற்று பிரமாதமாகப் பேசினுளாம். அதை என் ஒய்ப்'டேப்' பண்ணியிருக்கா! நானும் கேட்டேன். ''டாப் கிளாஸ் ஸ்பீச்'' அந்த டேப்பைக் கொடுத்துவிட்டுபோகலாம்னு வந்தேன்'' என்று சொல்லி கேசட் ஒன்றை நீட்டினுர்.

உள்ளேயிருந்து வந்த கல்யாணி ''என் ஸ்பீச்சா.... நான் டேப் பண்ணலையேன்னு வருத்தப்பட்டுக்கிட்டிருந்தேன் ரொம்ப தாங்க்ஸ்'' என்று சொல்லி அவள் வாங்கிக் கொண்டாள். வரதாச்சாரி விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்.

'டேப்' ஓட ஆரம்பித்தது. கணவனுல் கேட்க முடியவில்லை. காரணம் இல்லாமல் எழும் கையொலி கேட்டுத் திகைத்தார். இருந்தாலும் என்ன செய்வது? வரதட்சணை கொண்டுவந்தவள் மட்டுமல்ல, உத்தியோகம் வாங்கித் தந்தவரின் மகளுமாயிற்றே! தானும் ரசிப்பதுபோல்பாவனை செய்தார். பியூன் ஆறுமுகமும் நடித்தான். முடிந்தது. ஆறுமுகம் கைதட்டினுன்! நீதிபதியும் தட்டினுர்!

அன்றைய தினம்முதல் வரதாச்சாரியின் வாதந்தான் நீதிமன்றத்தில் நின்றது. வென்றது. வழக்குகள் குவிந்தன. கல்யாணியின் சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்வது வரதாச்சாரியின் பாரியாள் வேலை! வழக்குகளில் வெற்றிபெற்று பொருளைப் பெருக்குவது வரதாச்சாரி வேலை!

வரதாச்சாரியின் பெரும் புகழும் பரவியது. வாதத்தில் வல்லவர் என்று புகழப்பட்டார். திடீரென்று வரதாச்சாரிக்கு உயர்நீதிமன்ற நீதிபதி பதவிக்கு உத்திரவு வந்தது. ஏற்றுக்கொண்டார்.

அவருக்குப் பாராட்டுக் கூட்டம் நடந்தது. நீதிபதி நடேச ஐயர் அவர் திறமையைப் புகழ்ந்து பேசினுர். பதவி வருவதற்கு முன்னுள் வரையில் நடேச ஐயர் உட்காரச் சொன்னுல்தான் உட்கார்ந்தவர் வரதாச்சாரி! நீதிபதி, நீதிபதிஎன்று—அதுவும் மெல்லிய குரலில் பவ்யமாக கூப்பிட்டவர், பாராட்டிப் பேசிய நீதிபதி நடேச ஐயரை நன்றியுரை நவிலும்போது ''மிஸ்டர் நடேசன்'' என்று சொல்லியதும், நீதிபதி நடேச ஐயர் நெஞ்சில் சுளீரென்று பட்டது! முகம் மாறியதை ஆறுமுகம் கவனித்தான்!

வரதாச்சாரியின் மனைவி மங்களத்திற்குப் பாராட்டுக் கூட்டம் கிளப்பில் நடந்தது. மங்களம், கல்யாணியை 'அம்மாள்' என்றுதான் கூப்பிட்டுப் பழக்கம். அன்றைய தினம் மங்களம் 'கல்யாணி' என்று பெயரைச் சொல்லி கூப்பிட்டது மட்டுமல்ல; அலட்சியமாக கல்யாணி போட்ட மாலையை வாங்கிக் வைத்தாள். கல்யாணியின் முகம் மாறியது. இதை முனியம்மாள் கவனித்தாள்!

அதுவரை கல்யாணி அம்மாளைச் சூழ்ந்துகொண்டிருந்த வழக்கறிஞர்களின் மனைவியர், மங்களத்தைச் சூழ்ந்து கொண்டு புகழ் ஆரம்பித்தார்கள். கல்யாணிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. வீட்டிற்குப் போய்விட்டாள்.

அவமானப்பட்ட கணவனும் மனைவியும் கவலையோடு குந்திக் கொண்டிருந்தனர். நீதிபதி கவலையை மறைக்க ரேடியோவைத் திருப்பினுர்.

''ஆணவம் அழிந்தது'' என்ற பாடல் ஒலித்ததும் கல்யாணி முறைத்தாள். நிறுத்திவிட்டார்.

பியூன் ஆறுமுகமும் முனியம்மாளும் நடந்ததைச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தனர்!

வரதாச்சாரி வீட்டில் ''புத்திமான் பலவானுவான்'' என்ற கலைவாணரின் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

பெரியார் பற்றி அண்ணு



விசித்திர வைதீகர்களை விதி சிரிக்கச் செய்தார் சாக்ரடீஸ்; உலகுணராதவர்களுக்கு அது உருண்டை என்று உரைத்து உதைபட்டார் கலீலியோ! வைதீகத்தின் மடமையை வாட்டினுர் வால்டேர். மக்கள் மன்றத்துக்கு மதிப்புத் தர வேண்டும் என்ருர் ரூசோ. வேத புத்தகத்தை விற்று விபசார விடுதிக்குப் பணம் தரும் போகிகளைக் கண்டித்தனர் விக்ளிப், ஜிவிங்கிலி, மார்ட்டின்லூதர் போன்ருர். அடிமைகளை விடுவித்தார், ஆபிரகாம் லிங்கன்; முதலாளியின் கொடுமையை எடுத்துரைத்தார் காரல் மார்க்ஸ். அவர்களுக்காகப் போராடினுர் லெனின். சீனரின் சிறுமதியைப் போக்கினுர் சன்—யாட்—சன், துருக்கியரின் மதி தேய்வதைத் தடுத்தார் கமால். இறைவன் பெயர் கூறி ஏழையை வஞ்சித்தவரைச் சந்தி சிரிக்க வைத்தார் இங்கர்சால்.பேதமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னுட்ஷா. வாழ்க்கையிலே வாட்டம், வேதனை, வறுமையின் கொடுமை, வஞ்சகத்தின் ஆட்சி இவைகளிருப்பதைப் படம் பிடித்துக் காட்டினர் கோர்த்தி, டர்கினுவ், டாஸ்ட்டாவஸ்கீ, கிங்களேர் போன்ற எண்ணற்றவர்கள். இவர்களும் இன்னமும் எண்ணற்றவர்களும் தோன்றித் தொல்லைப்பட்டு, தூற்றப்பட்டு, கொடுமைக்கு ஆளாகி மனித சமாஜத்தின் மறுமலர்ச்சிக்காக கொள்கைகளை புதுக்கோட்பாடுகளை எவருக்கும் எதற்கும் அஞ்சாது எடுத்துக் கூறிப் பாமரனுக்காகப் போராடியதால் இன்று பல்வேறு நாடுகளிலே மக்களின் மனம் விடுதலை பெற்றது. அடிமை மனப்பான்மை அகன்றது. அதனுல் அங்கு ஒரு நாட்டை இன்னேர் நாடு அடக்க முடியவில்லை! அடக்கினுல் எரிமலை கக்குகிறது. மக்கள் மனமென்னும் கடல் பொங்கி வழிகிறது. புரட்சிப் புயல் வீசுகிறது. அதன் முன்பு எந்தக் கொடியவனுலும் எதிர்த்து நிற்க முடியவில்லை.

இங்கு ஜாதிக்குள் ஜாதி — குலத்துக்குள் குலம், ஒன்றுக்கொன்று சச்சரவு என்ற பேதத்தின் பெருங்கூத்தைப் பார்க்கிறீர்கள்.

மற்ற இடங்களிலே உழைப்புக்குப் பெருமை. இங்கு உயர்ந்தோர் உழைக்கலாகாது என்பதுதான் நியதி. மற்ற இடங்களிலே பழமைக்குக் கல்லறை, இங்கே புதுமைக்குச் சித்திரவதை.

உலக வரலாறு முழுவதும் தேடினுலும் இதற்கு ஈடான வேருேர் கொடுமையைக் காணமுடியாது. இங்கே நடக்கும் இந்தக் கொடுமைகளைக் கண்டிக்க, எடுத்துக் கூற, எதிர்க்க பெரியார் ஒருவர்தானே இருக்கிருர்.

[கலை:—1959. எடுத்துத் தந்தவர்:
வே. சோமசுந்தரம், தில்லை விளாகம்.]

அண்ணா என்னும் மந்திரச்சொல்

கழகப்பொருளாளர் எஸ்.ஜே.சாதிக் பாட்சா

அண்ணா!

இந்த மந்திரச் சொல், இளைஞர் சமுதாயத்தின் இதயங்களில் எல்லாம் பகுத்தறிவுச் சுடரைப் பரப்பத் தொடங்கியிருந்த நேரம். . .

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுச் சட்டம் பயிலும் மாணவனாகச் சென்னைக்கு வந்திருந்த என்னையும் பேரறிஞர் அண்ணாவின் அறிவார்த்தமான கருத்துகள் ஈர்த்தன. ஐயாவின் சுயமரியாதைக் கொள்கையில் பிடிப்புக் கொண்டிருந்த என் உள்ளத்துக்கு அண்ணாவின் சொற்பொழிவுகள் உரமிட்டன.

அண்ணனை நேரில் சந்தித்து அவரிடம் சில நிமிடங்கள் பேசிவிடவேண்டும் என்கிற துடிப்பு எழுந்தது. எட்டத்தில் இருந்தே அண்ணனைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, கிட்டத்தில் நெருங்கும் முதல் சந்தர்ப்பம் கிடைத்த ஆண்டு 1946.

சட்டக் கல்லூரி மாணவர்களாகிய நாங்கள், வள்ளல் சீதக்காதியின் பெயரால் தமிழ் மன்றம் ஒன்றினை நிறுவிய நேரமும் அதுதான். திராவிடர் கழகத்தின் சமுதாய அரசியல் அணுக்க முறைகள், தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் கழகம் உண்டாக்கிய எழுச்சி ஆகியவை ஒரு மவுனப் புரட்சியை இளைஞர்களின் நெஞ்சில் தூண்டிக் கொண்டிருந்த அந்த வேளையில்..

கல்லூரி மாணவர்களுடன் சென்று அண்ணா அவர்களைச் சந்தித்து, சீதக்காதி தமிழ் மன்றத்திற்குப் பேச அழைத்தது தான் எனக்கு முதன் முதலாக அண்ணா அவர்களுடன் ஏற்பட்ட முகப்பரிச்சயம் ஆகும்.

அதன் பிறகு . .

சென்னையில் ஆங்காங்கே கல்லூரிகளில் நடக்கும் தமிழ் மன்றக் கூட்டங்களிலும் ஆங்கிலச் சொற்பொழிவுகளிலும் முன் வரிசையில் போய் அமர்ந்து பேரறிஞர் அவர்களின் கருத்துக் கோவைகளை மாந்தும் உணர்வுக்குள் பிணைக்கப்பட்டேன்

அண்ணா அவர்களுடன் நெருங்கிப் பழக அப்போதெல்லாம் எனக்கு வாய்ப்புகள் ஏற்படவில்லை என்றாலும், அண்ணா அவர்கள் என்னுள் நெருங்கிக் கொண்டிருப்பதை மட்டும் உணர்ந்து கொண்டேன்.

நான் வக்கீலாக உடுமலைப் பேட்டையில் தொழிலை தொடங்கியபோது — அண்ணா தந்த உணர்வுகள் என் நெஞ்சின் ஆழத்தில் வேரூன்றியிருந்தன. வெளிக்குத் தெரியாவிட்டாலும் மனமெங்கும் வேரூன்றிக்கிடந்த அந்த உணர்வுதான் —எனக்கு உடுமலைப்பேட்டை முனிசிபாலிடியில் ஒரு உறுப்பினனாக என் பொதுவாழ்வைத் தொடங்கவே அடிகோலியது.

1965 வரையில் நான் சென்னைத் தொடர்புகள் எதுவுமில்லாமல், என் தொழிலுண்டு; வார்டுப் பணிகள் உண்டு என்று இருந்தேன். என்றாலும் இயக்க ஈடுபாட்டில்எனக்கிருந்த பற்றும் பாசமும், கட்சித்தொண்டர்கள் மீது அண்ணா வைத்திருந்த நேச உணர்வுமாக எனக்குப் பொதுவாழ்வில் ஓர் தகுதியை சிறுகச் சிறுக உயர்த்தியன.

சென்னையில் எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெற்ற சென்னை மாவட்ட மாநாடு ஒன்றின் தலைமை ஏற்க அண்ணா அவர்கள் எனக்கு அன்புக் கட்டளை இட்டார்கள். சுப்ரவேலு வரவேற்புக் குழுத் தலைவர். திருமதி சரஸ்வதி வெங்கடேசன் மாநாட்டுத் திறப்பாளர்.

ஒரு மாபெரும் மக்கள் பேரணியின் நடுவே என்னை இப்படி அறிமுகப்படுத்திவைத்தது மட்டுமல்லால், 1962 தேர்தலின்போது கட்சியின் பார்லிமெண்டரி குழுவினர் அறிவிப்பதற்கு முன்னதாகவே உடுமலைப்பேட்டையில் சாதிக் பாட்சாபோட்டியிடுவார்என்றும் யாரும் எதிர்பாராத நேரத்தில் அறிவித்தவர் அண்ணா.

அண்ணா என் மீது நம்பிக்கை வைத்தார். ஆனால் அந்தத் தடவை உடுமலைத் தொகுதியில் எனக்கு வெற்றி வாய்ப்புக் கிடைக்கவில்லை. என்றாலும், தோல்வி கண்டு துவளாத நெஞ்சுரத்துடன் நான் இருந்தேன். இந்த உரம் அண்ணா அவர்களின் பாசறையில் என்னைப் பிடிப்புடன் இணைத்துக்கொண்டதால் ஏற்பட்டிருந்த உரம் என்பதையும்— வேரோடியிருந்த ஓர் உணர்வும் என்பதையும் நினைக்கும் போதெல்லாம் பெருமிதம் கொள்கிறேன்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று அண்ணா அவர்கள் வெறும் சொற்றொடருக்காக இந்த வார்த்தைகளைப் பயன் படுத்தவில்லை. அரசியலில் இடிதாங்கிகளைப் போல் அதிர்வுகளால் ஆட்டம் காணாத நெஞ்சுரம் கொள்வதுதான் எந்த ஒரு கட்சிக்கும் இன்றியமையாத அடிப்படை, அன்றேல் – அற்ற குளத்துப் பறவைகள் போல் இறக்கைகளைத் தயாராக விரித்துக்கொண்டிருக்கும் நிலைக்கு அரசியல்வாதிகள் தள்ளப்பட்டு விடுவார்கள்!

1966 இறுதியில் கோவை மாவட்டத்தில் அண்ணா அவர்கள் நடத்திய சூறாவளிச் சுற்றுப் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு சம்பவம் ஆகும். மறைந்த உடுமலை நாராயணன் அப்போதுமாவட்டச்செயலாளர் அண்ணாவுடன் கூடவே தோழர் சிட்டிபாபுவும் வந்திருந்தார். நூற்றைம்பதுக்கு மேற்பட்ட சிற்றூர்களிலும் பேரூர்களிலும் அண்ணா அவர்கள் மக்களை சந்தித்துத் தேர்தலில் கழகம் போட்டியிடும் அவசியத்தைப் தமக்கே உரிய குட்டிக் கதைகள் மூலமும், சொல்லாழம் மிக்க நகைச்சுவைகள் மூலமும், எளிமையான முறையில் எடுத்துச் கூறிக்கொண்டு வந்தார். அப்போது ஜல்லிப்பட்டியில் அண்ணா அவர்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது, திருமூர்த்தி மில் அருகே என்னையும் தோழர்களையும் மாற்றுக் கட்சித் தோழர்கள் தாக்கிவிட்டார்கள் என்ற செய்தியை அறிந்ததும் உடனே கூட்டத்தை நிறுத்திவிட்டு உடுமலைப் பேட்டைக்குத் திரும்பி வந்தார் அண்ணா.

திருமூர்த்தி மில் அருகே நடந்த கலவரத்தில் எனக்கு பெரிய ஆபத்து எதுவும் இல்லை என்பதை அறியும் வரையில் அண்ணா அவர்கள் கொண்டிருந்த கவலையைப்பற்றி நண்பர்கள் கூறினார்கள். அண்ணா அவர்கள் நான் வீட்டுக்கு வந்ததும் என்னைத் தொட்டுப் பார்த்துத் திரும்பச்சொல்லி ஒன்றும் இல்லை என்று தெரிந்த பிறகு தான் நிம்மதியாக மூச்சுவிட்டார்கள்.

அந்த நேரத்தில் என் தாயின் அன்புக்கு ஈடான அன்பும் பாசமும் செலுத்திய அண்ணாவை, எண்ணி நெகிழ்வதற்கு எத்தனை பெரிய பேறுகள் பெற்றிருக்கவேண்டும் நான்?

1967-ல் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக என்னைப் பொறுப்பில் அமர்த்தினார் அண்ணா. அப்போது என்னை அதிகமாகப் பலருக்கும் அடையாளம் தெரியாது. அதனால் திடீர் திடீரென்று பொது மருத்துவமனைகளுக்குச் சென்று சோதனை போடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன் அந்த நேரம்.

இந்தச் சேதியைக் கேள்விப் படும் போதெல்லாம் அண்ணா புன்னகையுடன் கூறுவார்.

''ஒருமுறை காஞ்சீபுரத்திலுள்ள அரசினர்மருத்துவமனைக்கும் சென்றுவா, சாதிக்!''

அப்படி ஒரு முறை போய்வர வேண்டும் என்பதில் எனக்கும் ஆவலாகத்தான் இருந்தது. அண்ணன் பிறந்த காஞ்சிபுரம் மருத்துவமனைகளில் சரியானபராமரிப்போ கவனிப்போ இல்லை யென்பதால் அப்படிக் கூறினாரா அல்லது வேடிக்கையாககூறினாரா தெரியாது.

ஆனால் —

காஞ்சிபுரத்துக்குப் போய் நான் திடீர்ச் சோதனை நடத்துவதற்கு முன்பு அண்ணா அவர்கள் ஒருநாள் திடீரென்று புறப்பட்டுப்போய் காஞ்சிபுரத்தில் தன் கால்கள் நடந்த பகுதிகளில் எல்லாம் யாரும் எதிர்பாராத வண்ணம் சுற்றினார். பழைய நண்பர் பலரையும் சந்தித்தார். வெகுநேரம் சிற்சில இடங்களை வெறித்துப் பார்த்து நெடுமூச்சு விட்டார். ஏதேதோ எண்ணமிட்டார்.

தவழ்ந்து வளர்ந்த மண்ணின் மணத்தை அப்படி ஓர் ஆவலுடன் அண்ணா அவர்கள் ரசித்தது ஏன்?

கேள்விப்பட்ட எங்களுக்கெல்லாம் அது ஒரு புதிராகவே இருந்தது.

அந்தோ—அதை இந்த நேரத்தில் நினைத்தாலும் மனதில் ஒரு சோகம் கப்பிப் படருகிறது.

தம் குலநாயகன் அண்ணா அடையாறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். ''அண்ணாவுக்கு எப்படி இருக்கிறது என்று கேட்டவாறு தமிழகம் முழுவதுமே வந்து அடையாறு மருத்துவமனை அருகே கடல்போல் சங்கமித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கும் ஒரு முறை — ''அண்ணாவின் உடல் நலம் திருப்தியாகவே இருக்கிறது!'' என்று, மருத்துவக் குழுவினர் அறிக்கையை நான் கையொப்பமிட்டு வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன்.

அண்ணா நம்மைவிட்டுப் போக மாட்டார்என்னும் நம்பிக்கையை ஊசியாக, மருந்தாக, டானிக்காக அங்கே கூடியிருந்த திரளுக்கும், எட்டுத் திக்குக்கும் நான் அறிவித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது அவ்வளவையும் பொய்ப்பித்துவிட்டுப் போய்விட்டார் அண்ணா.

ஆம். அப்படித்தான் 1969—ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் அகிலம் முழுவதும் கூறியது. இந்தக் கூற்றை எந்தக் கழகத் தொண்டனும் நம்பத் தயாரில்லை. ஏனென்றால் அந்தக் கதறலையும் அழுகையையும் பொய்யாக்கிவிட்டு அண்ணா என்னும் மந்திரச் சொல், நம் ஆத்மாக்களில் ஒவ்வொரு ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதியில் மட்டுமல்ல, நித்த நித்தம் பிறந்து புத்தம் புது உருவில் பொலிந்து கொண்டிருக்கிறது!

அண்ணா புகழ்

—புதுவை அருணன்

இனமொழி உரிமை காக்க
இழந்தநல் பெருமை மீட்க
புனலிடைப் பொங்கித் தோன்றும்
புத்தொலி வேகம் போல.
தனிவழி காட்டி நின்று
தண்மதி போன்ற அண்ணா
கனியிடை ஊறும் சாறாய்
கவர்ந்தாரே மக்கள் உள்ளம்!

தண்புனல் நீலந் தோய்ந்து
தரையினில் அலையாய் மோதி
வெண்நுரை பூத்துக் காணும்
வியன்இடம் கடலே யாகும்.
இன்தமிழ் வழங்கி நிற்கும்
இலக்கியப் பெருமை கொண்ட
தென்தமிழ் நாடே அண்ணா
சீர் ''தமிழ் நாடாம்'' என்றார்!

விண்ணிடை ஓடும் மேகம்
விரிவான் நிலவும் போல
மண்டினி ஞால மீதில்
வழங்கிடும் அண்ணா நாமம்
வென்றிடும் 'தம்பி' கூட்டம்
விளங்கிடும் வாழை போல!
மன்றினில் அண்ணா கொள்கை
மழையென நன்மை நல்கும்!

காங்கிரஸ் கட்சி திரும்பவும் பதவிக்கு வந்தால் எல்லோரும் சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கும்படி திரு. ஜெகஜீவன்ராம் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி (அவர் காங்கிரசிலிருந்து ராஜினமா செய்ததற்கு முதல்நாள்) தனது குடும்பத்தினரிடம் கூறியிருந்தாராம்.

—'பாபுஜி' தனது குடும்பத்தினரைப் பீதியடையச் செய்யக் கூடாது என்பதற்காக மேற்கூறியவாறு 'லேசாகக்' கூறியிருக்கிறார் என்றே எண்ணிடத் தோன்றுகிறது.

திரு. ஜெகஜீவன்ராம் மட்டுமல்ல; இன்னும் ஏராளமானவர்கள் குடும்பம் குடும்பமாகச் சிறைக்கு அனுப்பப்பட்டிருப்பார்கள், அல்லது சாகடிக்கப்பட்டிருப்பார்கள், இந்திராகாந்தி மட்டும் திரும்பவும் பதவிக்கு வந்திருந்தால்!

1975-ஆம் ஆண்டிலேயே இந்திரா காந்தியையும் அவரது குடும்பத்தாரையும் கொலை செய்யத் திட்டமிட்டதாக திரு. ஜெகஜீவன்ராம் மீது குற்றம்சாட்டி, அவரைச் சிறையில் தள்ள 'மாகாளி'யின் மைந்தன் சஞ்சய் காந்தி திட்டமிட்டு; அதற்கான பூர்வாங்கப் பணிகளைத் தயாரிக்குமாறு Raw, I B ஆகிய மத்தியப் போலீஸ் அதிகாரிகளுடன் திட்டமிட்டிருந்ததாக 'கரண்ட்' ஏடு தெரிவித்திருக்கிறது.

நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகிறது...

மறுபடியும் இந்திரா வெற்றி பெற்றிருந்தால்...

உலக வரலாறு கண்டிராத அளவிற்கு இந்தியா மனித உரிமைகளின் சுடுகாடாக மாறியிருக்கும்.

—இதைத்தான் இந்திராவின் அத்தை திருமதி. விஜயலட்சுமி பண்டிட் மனமுருகப் பல மேடைகளில் கூறினர்.

நேரு குடும்பத்தில் அவர்கள் கொண்ட கொள்கைகளையெல்லாம் குழிவெட்டி மூடுவதற்கு இப்படியொரு மூளியா?—என்று கேட்கத் தோன்றும்.

பண்டித நேரு ஒருமுறை தன்னைப்பற்றியே ஒரு கட்டுரை எழுதி அதை 'மாடர்ன் ரிவ்யூ' என்னும் பத்திரிகையில் 'சாணக்யா' என்னும் புனைப்பெயரில் வெளியிட்டார்.

கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். நமக்கு சீசர்கள் தேவையில்லை.''

—இப்படிப் பண்டித நேரு தன்னைப் பற்றி 1937-ஆம் ஆண்டிலேயே கருத்து தெரிவித்துக் கொண்டார்.

ஆம்; நேருவிடம் (நேருவே ஒப்புக்கொண்டபடி) ஒரு சர்வாதிகாரியாகும் குணங்கள் இருந்தன; ஆனால் அவர் சர்வாதிகாரியாகவில்லை! சீசர்கள் தேவையில்லை—என்று எச்சரித்தார்!

சர்வாதிகாரி இந்திரா



நேரு ஒரு பாசிஸ்ட் அல்ல; ஆனால் அவரிடம் ஒரு சர்வாதிகாரிக்குரிய குணங்கள் அனைத்தும் இருக்கின்றன.

—இது நேருவைப்பற்றி நேருவே எழுதிய வாசகங்கள்!

நேரு தன்னை ஒரு ஜனநாயகவாதி என்றும், சோஷலிஸ்ட் என்றும் வர்ணித்துக் கொள்கிறார். சந்தேகத்திற்கிடமின்றி அவர் அப்படித்தான் இருக்கிறார்... ஆனால், ஒரு சிறு திருப்பம் ஏற்பட்டால் அவர் சர்வாதிகாரியாக மாறிவிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது... அவரிடம் ஒரு சர்வாதிகாரிக்குரிய அடையாளங்கள் அனைத்தும் இருக்கின்றன—பெரும் செல்வாக்கு, திடமான மன உறுதி, ஊக்கம், பெருமை; மற்றவர்களைச் சகித்துக் கொள்ள முடியாத பொறுமையின்மை, பலகீனர்கள், திறமையற்றவர்கள்பால் ஒருவித வெறுப்பு இவைதான் அவை! அவரது முன்கோபம் அனைவருக்கும் தெரிந்ததே. உடனடியாகக் காரியங்கள் நடைபெற வேண்டுமென்பதில் அவர் தீவிரம் கொண்டவர்; விரும்பாதவற்றை உடனடியாக விலக்கிப் புதிதாக உருவாக்கவேண்டும் என்பதிலும் வேட்கை கொண்டவர்; அதனால் தான் ஜனநாயகத்தின் மெதுவான போக்கை அவரால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை.

—இவையனைத்தும் பண்டித நேரு தன்னைத்தானே எடைபோட்டு எழுதியவை!

—அப்படியானல் சர்வாதிகாரியாகும் போக்கு நேரு பாரம்பரியத்தில் இருக்கிறதா?

இதோ மேற்கொண்டு அவர் கூறுகிறார்:

நேருவிடமிருந்து வருங்காலத்தில் நல்ல பணியை எதிர்பார்க்கும் உரிமை நமக்கெல்லாமிருக்கிறது; அதைக் கெடுக்கக்கூடாது. அதிகமாகத் துதிபாடுவதாலும், புகழ்மாலை சூட்டுவதாலும் அவரையும் கெடுத்துவிடக்கூடாது. அவருடைய கர்வம்—அப்படி ஏதாவது இருந்தால்—அது எதிர்க்க முடியாத அளவிற்குக் கடினமானதாக இருக்

முரசொலி மாறன்

தந்தை வெறுத்தொதுக்கிய குணங்கள் அத்தனைக்கும் வாரிசாக பின்னல் மகள் விளங்கினர்!

ஆனல், அவரது பாச உணர்வு தனக்குப் பிறகு தன் மகள் சிம்மாசனத்தில் வீற்றிருக்க வேண்டும்—என்று விரும்பியதாக இப்போதைய வரலாற்ருசிரியர்கள் உறுதிசெய்கின்றனர்.

தேபருக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியின் தலைவராக யார் வருவது என்கிற கேள்வி பிறந்தது.

தன் மகள் இந்திராவே அந்தப் பதவிக்கு வரவேண்டும் என்கிற கருத்து விதையைப் பண்டிதரே தூவினர்.

நிஜலிங்கப்பாதான் அந்தப் பதவிக்கு வரவேண்டும் என்று மற்றவர்கள் மனதில் முடிவு செய்து வைத்திருந்தனர்.

திடீரென்று காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டப்பட்டது.

நேருவோடு காமராசர், பந்த் ஆகியோர் அமர்ந்திருந்தபோது, அப்போது நேருவின் 'மனசாட்சிக் காவலராக' விளங்கிய சாஸ்திரி காங்கிரஸ் தலைவர் பதவிக்கு இந்திராவின் பெயரைத் தெரிவித்தார்.

—மேற்கொண்டு நடந்ததை பிரபல செய்தியாளர் துர்காதாஸ் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

''பின்னணியில் நடைபெற்றவைகளைப் பற்றிச் சிறிதும் தெரிந்து கொள்ளாத பந்த்— சாஸ்திரி இவ்வாறு கூறியதும் ஆச்சரியமடைந்து, ''ஆனல் இந்திராஜிக்கு உடல் நலமில்லை. அவர் முதலில்'' என்று சொல்ல ஆரம்பித்தார். அந்த வாக்கியத்தை அவர் முடிப்பதற்கு முன்பே மிகவும் குழப்பத்துடன் நேரு குறுக்கிட்டு, ''இந்துவின் உடம்பிற்கு ஒன்றுமில்லை. 'பிசி'யாக இருப்பதற்கு ஒரு வேலை கிடைத்தால் அவள் நன்ருகவே இருப்பாள்'' என்று கூறினர். அதோடு விவாதம் முடிவுற்றது. அதற்குப் பிறகு கவனமெல்லாம் நிஜலிங்கப்பாவிற்கு இந்த முடிவை எப்படித் தெரிவிப்பது என்கிற தந்திரமான கேள்விக்குத் திரும்பியது. பந்த்திடம் நேரு அந்தப் பொறுப்பினை ஒப்படைத்தார். பந்த் அந்தப் பொறுப்பினைக் காமராசரிடம் கொடுத்தார். இந்தச் சூழ்நிலையில் நிஜலிங்கப்பா, சஞ்சீவ ரெட்டி—ஆகியோருடன் தானும் சேர்ந்து திருமதி காந்தியின் பெயரை முன்மொழிந்து கூட்டறிக்கை விடுவதுதான் சரியாக இருக்கும் என்று காமராசர் தெரிவித்தார். அதன்படியே காமராசர் சென்னை வந்து, பிறகு மூவரும் கூடி அறிக்கை விடுத்தனர்.''

—இப்படித்தான் இந்திரா தந்தையின் தோளிலிருந்து காங்கிரஸ் தலைமைக்குத் தொத்திக்கொண்டார்.

இந்திரா அப்போதுதான் பதவி என்னும் கருவியை முதன் முதலில் பயன்படுத்தினர்.

அப்பத்தின் சுவை அருந்தினல்தான் தெரியும்!

தான் ஜனநாயகவாதியா, அல்லவா—என்பதை இந்திராகாந்தி அப்போதே உலகிற்குத் தெரிவித்துக்கொண்டார்.

அப்போதுதான் உலகத்திலேயே முதல் தடவையாகக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி தேர்தலில் ஈடுபட்டு, மக்களது சம்மதத்தைப் பெற்று கேரள மாநிலத்தில் ஆட்சிக்கு வந்திருந்தது!

திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளைப் பிற்போக்குவாதிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அதைவிட காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி எங்கே தொத்து நோய் போல இதர மாநிலங்களிலும் பரவிவிடுமோ—என்கிற பயம் எல்லோர் மனதிலும் இருந்தது!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கேரளத்துக் கம்யூனிஸ்ட் ஆட்சியை எப்படியாவது வீழ்த்திவிட வேண்டும்—என்பதில் முனைப்பாக இருந்தார் காங்கிரஸ் தலைவர் இந்திரா!

காங்கிரஸ் தலைவர் இந்திரா இந்தியப் பிரதமர் நேருவுடன் மிகப் பலமாக வாதாடினார்—தொடர்ந்து வாதாடினார்—தீவிரமாக வாதாடினார்—கேரளாவில் ஈ.எம். எஸ். அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியைப் 'பிரகடனம் செய்ய வேண்டுமென்று!

பண்டிதர் தனது பெண்ணின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

அதற்குப் பிறகு சர்வாதிகார மனப்பான்மை கொண்ட இந்திரா வாளாவிருக்கவில்லை.

எதிர்ப்பு ஊர்வலங்கள், சத்யாக்கிரகம்—என்கிற பெயரில் கேரளம் முழுவதும் வன்முறைக் கிளர்ச்சிகள் நடைபெறுவதற்குக் காங்கிரஸ் தலைவரான இந்திராவே தூண்டிவிட்டார்!

மக்கள் எங்களுக்களித்த தீர்ப்பு முடிந்து அடுத்த தேர்தல் வருவதற்கு இன்னும் முப்பது மாதங்கள்தான் இருக்கின்றன. முடிந்தால் அப்போது எங்களை நீக்கிவிட்டு மக்களுடைய ஆதரவைப் பெற்று காங்கிரஸ் பதவிக்கு வரட்டுமே!—என்று ஈ. எம். எஸ். அன்பான அறைகூவல் விடுத்தார்!

காங்கிரஸ் அதுவரை பொறுத்திருக்க வேண்டும்—என்பதுதான் அனைத்து ஜனநாயகவாதிகளின் கருத்தும்!

ஆனால், எதிர்க்கட்சியின் ஆட்சியை அகற்றிவிட இந்திரா துடியாய்த் துடித்தார்!

1959, ஜூலை மாதம் 25-ஆம் தேதி காங்கிரஸ் தலைவர் என்கிற முறையில் இந்திரா குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத்தைச் சந்தித்து, எப்படியாவது கேரள அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆனால் இந்த ஜனநாயக விரோத முடிவிற்கு முதலில் அவரும் இசையவில்லை.

பாவம், பண்டிதருக்கோ இரண்டுங்கெட்டான் நிலை! தந்தை உணர்வும் ஜனநாயக உணர்வும் மோதிக்கொண்டன!—முதலில் வெற்றி பெற்றது ஜனநாயக உணர்வுதான்! பெண்ணின் பேச்சுக்கு இசைய மறுத்துவிட்டார்!

இந்திரா பொறுமை காட்டவில்லை.

அடுத்து, அவர் உள்துறை அமைச்சரான பந்தைப் பிடித்தார்.

கேரளத்தில் தலைவிரித்தாடும் 'வன்முறைக் கிளர்ச்சி'யைக் காரணம்காட்டி அவர் உள்துறை அமைச்சரைத் தன்பக்கம் ஈர்த்து விட்டார்!

—இருவரும் சேர்ந்த பிறகு பண்டித நேருவும் மெழுகானார். **1959-ஆம் ஆண்டு ஆகஸ்ட்—1-ஆம் தேதி இந்தியாவின் முதல் எதிர்க் கட்சி அரசான கேரள அமைச்சரவை 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டது! ஜனநாயகவாதியான பண்டிதர் பெருமையிலும் மாசு படிந்தது!**

அதற்குப் பிறகு பரம வைரியாகக் கருதிய முஸ்லிம் லீக் கட்சியுடன் காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொண்டது.

இலட்சியம் எப்படிப் புனிதமாக இருக்க வேண்டுமோ அது போலவே அதை அடைவதற்குத் தேர்ந்தெடுக்கும் வழியும் புனிதமாக இருக்க வேண்டும்.

—இதுதான் காந்தீயவழி; உத்தம வழி!

ஆனால், சர்வாதிகார இந்திரா நினைத்ததை முடிப்பதற்கு எந்தக் கொலைபாதகத்தையும் செய்யத் தயங்கமாட்டார்!

அதற்குப் பிறகு...

காலம் உருண்டது.

இந்திரா நினைத்தபடியே லால்பகதூர் சாஸ்திரியின் மரணத்திற்குப் பிறகு இந்தியாவின் பிரதமரானார்.

ஆனால், அவரைக் கட்டுப்படுத்துவதற்காக 'சிண்டிகேட்' திரு. மொரார்ஜிதேசாயை துணைப் பிரதமராக்கியது!

இந்திராவிற்கு நிம்மதியில்லை; எப்போதும் மொரார்ஜியார் மீது சந்தேகம்!

ஏனெனில் அவரது கண் பிரதமர் நாற்காலியில் விழுந்திருப்பதாக ஒரு எண்ணம்!

அதை எப்படித் தகர்த்தெறிவது?

மொரார்ஜி மீது சேற்றைவாரி வீச வேண்டும்; அவரது 'இமேஜை' நாசம் செய்ய வேண்டும்!

—இதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன.

மாநிலங்கள் அவையில் திரு. மொரார்ஜி தேசாயின் புதல்வர் திரு. காந்திலால் தேசாய் மீது தொடர்ந்து புகார்கள் இளந்துருக்கியரால் எழுப்பப்பட்டன!

(அப்படிப் புகார் கூறிய திரு. சந்திரசேகர் இப்போது ஜனதா கட்சியின் தலைவராக இருப்பது சரித்திரம் உருவாக்கிய விசித்திரங்களில் ஒன்று!)

மொரார்ஜி மீது அவரது புதல்வர் மூலமாக வீசப்பட்ட கணைகள் ஏராளம், ஏராளம்!

பிரதமர் இளந்துருக்கியரைக் கட்டுப்படுத்திவைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சீறும்புலியே! வீறு கொள்!

—சேரலாதன்

அன்புமனம் அருள்வதனம் அவரின் சொந்தம்!
அறிவுமிகும் சொல்லமுதம் அவர்பாச் சந்தம்!
பண்புமிகும் செயல்முறையே அவர்தம் நாட்டம்!
பகைவர்க்கும் நலஞ்சேர்த்தல் அன்னார் ஏற்றம்!
என்புருகப் பிறர்க்குதவல் அவரின் ஆர்வம்
எளிமைமிகும் உருவமைப்பே அன்னார் தோற்றம்!
வன்முறையை வெறுத்தொதுக்கும் அவரின் உள்ளம்
வாழ்வாங்கு வாழ்ந்ததனால் அவரோர் தெய்வம்.
கரம்பாய்க் கிடந்த தமிழர் நெஞ்சினைத்
திறமாய் உழுது தீந்தமிழ் உணர்வை
விதைத்து, காத்து, வளநீர் பாய்ச்சி
சிதைக்க வரும்பகை செருத்து விரட்டி
களையாம் உட்பகை களைந்து, பெருமை
விளைந்திட அண்ணன் வேலியாய் நின்றார்;
அறுவடை செய்த அருமைப் பயிரை
குறுமன வீணர் கொள்ளை கொண்டிட
வறுமை யுற்ற வாழ்குடி போல
வெறுமையாய்த் தமிழினம் வீழ்ந்து கிடப்பதோ?
பன்னூ ரூண்டு படிந்தது போதும்!
கன்னித் தமிழும் குமைந்தது போதும்!
இன்னம் ஓர் ராண்டுக ளாயின்
முன்னம் பழம்பகை மூண்டிடும் உண்மை!
முத்துத் தமிழும் முக்காடு போட்டிட
எத்திப் பிழைப்பர் ஏற்றம் பெறுவர்.
மீண்டும் தமிழன் மிடிமை யுற்றுத்
தூண்டில் புழுவெனத் துடிக்கவும் வேண்டுமோ!
வேண்டுமோ இந்த வேதனை வாழ்வு?
தூண்டுச் சுடரொளி தூயவர் அண்ணா
யாண்டு போயினர் அவர்நம் நெஞ்சில்
நீண்ட நினைவாய் நிற்ப துணராய்!
அண்ணன் உணர்வை அகத்தில் ஏற்றுக!
பண்ணருந் தமிழ்ப்பகை பணிந்திட, தோழனே,
சீறும் புலியே! சிறுத்தையே
வீறு கொள்க, விரைவாய், எழுந்தே!

இந்திரா அப்படி எதையும் செய்யவில்லை. அவரது சம்மதத்தின் பெயரில்தான் அனைத்தும் நடப்பதாக ஒரு தோற்றம் ஏற்பட்டது.

—காங்கிரஸ் கட்சியில் இப்படி ஒரு மூத்ததலைவரின் முதுகில் குத்தும் பணிக்கும், காலை வாரிவிடும் வேலைக்கும் இந்திரா ஒரு துவக்க விழா நடத்தினார்!

காலம் மாறியது.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'

'தன்வினை தன்னைச் சுடும்'.

—இந்தப் பழமொழி இந்திரா விஷயத்தில் உயிர்பெற்று உலாவர ஆரம்பித்தது.

கேரளத்தில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை எதிர்த்து எத்தகைய வன்முறைக் கிளர்ச்சியை இந்திரா துவக்கி நடத்தினாரோ; அதே மாதிரிக் கிளர்ச்சியைப் பின்னால் ஜெ. பி. குஜராத்திலும், பீகாரிலும் இந்திரா காங்கிரசை எதிர்த்து நடத்தினர்.

எப்படி மொரார்ஜி தேசாயின் மகனை வைத்து புழுதிவாரி வீசும் பணியை இந்திரா மேற்கொண்டாரோ அதே பாணியைப் பின்பற்றி மகன் சஞ்சய் காந்திமீது புகார்கள் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டன!

பதவி நாற்காலியில் நிரந்தரமாக ஒட்டிக்கொள்வதற்காகத்தான் அதிகாரப் பித்தர்கள் சர்வாதிகாரிகளாக மாறுகிறார்கள்.

இந்தியாவின் பிரதமர் பதவி தனது குடும்பத்துச் சொத்து என்று இந்திரா கருதினார்.

1975 ஜூன் 12-ஆம் தேதி அலகாபாத் தீர்ப்பு வெளியாயிற்று. அன்றே குஜராத் மாநிலத் தேர்தல் முடிவுகளும் வெளியாயின! அலகாபாத் தீர்ப்பு – உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பு!

குஜராத் தீர்ப்பு - மக்கள் மன்றம் அளித்த தீர்ப்பு!

இரண்டும் இந்திராவுக்கு எதிரானவை!

இனிப் பதவி பறிபோய் விடுமென்று கருதிய இந்திரா நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தினார்!

அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமலேயே சட்ட விரோதமாகக் குடியரசுத் தலைவரின் கையெழுத்தைப் பெற்று சர்வாதிகாரியானார்!

உண்மை வெளிவராமலிருக்க முன்தணிக்கை முறையைக் கொண்டு வந்து பத்திரிக்கை உரிமையின் குரல் வளையை நெறித்தார்!

வெள்ளைக்காரனும் கொண்டுவரத் தயங்கிய 'மிசா' சட்டம் அமுலுக்கு வந்தது!

மிசா சட்டத்தின்கீழ் அரசியல்வாதிகளைக் கைது செய்யும் திட்டம் கையெழுத்திற்காக அப்போதைய மத்திய அரசின் உள்துறைச் செயலாளர் முக்கர்ஜியிடம் சென்றது.

'மிசா சட்டத்தை அரசியல் காரணங்களுக்குப் பயன்படுத்தமாட்டோம் என்று மத்திய அரசின் சார்பாக நாடாளுமன்றத்தில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது முறையல்ல' — என்று கோப்பில் முக்கர்ஜி எழுதினர்.

—உடனே அந்த முக்கர்ஜி உள்துறை அமைச்சகச் செயலாளர் பதவியிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார்! ஒரு 'ஆமாம் சாமி' அந்த இடத்தில் அமர்த்தப்பட்டார்!

நாட்டில் கொடுங்கோலாட்சி தலைவிரித்தாடியது!

சிறைச்சாலைகள் நாஜிகளின் 'கான்செண்ட்ரேசன் கேம்ப்' (Concentration Gamp] களைப்போல மாறின!

எத்தனைபேர் சிறையில்? எத்தனைபேர் செத்தனர்? — இன்னும் முழுமையான கணக்கு கிடைக்கவில்லை. 'ஷா கமிஷன்'தான் இந்த விபரங்களைத் தரவேண்டும்.

25 — அம்சத் திட்டத்தைப் பற்றி வானொலியும், செய்தித் தாள்களும் காதடைக்கும் விதத்தில் பிரச்சாரம் செய்தன!

—ஆனல், உண்மையில் ஏதாவது உருப்படியான 'பொருளாதார லாபம்' உண்டா?

சரியான புள்ளி விபரங்கள் மறைக்கப்பட்டன.

ஆனல் இப்போது கிடைக்கும் புள்ளி விபரங்கள் சர்வாதிகார ஆட்சியிலே நடைபெற்ற பொருளாதாரக் கேடுகளையே எடுத்துரைக்கின்றன.

நாட்டிலே 'கட்டுப்பாடு' நிலவுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆனல் நிலைமை என்ன?

நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட முதல் மூன்று மாதங்களில் சுமார் இரண்டரை லட்சம் தொழிலாளிகள் கதவடைப்பு காரணமாக மேற்கு வங்கத்தில் மட்டும் வேலையிழந்தனர்!

ஜூன் 1975-லிருந்து ஏப்ரல் 1976—வரை 50 இலட்சம் 'மனித நாட்கள்' (Man-Days] தனியார் தொழிற்சாலைகளில் 'லாக் அவுட்' காரணமாக இழக்கப்பட்டன.

—முன்பு வேலைநிறுத்தம் காரணமாக இழக்கப்பட்ட மனித நாட்களைவிட இது இரண்டுமடங்கு அதிகம்!

நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு, பம்பாய் 'ஸ்டாக் மார்க்கெட்'டில் பங்குகளின் விலை உயர்ந்தன!

விலைவாசி முதலில் குறைவதாகத் தோன்றியது, ஆனல் வானொலியில்தான் விலைவாசி குறைந்ததே தவிர மார்க்கெட்டில் அல்ல!

1976 மே மாதம் 7-ஆம் தேதி விலைவாசி உயர்வு ஆட்சியாளர்களுக்குக் கவலையளிப்பதாக அதிகாரபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

—ஆனல் இதே பருவத்தில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டதற்கு முந்தைய ஆண்டில் விலைவாசி நிலையாக (Steady) இருந்தது குறிப்பிடத்தக்கது!

—இந்த நெருக்கடி நிலை அமுலில் இருந்த நேரத்தில்தான் மக்களின் வாங்கும் சக்தி வேறென்றும் இல்லாத அளவிற்குக் குறைந்தது!

ஏழைகளின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்ட 'ஸ்டாண்டர்டு' துணி வாங்குவாரற்றுத் தேங்கிக் கிடந்தது. (இந்தத் திட்டம் 20 — அம்சத்தில் 10-வது அம்சமாகும்! ஆம்! மற்ற அம்சங்களைப்போலவே பத்தாவது அம்சமும் அச்சுமுறிந்த தேராகி மூலையில் முடங்கியது!)

—இந்த நேரத்தில்தான் திரு. சுப்ரமணியத்தின் 'பட்ஜெட்'வந்தது!

புதிய வரிகள் நிதியமைச்சருக்கு மட்டுமே தெரிந்திருக்கக் கூடிய உரிமை!

ஆனல், பாவம்! திரு. சுப்ரமணியத்திற்கு அவரது 'பட்ஜெட்டி'ல் வரப்போகும் பல வரிகள் குறித்து முன்னல் தெரியவே தெரியாது!

சென்னையில் ஒரு திருமணத்தில் கலந்துகொண்டபோதுதான் அவர் நெருக்கடி நிலை பிரகடனம் பற்றிக் கேள்விப்பட்டார்!

வண்ண வண்ண கைலிகளுக்கு
இல்லந்தோறும் எண்ணிலா மக்கள்
இதயத்துள் இடம் பெற்றது

புருக் மார்க்
கைலிகள்

BURAK MARK
SUPERIOR QUALITY
HAND LOOM LUNGIES
V. GOVINDA MUDALIAR SONS

★

வண்ணங்களில் புதுமை!
எடுப்பான சிங்காரத் தோற்றம் !!
மங்காத கலர் !!!

★

நாகரீக நங்கையரும் விரும்புவது
புருக் மார்க் கைலிகள் &
கைக்குட்டைகள்

உற்பத்தி & விற்பனையாளர்கள்

V. G. L. COMPANY
68-B, Erusappa Chetty Street
Cuddalore (Post) — 607003.
Phone : 545

அதுபோலவேதான் 'சிசு'வின் செயலாளர் ஒரு நாள் பிரதமர் அலுவலகத்திற்கு கூப்பிட்டனுப்பப்பட்டார்.

அப்போது அவரிடம் வரவிருக்கும் பட்ஜெட்டில் விதிக்கப்படவிருக்கும் புதிய வரிகள் பற்றித் தெரிவிக்கப்பட்டன!

அதைச் செயலாளர்'சிசு'விடம் தெரிவித்தபோது மனம் குன்றி அவமானமடைந்தார். சில நாட்களுக்கெல்லாம் அவருக்கு இருதய நோய் வந்தது.

—இவ்வாறு 1976 மே மாதம் 10ஆம் நாளன்று லண்டன் 'TIMES' பத்திரிக்கை எழுதியது.

அந்த 'பட்ஜெட்' இந்திய முதலாளிகளை மகிழ்ச்சியிலாழ்த்திய பட்ஜெட்!

'தொழிலதிபர்களை மகிழ்ச்சியடையச் செய்யும் பட்ஜெட் இதுவரை இப்படி வந்ததேயில்லை'.

—இவ்வாறு 'டைம்ஸ்—ஆப்—இந்தியா' எழுதியது.

பிரதமர் இந்திரா சோஷலிசம் பேசினலும் அவரது 'பட்ஜெட்' தொழிலதிபர்களுக்குச் சாதகமாக இருக்கிறது.

—என்று நியூயார்க்கிலிருந்து வெளிவரும் ''பிசினஸ் ஸ்டாண்டர்டு' எழுதிற்று!

இதில் வேடிக்கை என்னவெனில் ரஷ்யாவின் 'டாஸ்', இந்தியாவின் பொருளாதார சுய தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்திலும் சுதந்திரத்தைக் காப்பாற்றும் விதத்திலும் பட்ஜெட் அமைந்திருப்பதாகக் கூறியது.

ஆம்; இந்தியாவின் பொருளாதாரம் ரஷ்யாவின் தேவையையும், உலக வங்கியின் தேவையையும் பூர்த்தி செய்யும் விதத்தில் முடுக்கிவிடப்பட்டது.

—எனவேதான் வலதுகளும், இந்திய முதலாளிகளும் போட்டி, போட்டுக்கொண்டு இந்திராவின் சர்வாதிகாரத்தை ஆதரித்தார்கள்.

—இந்தச் சர்வாதிகாரியை 1971-ஆம் ஆண்டிற்குமுன் தி.மு.க. ஆதரித்தது தவறு?

நிச்சயமாக இல்லை.

அப்போது நமக்கு வேறுவழியில்லை. இந்திரா மட்டுமே அப்போது வங்கிகளைத் தேசியமயமாக்குதல், மன்னர் மானிய ஒழிப்பு — போன்ற முற்போக்குக் கொள்கைகளின்பால் நின்ருர். நாமும் ஆதரித்தோம்!

ஆனல் 1975-ல் நிலைமை அவ்வாறல்ல.

தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள அவர் சர்வாதிகாரியானர்.

நெருக்கடி நிலையில் உரிமைகள் பறிபோனது மட்டுமல்ல; வெட்கங்கெட்டுப்போய் முதலாளித்துவ முறை மக்களுக்கு விரோதமான வகையில் முடிசூட்டப்பட்டது!

இந்திரா சர்வாதிகாரியானது திடீரென்று தோன்றிய யோசனையா ?—அப்படித் தெரியவில்லை.

'எப்படிச் சமையல் செய்வது?'—என்கிற புத்தகத்தைப் படித்துச் சமையற் கலையில் ஆர்வமுள்ள ஒருவன், பழகியவன்போல் சமையல் செய்வதைப் போலவே; ''எப்படிச் சர்வாதிகாரியாவது?'' என்கிற திட்டத்தை முன்கூட்டியே தயார் செய்து அதைத் தக்க நேரத்தில் அமுல்படுத்தியதாகவே தோன்றியது.

ஒரு ஜனநாயக நாட்டைச் சர்வாதிகார நாடாக்க வேண்டுமானல் முதலில் நீதிமன்றங்களின் சுதந்தரத்தைச் சுக்கு நூருக்க வேண்டும்.

—இதுதான் பாடம் நம்பர்—1.

—இதைத்தான் இந்திரா 1971 — தேர்தல் முடிந்ததும் முதலாவதாகச் செய்தார்.

1973-ல் ஷீலட், ஹேக்டே, குரோவர் — ஆகிய மூன்று மூத்த சுப்ரீம்கோர்ட் நீதிபதிகளை நீக்கிவிட்டு, 'ஆமாம் சாமி'யான ரே — என்பவரைப் பிரதம நீதிபதியாக்கினர்!

—அன்று முதல் தொடர்ந்தது இந்திராவின் சர்வாதிகார நாடகம்!

—இத்தகைய யோசனையைக் கூறி அதற்குத் துணையிருந்தவர் தமிழ்நாட்டுக் குடிமகனன மோகன் குமாரமங்கலம் என்பது நாமெல்லாம் வெட்கித் தலைகுனியவேண்டிய செய்தி!

எப்படியோ இந்திராவின் சர்வாதிகாரம் வீழ்ந்தது!

மீண்டும் ஜனநாயகம் மலர்ந்தது!

—இந்தியாவெங்கும் சிட்டிபாபுக்களும், சாத்தூர் பாலகிருஷ்ணன்களும் உகுத்த கண்ணீர் வீண்போகவில்லை!

சென்ற ஆண்டு இந்நேரம் தி. மு. கழகத்தோரையெல்லாம் சர்வாதிகாரி இந்திராவும், அவரது ஏஜண்டுகளும் சித்ரவதை செய்தார்கள்!

—இன்று அவர்களே அனுபவிக்கிருர்கள்!

இந்தக் கொடிய சர்வாதிகாரத்தை வீழ்த்துவதற்குத் தி. மு. கழகம் செலுத்திய பங்கு சாதாரணமானதல்ல!

—இது தி. மு. கழகத் தொண்டன் ஒவ்வொருவனுக்குமுள்ள பெருமை!

இந்திரா ஒரு பாசிஸ்ட் !

—இது நாம் சொல்வதல்ல; அவரது கணவரே சொன்னதாகும்:

1959—ஆம் ஆண்டு ஒரு நாள்!

பண்டித நேருவின் இல்லத்தில் அவர், அவரது மகள் இந்திரா, மருமகன் பெரோஷ் காந்தி — ஆகியோர் காலைச் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தனர்.

அப்போது இந்திரா — காங்கிரஸ் கட்சியின் தலைவர்! கேரளத்தில் கம்யூனிஸ்ட் அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்யவேண்டுமென்று மிகத் தீவிரமாக ஆதரவு தேடிக்கொண்டிருந்தார்!

''கம்யூனிஸ்ட் அரசானலும் சரி; வேறு எந்த அரசானலும் சரி — மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை 'டிஸ்மிஸ்' செய்வது ஜனநாயக விரோதமான காரியம்!'' — என்ருர், பெரோஷ் காந்தி!

—இந்திரா இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

''நீ சொல்வது தவறு. நீ மக்களை மிரட்டுகிருய். நீ ஒரு பாசிஸ்ட் !''

—இவ்வாறு தனது மனைவியைப் பார்த்து ஆத்திரத்தோடு கூறினர் பெரோஷ் காந்தி.

—கணவன் கூறிய இந்த வார்த்தைகளைத் தாங்கமாட்டாது கையை உதறிக்கொண்டு சாப்பாட்டு அறையைவிட்டே வெளியேறினர், இந்திரா!

—இன்று அவரைப் பதவியிலிருந்து விரட்டிவிட்டார்கள், இந்திய மக்கள்!

—இந்த உண்மையை வடநாட்டு மக்களைப்போல தென்னட்டு மக்கள் உணரவில்லையே என்பதை எண்ணும்போது நாம் தலைகுனியத்தான் வேண்டியிருக்கிறது!

எக்காலமும் அழியாத எழில்மிகு சொற்றொடர்கள்!

மா. செங்குட்டுவன்

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்து திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நேரத்தில், அண்ணா அவர்கள், தி.மு. கழகம் திராவிடர் கழகத்துக்கு எதிரானதல்ல என்பதை விளக்குவதற்காக, ''திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி,'' என்றார்.

சமுதாயச் சீர்திருத்தத் துறையில் திராவிடர் கழகமும், அரசியலில் தி.மு. கழகமும் தீவிரமாக ஈடுபட்டுப் பணியாற்றியதன் பயனை உணர்ந்தவர்கள் 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்றதன் உட்பொருளை நன்கு உணர்வார்கள்.

இதைவிட 'இரத்தினச் சுருக்கமாக' வேறு யாரால் இக்கருத்தை விளக்க முடியும்?

தமிழக வட எல்லைப் போராட்டம் நடந்தபோது, அதைக் கண்டிக்கும் வகையில் அன்றைய தலைமையமைச்சர் பண்டித நேரு 'நான்சென்ஸ்' என்றார்; தமிழகத் தலைவர்களை தரக்குறைவாகப் பேசினார்.

உடனே, பேரறிஞர் அண்ணா அவர்கள் திருப்பித் தாக்கவில்லை. பண்டித நேருவே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு நாசுக்கான வார்த்தைகளால் இடித்துரைத்தார்.

''பண்டித நேரு மிக மிகப் பெரிய மனிதர்; நாமோ மிகமிகச் சாமான்யர்கள். பெரியவர் பெரிய தவறு செய்துவிட்டார்; சாமானியர்களான நாமும் அந்தத் தவற்றைச் செய்ய வேண்டாம் மறப்போம்; மன்னிப்போம்'' என்றார்.

இருபதாண்டுகளாக ஆட்சி செலுத்தி வந்த காங்கிரசுக் கட்சிக்கு எதிர்காலம் இல்லை யென்பதையும், வளரும் கட்சியான தி. மு. கழகத்துக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதையும் எடுத்துரைக்க அண்ணா கையாண்ட உவமை:

''காங்கிரசுக் கட்சியோ கட்டி முடிக்கப்பட்ட கோபுரம். நாமோ கொட்டி வைக்கப்பட்டிருக்கும் செங்கல்...''

எவ்வளவு அழகான, பொருள் பொதிந்த சொற்றொடர் பார்த்தீர்களா! இதைவிட நயமாகக் காங்கிரசுக் கட்சியைப் பற்றிக் கணித்துச் சொல்வதற்கு, கழகத்தின் எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டுவதற்கு வேறு சொற்கள் உண்டா?

தந்தை பெரியார் அவர்கள் 'பிள்ளையார் உடைப்புப் போராட்டம்' நடத்தியபோது, அண்ணாவைப் பார்த்து, 'உங்கள் நிலை என்ன?' என்று கேள்வி கேட்கப்பட்டது.

உடனே அண்ணா அவர்கள் அளித்த விடை:

''நாங்கள் பிள்ளையாரையும் உடைக்கமாட்டோம்; பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டோம்.''

இதில் எவ்வளவு பெரிய 'தத்துவம்' அடங்கியிருக்கிறது என்பதை, எண்ணியெண்ணி வியந்து பாராட்டியவர்கள் பலர்! இப்படி நறுக்குத் தெறித்ததுபோல் அண்ணா கூறிய சொற்றொடர் கழகத்தவருக்கு இன்னும் கொள்கை விளக்கமாக, வள்ளுவர் குறள்போலப் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம்.

அரசியலில் வன்முறை கூடாது என்பதையும், வன்முறையில் தி. மு. கழகத்துக்கு நம்பிக்கை இல்லை என்பதையும், சர்வாதிகாரம் தேவையில்லை; ஜனநாயகமே தேவை என்பதையும் அழுத்தம் திருத்தமாக அறுதியிட்டுச் சொல்ல விரும்பிய அண்ணா அவர்கள்,

''வேட்டு முறை நமக்கு வேண்டாதது;
ஓட்டு முறையே தேவை''

என்று கூறியது இன்றும் நமது காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

ஜனநாயக ஆட்சியில் மக்களின் கருத்துக்கே மதிப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும்பொருட்டு,

'மக்கள் குரலே மகேசன் குரல்'

என்னும் அழகான சொற்றொடரை வார்த்தெடுத்து அளித்தார்.

காங்கிரசு ஆட்சியாளர்கள் அளவுக்கு மிஞ்சி பண நோட்டுக்களை அச்சிட்டு வெளியிட்டதால் நாட்டில் 'பண வீ[illegible]ற்பட்டு, அதன் விளைவாக விலைவாசிகள் உயர்ந்ததைச் சுட்[illegible]வதற்காக, அண்ணா அவர்கள் ஒரு பெரிய பொருளாதாரத் தத்துவத்தையே உள்ளடக்கிய வாசகத்தைச் சுவரொட்டி மூலம் வழங்கினார்:

1957 பொதுத் தேர்தலின்போது தி.மு.க சார்பில் அச்சிடப்பட்ட சுவரொட்டிகளில் ஒன்று அது.

''நாட்டு வாட்டம் போக்கிட சர்க்கார் நோட்டடித்தால் போதாது''

இந்தக் 'கவிதை வரிகளுக்கு' ஈடாக வேறு எதைச் செல்ல முடியும்?

அன்று அண்ணா சொன்ன அறிவுரை இன்றும் அரசுக்குத் தேவைப்படும் ஒன்றாகவேதானே இருக்கிறது!

காங்கிரசாரின் உதட்டளவு சோஷலிசப் பிரசாரத்தை இடித்துரைக்கும் வகையில் அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்து:

''காகிதப் பூ மணக்காது; காங்கிரசு சமதர்மம் இனிக்காது''

பெரிய பெரிய தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள் எல்லாம் வடக்கேயே அமைக்கப்பட்டு, தென்னாடு புறக்கணிக்கப்பட்டதைக் கண்டிக்கும் வகையில், அண்ணா அவர்கள் எதுகை மோனையோடு கூறியது:

சிந்திரியும் சித்தரஞ்சனும் சிறக்கிறது வடக்கே;
முந்திரித் தொழிலும் சீரழியுது தெற்கே!

சட்டமன்றத்தில் ஒருமுறை காங்கிரசுக் கட்சி உறுப்பினரான கே. விநாயகம், அண்ணா அவர்களைப் பார்த்து ஆணவமாக,

''Yourdays are numbered'' என்று சொன்னார். உடனே அண்ணா அவர்கள் "My steps are measured" என்று சுடச்சுடப் பதிலளித்து, அந்த எதிர்க்கட்சி உறுப்பினரின் வாயடைக்கச் செய்தார்.

மாற்றுக் கட்சியினர் கழகத் தலைவர்களையும் தொண்டர்களையும் தரக்குறைவாக இழித்தும் பழித்தும் பேசுவதைக் குறிப்பிட்டு அண்ணா அவர்கள் பேசுகையில்,

''அடிக்க அடிக்கப் பந்து மேலே உந்தும்; அரைக்க அரைக்க சந்தனம் மணக்கும். திட்டத் திட்ட கழகம் மேலும் வளரும். எனவே, எதிரிகள் நன்றாக ஏசட்டும், அப்பொழுதுதான் நாம் வளருவோம் வாழ்க வசவாளர்கள்,'' என்றார்.

மாற்றுக் கட்சியினரால் கழகத் தொண்டர்கள் தாக்கப்படுவது பற்றிக் கழகத் தோழர்கள் அண்ணா அவர்களிடம் முறையிட்டுக் கொண்ட போதெல்லாம், அண்ணா அவர்கள் கூறிய அறிவுரை,

''தாக்குபவர்கள் தாக்கட்டும்; தாங்கிக் கொள்ளத்தான் வேண்டுமே தவிர, திருப்பித் தாக்கக்கூடாது. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்றார்.

கழகத்தவருக்கு அண்ணா அவர்கள் வழங்கிச் சென்ற முப்பெரும் கட்டளை கடமைகள்—கண்ணியம்—கட்டுப்பாடு.

கழகம் மட்டுமல்ல; ஒவ்வொரு கட்சியும், ஒவ்வொரு மனிதரும் கடைபிடித்தொழுக வேண்டிய 'தாரக மந்திரம்' இது.

இப்படி அண்ணா அவர்கள் அவ்வப்போது, நிலைமையையும் தேவையையும் ஒட்டி வெளியிட்ட கருத்துக்கள், எக்காலும் பயன்படக் கூடிய அரிய கருவூலங்களாக விளங்குவனவாகும்.

அடுக்குச் சொற்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அண்ணா அவர்கள் சொற்களைத் தேடிப் பிடித்துக் கூறுவதில்லை. அண்ணாவின் உள்ளத்திலிருந்து வெடித்து வெளிவரும் எண்ணங்களெல்லாம் உயிர்த் துடிப்புள்ள அடுக்குச் சொற்களாகவே வடிவெடுத்துவிடுபவையாகும்.

அண்ணா அவர்கள் தமிழ்நாட்டில் பிறக்காமல், வேறொரு நாட்டில் பிறந்திருப்பாரானால், அவருடைய 'நாவன்மை' உலகம் முழுவதும் வியந்து பாராட்டக்கூடிய நிலை பிறந்திருக்கும்.

அண்ணா அரசியல்வாதியாக இல்லாமல் ஒரு கவிஞராக இருந்திருப்பாரானால், தமிழ்நாடு மற்றொரு 'திருவள்ளுவரை'ப் பெற்றிருக்கக் கூடும்.

''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை யறிந்து,'' என்ற குறளுக்கு நடமாடும் சான்றாக விளங்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இந்தக் குறளை, 'சொல்வன்மை' என்ற அதிகாரத்தில் வள்ளுவர் வழங்கியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த நாவன்மை படைத்த அரசியல் தலைவர்களில் ஒருவர் அண்ணா என்பதை எதிர்காலத் தலைமுறையினர் வரலாற்றில் படிக்கத்தான் போகிறார்கள்.

அண்ணாவின் அறிவு, ஆற்றல், அரும்பண்பு, சான்றாண்மை, ஆகிய குண நலன்களையெல்லாம் வகுத்துத் தொகுத்து ஆராய்பவர்கள், அவர் எவ்வளவு பெரிய மேதை என்பதை உணர்வர்.

பகலவனும் தண்ணிலவும்

— கி. வீரமணி

பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார்தம் பகுத்தறிவுக் குடும்பத்துத் தலைமகன்; அய்யாவின் அறிவுப் பட்டாளத்தின் தன்னிகரற்ற தளபதி; பகுத்தறிவுப் பகலவனின் ஒளிக்கற்றைகளை வாங்கித் தண்ணொளி பரப்பிய நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா!

அண்ணாவின் அணுகுமுறை எப்போதும் அய்யாவின், நோய்நாடி நோய்முதல் நாடும் முறையிலேயே நிற்கும்! தந்தையின் கருத்துக்களைத் தரணியெங்கும்பரப்பிடுவதில் அண்ணாவின் பணி ஒரு தனி பாணியைக் கொண்டது என்பதாலேயே அவர் ஒருபோதும் தந்தையின் முறைகள் தகாதவை என்று சொன்னது கிடையாது என்பதை இன்று புரிந்து கொள்ள வேண்டியவர்கள் பலர்!

தந்தை பெரியாரின் குருகுலவாசத்தையும், குடும்ப நேசத்தையும், கொள்கைப் பாசத்தையும் ஒருங்கே பெற்றவரான அவர், அய்யா அவர்களுடன் வாழ்ந்த காலத்தையே தமது 'வாழ்வில் வசந்தம்' என்று வளங்கொழிக்கும் சொற்றொடரால் குறிப்பிட்டார்.

ஐயாவின் முறைகளை அளந்து காட்டிய அண்ணா!

அதன் காரணமாகத்தான் என்றென்றும் தந்தையிடம் நீங்காத கொள்கைப் பற்றுடன் கொண்ட 'பக்தி'யும் காட்டினார். 18 ஆண்டு காலம் அவர்கள் பிரிந்திருந்தாலும், ''நான் இருக்கும் இடத்தில் அவர் இருக்கிறார் என்று பொருள்; அவர் இருக்கும் இடத்தில் நானும் இருப்பேன்'' என்றும், ''நாங்கள் என்றும் பிரிந்ததில்லையே; ஏன், பிரிந்தவர்கள் கூடுகிறார்கள் என்று சொல்லி எங்களை மெத்தச் சங்கடப் படுத்துகிறீர்கள்?'' என்று மெத்த ஆதங்கத்துடன் ஒரு கேள்வி கேட்டார், ஒரு விழாவில் பேரறிஞர் அண்ணா!

'மூல பலம் எங்கே இருக்கிறது என்று கண்டறிந்து அதனை முறிப்பதுதான் தந்தை பெரியாரின் போர் முறை' என்று ஒரே வாக்கியத்தில் அழகு ஒழுக, அர்த்தம் பொதிய, அய்யாவின் முறைகளை அளந்து காட்டினார் அண்ணா!

திராவிடர் இயக்கம் செய்துவரும் பணி எதுவும் மேலெழுந்த வாரியானது அல்ல; மூலபலத்தை நோக்கிப் போராடுவது என்பதை எவ்வெப்போதெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அவ்வப்போதெல்லாம் சுட்டிக்காட்ட அண்ணா அவர்கள் தவறவே இல்லை. ஓர் அருமையான எடுத்துக்காட்டு:

மே தினம்—இன்று மேதினியெங்கும் கொண்டாடப் படுகிறது என்றால், அதனை இங்கே அறிமுகப்படுத்தியவர் நமது அய்யா அவர்கள் ஆவார்கள்!

தொழிலாளர் கோட்டச் சொற்பெருக்கு!

திராவிடர் கழகம் அந்நாளில் செய்த அரும் பெரும் சாதனைகளில் அதுவும் ஒன்று. அது பற்றி பொன்மலையில்—தொழிலாளர்கள் கோட்டமான பொன்மலையில்—பேரறிஞர் அண்ணா 'மேதின விழா'வில் கலந்துகொண்டு பேசிடும்போது, நமது இயக்கத்தின் அணுகுமுறை எப்படிப்பட்டது என்பதை விளக்குகிறார்:

''வைகாசியில் கருடசேவை, ஆனியில் திருமஞ்சனம், ஆடியில் பூர உற்சவம், ஆவணியில் அவிட்டம், புரட்டாசியில் சனிக்கிழமை உற்சவம், ஐப்பசியில் தீபாவளி, கார்த்திகையில் தீபவிழா, மார்கழியில் திருவாதிரை, தையில் பூசம்; மாசியில் மகம், பங்குனியில் உத்திரம், சித்திரையில் பௌர்ணமி—இப்படி மாதந்தோறும் ஒவ்வொரு திருவிழா நடத்தி, தலைமுறை தலைமுறையாகப் பழக்கப்பட்ட மக்களிடையே, மே தினவிழா கொண்டாட முற்பட்டிருக்கிறோம்!

''....மற்ற கட்சிக்காரர்கள் மே தினம் கொண்டாடினால், பொருளாதாரக் காரணங்களை மட்டுமே பெரிதும் வலியுறுத்திக் காட்டுவர். அவர்கள், மக்களின் வறுமைக்கும் வாட்டத்துக்கும் காரணம், பொருளாதார யந்திரக் கோளாறு என்று கருதுகிறார்கள். யந்திரக் கோளாறு நிச்சயமாகவே மக்களின் வாட்டத்துக்குக் காரணந்தான்;

''அந்தயந்திரம்தகர்த்தெறியப்பட்டு, மக்களின்வாழ்வை மிருக நிலைக்குக் கொண்டு போகாத புதிய யந்திரம் செய்யப்பட வேண்டியதும் மிக அவசியந்தான். இதை திராவிடர் கழகம் என்றுமே மறுத்ததில்லை. ஆனால், ஏன் இத்தகைய சுரண்டல் யந்திரம் உருவாக்கப்பட்டது? எப்படி?யாரால்? மக்கள் ஏன் இதனைஅனுமதித்தனர்? ஏன் இன்றும் சகித்துக்கொள்கின்றனர்? என்ன கூறி, கஷ்டப்படும் மக்களைச் சுரண்டுபவர்கள், மயக்கியும் அடக்கியும் வைக்க முடிகிறது? என்பன போன்றவைகளை திராவிடர் கழகம் மக்கள் மன்றத்துக்குக் கொண்டுவந்து நிறுத்துகிறது. மற்ற கட்சிகள் இவைகளை எடுத்துக்காட்டுவதில்லை. அச்சம் காரணமாகவோ, அலட்சியத்தின் காரணமாகவோ, அல்லது அவகாசம் இல்லாததாலோ, எக்காரணம் பற்றி மற்றவர்கள் இந்த விஷயங்களைக் கூறாமலிருப்பினும், நாம் இவை மக்களால் சிந்திக்கப்பட்டு, அந்தச் சிந்தனையின் பலனாக அறிவுத் துறையிலே ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய, பொருளாதாரப் புரட்சியினால் மட்டும் புது வாழ்வு கிடைத்துவிடாது என்று நம்புகிறோம். ஆழ்ந்த நம்பிக்கை இது. எனவேதான், நாம், மனிதன் அடிமைப் பட்ட காரணத்தையும், அடிமைத்தனம் எப்படி நீக்கப்படவேண்டும் என்பதையும், நமது பிரச்சாரத்திலே முக்கியப் பகுதியாக வைத்துக் கொண்டிருக்கிறோம். மனதிலே உள்ள தளைகளை நீக்குவது அவசியமான காரியமென்பதை உணர்ந்து, ஐரோப்பாக் கண்டத்திலே, பேரறிவாளர்களான வால்டேர், ரூசோ போன்றோர் அறிவுத்துறைப் புரட்சிக்காக எவ்விதம் பணியாற்றினரோ, அவ்விதமான பணியினையே நாம் புரிகிறோம்.

''பொதுவாகவே நாம் சிந்தித்தால் இந்தப் பணியின் அவசியம் நன்கு விளங்கும். உலகிலே உள்ள கஷ்டங்கள், வறுமை, பிணி, வேலையில்லாக் கொடுமை, பாட்டாளி படும் துயரம் முதலியவை — எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு ஏற்ற வசதி இல்லாததால் உண்டானவையா என்று யோசித்தால், இல்லை என்றே தெரியும்.

''ஆராய்ச்சியாளர்கள்புள்ளி விவரங்களைக் காட்டியே கூறியிருக்கிறார்கள் 'இயற்கை தரும் செல்வத்தை — வசதியைக் கொண்டு, நாளொன்றுக்குச் சராசரி இரண்டு மணி நேரம் எல்லோரும் வேலை செய்தால், எல்லோரும் வயிறார உண்டு வாழலாம்' என்று.

''அவ்வளவு இயற்கைச் செல்வமும், அதனை மக்களுக்கான உபயோகப் பொருள்களாக்கும் பாட்டாளியின் சக்தியும் உள்ளன. இருந்தும் இவ்வளவு இன்னலை, இங்கு மட்டுமல்ல, எங்கும்—இன்று மட்டுமல்ல, பன்னெடுங் காலமாக அனுபவித்து வர வேண்டியிருக்கிறது.

''சாமான்யர்களாகிய நம் காலத்திலே மட்டுமா?

''வீராதி வீரர்கள், சாம்ராஜ்யாதிபதிகள் காலத்திலேயுஞ்சரி, யோக யாக விற்பன்னர்கள், வேத வேதாந்த சிரோன்மணிகள், ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், அஷ்டசித்தியை அறிந்தவர்கள், அரஅரனை அழைப்பவர்கள், ஆத்மஞானிகள், என்போர்களின் நாட்களிலேயும் இந்தப் பிரச்சினை இங்கிருந்ததுடன், இல்லாமை, போதாமை எனும் நோயின் பிடிப்பிலே சிக்கி ஒரு பெருங்கூட்டம் அவதிப்படவும், செல்வத்திலும் சுகத்திலும் ஒரு சிறு கூட்டம் அமிழ்ந்து கிடக்கவுமான நிலைமை இருந்தே வந்தது. இதனை மக்கள் பல காலமாகச் சகித்துக்கொண்டனர்! நம்மால் முடியாது என்றெண்ணி மருண்டனர்! யாராவது இதை மாற்றும் முறையைக் கூற முன்வர



அண்ணா எப்படி எழுதுவார்?

அறிஞர் அண்ணா அவர்கள் காலை மடக்கிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த நிலையில் இருந்து எழுதுவதையே பெரும்பாலும் விரும்புவார்.

தனித் தனித் தாள்கள். கற்றையாக நறுக்கி அடுக்கிக் கொண்டு எழுதிய தாள்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே வருவது தான் அவர் பழக்கம்.

இரவு 12 மணிக்கு மேல் விடியற்காலை 6 மணிக்குள் இடைப்பட்ட நேரத்தில் எழுதுவதுதான் அவருக்குப் பிடித்தமானதாக இருக்கும்.

இடையிடையே பொடியும் தேநீரும்தான் பெருந்துணை.

முதலில் ஆழ்ந்து சிந்திப்பார். எழுத வேண்டியவற்றை நெஞ்சில் ஒழுங்குற சலனமில்லாமல் கணித்துக் கொள்வார். எழுதத் தொடங்கிய பிறகு குழப்பமோ, தயக்கமோ, சோம்பலோ, தூக்கமோ, கைவலியோ எதுவும் கிட்டே வராது.

பேனா பிடித்த அவரது கை— நகர்ந்து கொண்டே இருக்கும் எழுதப் பட்ட தாள்கள் ஒன்றன் மேல் ஒன்றாகக் கவிழ்த்தப்பட்டுவிழுந்து கொண்டே இருக்கும். அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுத்து ஓடிக்கொண்டே இருக்கும். அது கதையானாலும், நாடகமானாலும் அறிக்கையானாலும், கட்டுரையானாலும் எண்ணிய கருத்து இடையீடு இல்லாமல் வெளிப்பட்டவாறு இருக்கும்.

—பரணன்

மாட்டார்களா என்று ஏங்கி நின்றனர்! எந்தக் குறுக்குவழி புகுந்தேனும் இந்தக் கஷ்டத்திலிருந்து நீங்க முடியுமா என்று பதைத்தனர்! ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக் கொண்டனர். என்னென்னமோ செய்தனர் இந்தப் பிரச்னையைத் தீர்க்க. இன்னும் ஓர் முடிவு காணவில்லை. மனிதனுல் இந்தப் பிரச்னைக்கு முடிவு காண முடியாத காரணம் என்ன? அறிவு இல்லை என்று கூறிவிட முடியுமா? பறக்கக்கூட கற்றுக்கொண்டான்! பார் முழுவதையும் பாக்கெட் சைஸ் ரேடியோவுக்குள் அடக்கிவிட்டான். ஆனல் இன்னமும், பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டுபிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை! அறிவுப் பஞ்சம் அல்ல இதற்குக் காரணம். அவனுக்குள் புகுத்தப்பட்ட அச்சம், அவனுடைய அறிவு ஊற்றைப் பாழ்படுத்துகிறது! அதனலேயே அவன் மனம் அலேமோதி நிற்கிறது!

''மனிதன் கஷ்டம் அனுபவித்தபோது மதவாதிகள் அவனது கண்ணையும் கருத்தையும், எந்த உண்மைக் காரணத்தால் மனிதன் கஷ்டப்படுகிருனே அந்தக் காரணங்களைக் காணவொட்டாமல் தடுத்து, கைலாயம், வைகுந்தம், காகுந்தன், காளியாயி, ஜெபமாலே, உடுக்கை, இப்படி வேறு பல பொருள்கள், முறைகள் மீது திருப்பிவிட்டனர். மனிதன் திக்குத் தெரியாத கலத்தைப் போலாஞன்! எனவே தான், அவன் தன் நிலையை மாற்றிக்கொள்ளும் முயற்சியில் தோற்கவேண்டி நேரிட்டது.

வர்க்கப் போராட்டத் தூக்கத்தில் !

''எடுத்துக்காட்டாகஒன்று கூறுகிறேன்: கூலி உயர்வுக்காகவோ, போனசுக்காகவோ ஒரு தொழிலாளர் சங்கம் போராடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அதிலே கிளர்ச்சி வலுக்கிறது. நண்பர் ஜீவானந்தத்தின் வீர முழக்கம் கேட்டு விறுவிறுப்படைகிறுன் பாட்டாளி. கூட்டம் முடிந்து வீடுபோகிறுன். அங்கு என்ன நிலே?

மனேவி:—வேலே கூடத் தான் இல்லேயே, எங்கே போய்ச் சுற்றிவிட்டு வருகிறீர்கள்? மணி பத்து ஆகிறதே!

தொ:—பைத்தியமே! இன்று மீட்டிங்கு.

மனேவி:—அதுதான் இருக்குதே ஒவ்வொரு தினமும்! என்ன சொன்னுங்க?

தொ:—முதலாளி இறங்கி வந்தே தீரவேணும். வர்க்கப் போராட்டம் நடக்கிறது வள்ளி! இதிலே பாட்டாளி வர்க்கந்தானே ஜெயிக்கோணும்?

மனேவி:—என்னமோ, பொன்னியம்மா புண்யத்தாலே, அந்த முதலாளி மனசு மாறி, ஏழைக மேலே இரக்கங் காட்டணும்.

—இதுதான் பேச்சாக இருக்கும்.

''மார்க்சின் தத்துவம், லெனின் முழக்கம், அக்டோபர் புரட்சி, இவையெல்லாம் மேடையில்! வீட்டில் பொன்னியம்மாள் புண்ணியம், முதலாளி மனசு இளகவேணும், இவை பேசப்படும்! தொழிலாளி மனேவியின் மனம் மட்டுமல்ல; தொழிலாளி மனமே கூட, ஜீவாவின் குரலிலே, ஜோஷியின் அறிக்கையிலே, கம்யூனிஸ்டுக் கிளர்ச்சியிலே ஈடுபடுவதைவிட, விநாயகரகவலிலே, விளக்கு வைத்துப் பார்ப்பதிலே, சனிக் கோயில் பூஜையிலே, சோதிடர் சொன்னதிலேதான் அதிகமாக ஈடுபடும். இந்த மனப்போக்குத்தான், சகித்துக்கொள்ளும் தன்மையை, 'நம்மால் என்ன ஆகும்' என்ற சலிப்பை வளரச் செய்துவிட்டது! திராவிடர் கழகத்தாராகிய நாம், மே தினத்தன்று, இந்த மனப்போக்கை மாற்றும் பணிபுரிவதன்மூலம், பாட்டாளிகளின் பிரச்னையிலே மற்றவர்கள் கவனிக்கத் தவறிய, ஆனல் முக்கியமான பகுதியை வலியுறுத்துகிறேம்.''

(அண்ணவின் மே தின விழாப் பேருரை)

ஃ ஃ ஃ

திராவிடர் இயக்கம் சமூகக் கண்ணேட்டத்துடன், பகுத்தறிவு அணுகுமுறையில் எப்பிரச்னையையும் அணுகுவதே அதன் தனித்தன்மை என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டதை அண்ண அவர்கள் எவ்வளவு ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள்!

இந்த முறையை நாம் இன்றும் என்றும் கடைப்பிடிக்கவேண்டும். அண்ணவின் பகுத்தறிவுப்பணி, அய்யா தந்த அறிவுச் சுடரைப் பயன்படுத்த பாதை தவருது நடைபோட்ட பணி. அந்த அறிவுச்சுடரையும், அது காட்டும் ஆரிய அழிவுப் பாதையினையும் அழித்து ஒழிக்கச் சென்ற ஆண்டு இவ்வேளையில் ஆதிக்கச் சக்திகள் எப்படியெல்லாம் ஆட்டம் போட்டன!

இன்றே அவை விளக்கை நோக்கிய விட்டில் பூச்சிகளாகிவிட்டன!

பகுத்தறிவுப் பகலவனின் ஒளியை விட்டில்கள் அழிக்க முடியுமா? காரணம், அய்யா வழியில், அண்ண வழியில் அயராது நடைபோட, எந்த எதிர் நீச்சலுக்கும் தயாரான கலைஞர்களும் கழகப் பட்டாளங்களும் என்றும் களம் நோக்கக் காத்திருக்கின்றனவே!

'காரிருளால் சூரியன் மறைவதில்லை; கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போவதில்லை' என்ற புரட்சி கவிஞரின் வாக்கும் பொய்க்கப்போவதில்லை!

வாழ்க பெரியார்!
வாழ்க அண்ண!
வளர்க அவர்தம்
கொள்கைகள்!

ஒரு விளக்கு எரிகிறது

வழக்கறிஞர் ரகுமான்கான்

"கண்ணீர்த்துளிகளின்" கனவுகளுக்கு கால்கள் முளைக்கவைத்த
காஞ்சித் தலைவனே!

உண்மை அரும்புகளைப் பேசவைத்த உணர்ச்சிக் காவியமே!

எங்களை வசந்தத்தில் தாலாட்டிய ஞானத் தென்றலே!

சமூகக் கொடுமைகளுக்கு எதிராக யுத்தகாண்டம் எழுதிய மகாகவியே!

சனுதர்ம அரக்கியை அழித்தொழிக்க அக்னி வேள்வி நடத்தியவனே!

சேரித் தோட்டத்தில் பூத்த கருப்புரோஜாக்களைப் பூஜித்த மனிதப்புனிதனே

சுயமரியாதைக் கொள்கையின் சுகப்பிரசவத்திற்காக
மருத்துவம் பார்த்த பகுத்தறிவுத் தாதியே!

புதுயுகம் காணப் பூபாளம் பாடிய புரட்சிக் குயிலே!

சுரண்டல் நெடுஞ்சுவரைச் சுக்குநூருக்க புறப்பட்ட சமதர்மப் புயல் மேகமே!

அழுத்தப்பட்ட மக்களின் அபய நிலையமே!

ஆதரவற்ற அனுதைகளின் ஆலய வாசலே!

ஆதிக்கங்களுக்கு எதிராக அக்னி ராகங்களைப் பாடியவனே!

ஜனநாயக தேவதைக்கு முள்கிரீடம் சூட்டாதீர்கள் என மலைப்பிரசங்கம்
செய்தவனே!

எங்களின் துயரங்களுக்காக தனது தோளில் சிலுவையைச் சுமந்த எங்களின்
தேவதூதனே!

இன்று உனது பிறந்த நாள்.

கண்ணனின் பிறந்த நாளைக் கொண்டாடும் கோகுலம் போல—தனது
அண்ணனின் பிறந்த நாளைத் தமிழகம் கொண்டாடுகிறது.

கடல் அலையின் மென்காற்றில் கண்ணுறங்கும் காவிய நாயகனே!

காலநதியால் கரைந்துபோகாத உனது கல்லறையை எங்களின் கண்ணீ
ரால் நீராட்டுகிறேம்.

சந்தனப் பேழையினுள் சப்தமற்று உறங்கும் சரித்திர நாயகனே!

எங்களின் இதயங்களில் வாழும் சிரஞ்சீவித் தலைவனே! நீ ஏற்றிவைத்த
இலட்சிய தீபத்தின் வெளிச்சத்தில் எங்கள் பயணம் தொடர்கிறது.

எதையும் தாங்கும் இதயங்கள் இங்கு இருக்கும் வரை எந்தச் சூறைக்காற்
றும் இதனை அணைத்துவிடமுடியாது.

இங்கே ஒரு விளக்கு எரிகிறது!



அண்ணா வழியில்

கவிஞர் கு. சீத்தா

எத்தனைக் கொடுமைகள் இழிசெயல் கொள்ளைகள்
அத்தனை செய்கின்றீர்! — வெறும்
ஆர்ப்பாட்டம் நெய்கின்றீர்! — அட!

எத்தனைக் கொடுமைகள் எப்படிச் செய்யினும்
ஏற்று வளர்ந்தவர் யாம்! — தீயில்
இறங்கிப் பிறந்தவர் யாம்!

எட்டி உதைத்திட வெட்டித் தொலைத்திட
எம்பிக் குதிக்கின்றீர்! — வீண்
ஏளனம் செய்கின்றீர்! — அட!

எட்டி உதைத்ததை ஏணியாய்ச் செய்துமேல்
ஏறி மகிழ்ந்தவர்யாம்! — மக்கள்
எண்ணத்தைப் பெற்றவர் யாம்!

கட்டிய குழலினைக் கலைத்திடத் தொலைத்திடக்
கைகளை நீட்டுகின்றீர்! — வெறுங்
கலகத்தைக் காட்டுகின்றீர்! — அட

முட்டிய கோபுரம் சாய்ந்திடு மென்று
முட்டித் தொலைக்கின்றீர்! — மக்கள்
மூளையைக் குலைக்கின்றீர்!

அண்ணா வழியென அந்நா மொழியென
அர்ச்சனை செய்கின்றீர்! — வெறும்
கர்ச்சனை செய்கின்றீர்! — அட

அண்ணா வழியென உதயசூ ரியனை
அணைத்து நடக்கின்றோம்! — மக்கள்
அன்பினிற் திளைக்கின்றோம்!

அறிவுக் கடல்!

உலக அரங்கத்தில்
உவகைத் தமிழ்ப்பண்பைச்
சிறப்புற அரங்கேற்றிய
சீர்மிகு ''நட்டுவனார்''
நாவன்மைக் கலப்பையால்
நானிலத்துப் பெருவயலில்
நாத்திக நற்பயிரை
நாட்டுவித்த 'சொல்லேருழவன்'
சிதைந்த நார்களிலும்
சீரழிந்த குப்பையிலும்
கவின்மிகு 'கழகக்கூடு'
கட்டிவைத்த 'தூக்கணாங்குருவி'
வேரின் நார்களும்
கிளையின் இலைகளும்
ஒருங்கே மணக்கும்
ஒப்பற்ற 'துளசிச் செடி''
பகுத்தறிவுச் சிலை சுமந்து
பைந்தமிழர் இழுத்துவர
அவனியெங்கும் பவனிவந்த
தனிப்பெரும் 'திராவிடத்தேர்'
செந்தமிழ் .அலைகளால்
சிந்தனைக் கரைகளை
நித்தமும் தழுவிய
நற்றுத ''அறிவுக்கடல்!''

—வேலூர் மா. நாராயணன்

நாயகனே கண்திறவாய்

தென்னம்பட்டு ஏகாம்பரம்

நெருஞ்சி முள்போல நிலவுகின்ற மக்களிடை
குறிஞ்சி மலராகக் குவலயத்தில் பூத்தவனே!

ஆலமர நிழலாக அன்பார்ந்த இதயத்தைச்
சால விரித்துவைத்துத் தங்கநிழல் தந்தவனே!

முச்சங்க காலத்தை நம்முன்னே காட்டியவன்
நச்சரவுச் சாதிகளை நையப் புடைத்தமகான்

மாற்றார் கருத்தையும் மதித்து, மாற்றார்
தூற்றிய போதும் துவளாத தங்கமகன்!

காந்திய நெறிவாழ்வைக் கடைசிவரை கடைபிடித்து
சாந்தியுரு தலைவனாய் தமிழகத்தை ஆண்டவனே!

போகிகள் அரசியலில் புகுந்தாடும் இந்நாளில்
யோகியாய் வாழ்ந்திந்த ஞாலத்தை வென்றவனே!

நெருப்பாற்றில் நீந்திவரும் நெஞ்சுரக் கலைஞரின்
அருந்திறனைப் பாராட்ட அண்ணாநீ வாராயோ!

சந்தனப் பேழையிலே கண்ணுறங்கும் எங்கள்
நந்தா மணிவிளக்கே! நாயகனே கண்திறவாய்!

அமைதிக் கடல்

சொல்லாலே மட்டுமின்றிச் சொந்தத்தில் நாடாண்டு
சோர்வின்றி உழைத்த தலைவன்!
சொத்தையென வாழ்ந்தவரைச் சிங்கமென வீறுபெறச்
செய்திட்ட வீர மறவன்!
நெல்லுக்குள் மணிபோலே நேர்மைக்கு வரைபோலே
நிறைந்திட்ட அன்புத் தமிழன்!
நீதிக்கு நிகராக நிலவுக்குக் குளிராக
நிலவிட்ட இயற்கைப் புலவன்!
கல்லான மனத்தாரைக் கரைக்கின்ற திறன்பெற்ற
கரும்பான சொல்லின் அழகன்!
கணக்கற்ற பொருள்கள்தருங் கவிஞூர்ந்த தமிழென்னுங்
கனிதந்த பேர றிஞனே!

வாயென்னுங் குழலாலே வண்டமிழின் இசைமீட்டி
வண்டாகத் திரிந்த கலைஞன்!
வறியோரின் வாழ்வினிலே வளங்காண நாளெல்லாம்
வகைதேடி அலைந்த தலைவன்!
நோயான கொடுமையினால் நொந்துவிழுந் தமிழர்க்கு
நொடிக்குநொடி மருந்தா னவன்!
நோஞ்சையுற்றுத் தமிழ்மக்கள் நொந்துமணம் வேகையிலே
நாவாயாய்க் கரையேற் றினன்!
தாயெனவே தமிழர்க்குத் தனியன்பு செலுத்திட்ட
தங்கமணந் தான்னெற் றவன்!
தாரணியில் இணைகூறத் தகுந்தமொழி வே றில்லாத்
தமிழ்தந்த பேர றிஞனே!

காஞ்சியிலே தான்பிறந்து கர்வமின்றித் தான்வளர்ந்து
காசினியிற் சிறந்த புனிதன்!
கருணையுடன் அன்புளமுங் கட்டுப்பாடுங் கண்ணியமுங்
கடமையுடன் தந்த மனிதன்!
வாஞ்சியெனத் தமிழர்க்கு வகையாக விளங்கிவந்த
வற்றாத அன்புத் திருவே!
வண்டமிழர் உரிமையுடன் வளம்பலவும் பெற்றிடவும்
வாழ்வெல்லாம் உழைத்த தலைவன்!
பாஞ்சாலங் குறிச்சிதந்த பார்புகழுங் கட்டபொம்மன்
படிநிகராய் வந்த மறவன்!
பல்வளமும் பலபுகழும் பெற்றிலங்குந் தமிழ்தந்த
பார்புகழும் பேர றிஞனே!
தென்னாட்டுக் கடலினிலே தெளிவுடனே மூழ்கியதால்
தேர்ந்தெடுத்தஆணி முத்து!
வெவ்வரையும் நண்பரெனத் தெளிவுபெறச் செய்கின்ற
தென்னவரின் மானச் சொத்து!
பொன்பாண்டம் அடுப்பேற்றிப் பொருள்செய்ய
முடியாப்போற்
பொலிகின்ற பல்லோ ரிடையே
பொறுமையின் அணியாகப் பூண்டிங்கு வாழ்ந் துவந்த
பொங்காத அமைதிக் கடலே!
மண்பாண்டம் எனவந்து மக்களுக்குப் பயன்தந்து
மலர்ந்திட்ட அன்பு மலரே!
மொழிகளிலே சிறந்திருக்கும் மணியான தமிதந்த
மலரண்ணா பேர றிஞனே!

அண்ணாவின் தீர்க்க தரிசனம்

மு. நமசிவாயம்

அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு கழகமும், கழக ஆட்சியும் கலகலத்துவிடும் என்று மாற்றார் பலரும் மனப்பால் குடித்துக் கண்ட பகற் கனவு அனைத்தும் பொய்யாகிப் போய்விட்டது. அண்ணாவின் வழியில், அவர்தம் நல்லதம்பி கலைஞர் கழகத்தைக் கட்டிக் காத்தது மட்டுமல்ல, நிலையான ஆட்சியினையும் திறம்படத் தொடர்ந்தார்.

அண்ணாவிற்குப் பிறகு கலைஞரா? எனும் கேள்வி ஏதோ ஒருசிலரது மனத்தில் குடைச்சலைச் சிறிதுகாலம் ஏற்படுத்திக் கொண்டு இருந்தது எனினும் கலைஞரது ஆட்சித் தேரோட்டத்தின் நற்பாங்கினையும் கழகத்தை நடாத்தி வந்த அருந்திறனையும் கண்டு மெச்சிடத்தான் செய்தனர். மனக்குடைச்சல் பட்டவரும் கூட சில காலம் கடந்து கலைஞருடன் ஒட்டி உறவாடத் தவறவில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் எத்தனையோ கருத்துக்களை, மிகவும் தீர்க்கதரிசனத்தோடு மிகவும் முன்கூட்டியே தெரிவித்திருக்கிறார். அவைகளைத் திரட்டித் தொகுத்தால் தனிப் பெரும் புத்தகமாகவே ஆகிவிடும். இப்போதைக்குக் கழகத்தில் தமக்கு அடுத்த இடத்தைப் பெற்றிடும் தகுதி, தம்பி கருணாநிதிக்கே உண்டு என்பதை அண்ணா அவர்கள், அவரது வாழ்நாளில் பல முறை, தனிப்பட்ட முறையில் மட்டும் அல்லாது பொது மேடைகளிலும், ஏன்? தமது கச்சிதமான எழுத்திலும்கூடப் பட்டவர்த்தனமாகக் குறிப்பிட்டதை மட்டும் நினைவுகூர்வதுடன் நிற்கிறேன்.

மும்முனைப் போராட்டம் (1953) நடந்தபோது, தனிக் களமான டால்மியாபுரம் போராட்டத் தளபதியாக கலைஞரை நியமித்தார் அண்ணா. சென்னை மாநகராட்சியினைக் கழகம், 1959ஆம் ஆண்டு பிடித்து வெற்றி வாகை சூடிய போது, அந்த வெற்றிக்கு உறுதுணைவன் — தளபதி எனக் கலைஞரைப் பாராட்டி கடற்கரைக் கூட்டத்தில், கணையாழியை அணிவித்த காட்சி — எதற்கு அத்தாட்சி?

"என் மனைவிக்காகக்கூட கடைக்குச் சென்று எதையும் வாங்காத நான் தம்பி கருணாநிதிக்குப் பொருத்தமான கணையாழியை வாங்குவதற்காக கடைகடையாக ஏறி இறங்கினேன்." என்றும் சொல்லி அண்ணா அவர்கள் கடகற்கரைக் கூட்டத்தில் பேசிய பேச்சும் பெருமிதமும் காற்றோடு கலந்துபோய்விடவில்லை. "நம் நாடு" "மாலைமணி" இதழ்களில் அச்சேதியை, இன்றைக்கும் படித்துக் களிக்கும் வாய்ப்பு உள்ளது.

பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைக்கப் பட்டிருந்தபோது கலைஞர் கருணாநிதியை நேரில் சென்று பார்த்தார் அண்ணா! அன்று மாலை பாளையங்கோட்டையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசும்போது "தம்பி கருணாநிதியைப் பாளையங்கோட்டைச் சிறையில் பார்த்த நிகழ்ச்சியை மறக்கவே முடியாது — எனது வாழ்நாளில் நான் செய்த "புனித யாத்திரை" என்று குறிப்பிட்ட வாசகங்கள் ஒப்புக்காகக் கூறப்பட்டவை என ஒதுக்கிவிட முடியுமா?

கலைஞர் கருணாநிதி அவர்கள் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் (1965), தருமபுரி சட்டமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. கழக வேட்பாளர் வெற்றி வாய்ப்பினை இழந்தார்.

"இந்தத் தோல்வி — தருமபுரி இடைத்தேர்தல் தோல்வி, தம்பி கருணாநிதி மட்டும் சிறையில் இல்லாமல் வெளியில் இருந்தால், ஏற்பட்டேஇருக்காது இதைக் கருத்தில் கொண்டு தான் காங்கிரஸ் ஆட்சியினர், கருணாநிதியை இடைத் தேர்தல் காலத்தில் சிறையிலிட்டு, தேர்தல் முடிந்ததும் விடுதலை செய்துவிட்டனர் போலும்" என்று "காஞ்சி" இதழில், தம்பிக்கு மடல் தீட்டும்போது அண்ணா அவர்கள் நெஞ்சம் நெகிழ்ந்து குறிப்பிட்டதைப் படிக்கும்போது கண்கள் குளமாகிவிடுகின்றனவே!

தேர்தல் சூறாவளிச் சுற்றுப் பயணத்தின்போது தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் அண்ணாவும் கலைஞரும் பேசும் கூட்டம். எப்போதும் கூட்ட முடிவில் பேசும் அண்ணா அவர்கள் அன்று முன்னதாகப் பேசிவிட்டுத் தாம் விட்டதைத் தொடர்ந்து 'இட்டு' நிரப்பும் பணியினைக் கலைஞர் கருணாநிதியிடம் ஒப்படைத்து விட்டுத் தமது சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்தார். மன்னார்குடிப் பொதுக் கூட்டத்தில் பேசிய அண்ணா அவர்கள் மிகவும் வெளிப்படையாகவே "எனக்கு அடுத்த பணியைத் தொடரப்போவது கருணாநிதிதான்" என்பதை மக்களிடம் நேரடியாகச் சுட்டிக் காட்டினார்.

தமிழகத்தின் புதிய வரலாற்றினைப் படைக்கும் பொறுப்பினைத் தி. மு. கழகம் மேற்கொண்டுள்ளது. அதன் முன் பகுதியினை நான் உங்கள் முன் சித்தரித்துக் காட்டினேன். புதிய வரலாற்றின் அடுத்த பகுதியை — நான் விட்ட இடத்திலிருந்து தம்பி கருணாநிதி தொடர்ந்து சித்தரித்துக் காட்டுவான் — தொடர்ந்து கேளுங்கள்". என்பதுதான் அண்ணாவின் மன்னார்குடிப் பேச்சின் முத்தாய்ப்பு! இதயத் தீர்க்க தரிசனத்தின் வெளிப்பாடு!

மன்னார்குடிப் பொதுக் கூட்டத்தில் மக்கள் மன்றத்தில், தாம்விட்ட இடத்திலிருந்து தமிழகத்தின் புதிய வரலாற்றினைத் தொடரும்படி அறிஞர் அண்ணா அவர்கள் கலைஞரிடம் பணித்தார் அந்தக் கட்டளை வெறும் வார்த்தையாகிப் போய் விடவில்லை 1969-ஆம் ஆண்டு நம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு வங்கக் கடலோரம் மீளாத் துயில்கொள்ளச் சென்றதின்மூலம் மெய்ப்பித்தும்விட்டாரே!

அண்ணாவின் தீர்க்கதரிசனத்தை-விட்ட பணியைத் தொடர்ந்திடும் கட்டளையைத் தம்பி கருணாநிதி தொடர்ந்தான் — பெரியார் வழியில், அண்ணாவின் அடிச்சுவட்டில் — வண்ணமான எண்ணங்களைச் செயல்படுத்திடும் பாங்கினில் ஓய்வறியாப் பெரும் பயணத்தைத் தொடர்ந்தார் — தொடர்ந்து கொண்டே இருக்கின்றான்!

(புகழ் பூத்த கலைஞர் -ஏட்டில்)

தவளையும் 'தவ'களையும்!

சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' என்னும் நாடகம் புதுக்கோட்டையில் நடைபெறுவதாக இருந்தது. முன்னதாகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் முருகு சுப்பிரமணியம் அவர்களின் இல்லத்தில் வந்து தங்கியிருந்தார். அன்று இரவில் நாடகம்.

புதுக்கோட்டைக்கு வந்து, 'பொன்னி' ஆசிரியர் முருகு அவர்களின் இல்லத்தில் அண்ணா தங்கியதை ஒட்டி, நாடகக்குழுவினர் அனைவருக்கும் மதியம் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விருந்து பரிமாறப் பட்டபோது சமையல்காரர் ஒருவர் திடீரென்று துள்ளினார். "என்ன என்ன?" என்று எல்லாரும் கேட்டனர். அண்ணா அவர்களும் நிமிர்ந்து பார்த்தார்.

"ஒன்றுமில்லை ஒரு 'தவக்களை' துள்ளி ஓடியது!" என்று அலறினார் அந்தச் சமையல்காரர். அவருடைய அலறலில் சேதம்; கையிலிருந்த குழம்பு. ஆனால் யார் மீதும் படவில்லை. தரையில் கொட்டி விட்டது.

"அது என்ன துள்ளி ஓடியது?" என்று அண்ணா புன்னகையுடன் அந்தச் சமையற்காரரைக் கேட்டார். அண்ணாவின் எதிரில் குழம்பைக் கொட்டி விட்டோமே என்று குழம்பிக் கொண்டிருந்த சமையற்காரர் மிகவும் பயத்துடன் "தவக்களை'!" என்றார்.

தவளையை தவக்களை என்பது அந்த வட்டார வழக்கம். ஆனால் இந்தச் சொல்லில் ஒரு நயம் கண்டது அண்ணா அவர்களின் ரசனைப் பழக்கம்.

"தவக்களை. . . தவக்களை" என்று தமக்குத் தாமே சொல்லிப் பார்த்துக் கொண்டார் அண்ணா. உடனே, எம். என். கிருஷ்ணனை அருகே அழைத்தார்:

"நினைவிலிருக்கட்டும். நான் காகப்பட்டராக உட்கார்ந்திருக்கும் போது ஞாபகத்துடன் சொல்லவேண்டும். தவக்களை—அதாவது தவக்"களை" இருப்பதாகச் சொல் கிருஷ்ணா!" என்றார் அண்ணா.

அன்று மதிய உணவின் போது தவளை துள்ளித் தவக்களையாக வந்த சொல், இரவில் "தவக் களை" யுடன் பயன்பட்டதை அன்று எல்லாரும் ரசித்தனர்.

ச. தே.

அண்ணு ஓர் அபூர்வ ராகம்

— சா. கணேசன்

வெப்பத்தின் அழுத்தத்தில் வியர்வை முத்துக்கள் விளையாட ஆரம்பிக்கிறபோது கருமேகங்கள் சூழாவிட்டாலும் கனமழை உறுதி என்றே நம்புகிறோம்.

உலர்ந்துபோன காய்களான கண்களிலிருந்து உப்பு நீர்ப்பூக்களான கண்ணீர் அருவி, உவர்க் கோடுகளை உருவாக்கி விடுகிறபோது பூவும், பிஞ்சுமான புதிய சிரிப்புக்குப் பாதைகள் உண்டாகின்றன என்று நம்பிக்கை கொள்ளுகிறோம்.

ஓரிடத்தில் உண்டாகின்ற வெற்றிடத்தின் அழுத்தம் மற்றொரு இடத்தில் புயற் காற்றை உருவாக்கி விடுகிறது.

நிலத்தடி நெருப்பாற்றில் எங்கோ உண்டாகின்ற அனங்கல்கள், மற்றொரு இடத்தில் பூகம்பக் குலுக்கலை உருவாக்கி விடுகின்றன.

பூமிப்பந்தில் உண்டாகி விடுகிற மானிடப் பாரம் பூதலத்தின் அடிவயிற்றில் நோக்காடுகளை உண்டாக்கி சரிவுகளை, சரித்திர விபரீதங்களை உருவாக்கி விடுகிறது.

இயற்கையில் நடக்கிற இந்த இரசவாத மாறுதல்களே அரசியல் களத்திலும், சரித்திர வீதிகளிலும் வரலாறு எழுதப்படாத காலந் தொட்டே நடந்து வந்திருக்கிறது.

அமெரிக்க மண்ணில் கறுப்பு மலர்களின் கண்ணீர் துடைக்கிற காவல் தெய்வமாக ஆபிரகாம் லிங்கன் உயர்ந்ததற்கும்—

சோவியத்து மண்ணில் குருத்தெலும்பு தேயப் பாடுபட்டும், வாழ்வில் வசந்தத்தையே காணுமல் குருணை அரிசியாய் நொறுங்கிப் போன மக்களின் விடியலுக்காக ஏங்கியபோது மாவீரன் லெனின் வளர்ந்ததற்கும்—

முடக்குவாதப் பொருளாதாரக் கொள்கைகளால் சென்யாட்சென் காலத்திலிருந்து ஒடுங்கிப்போன சீன தேசத்தின் முகத்தில் உருவான அம்மைத் தழும்புகளை அழித்து எழுதுவதற்காக அக்கினி கக்கி வந்த மாசேதுங் எழுந்துநின்றதற்கும் இவையேதான் காரணங்கள்.

மூடப்பழக்க வழக்கங்களாலும், முனைமுறிந்துபோன சம்பிரதாயச் சாவோலைகளாலும் வக்கரித்துப் போன தமிழ்ச் சமுதாயத்தின் இரவுப் பொழுதுகள் விடியலையே கண்டுகொள்ளாமல் நீண்டபோது 'ஏ! தாழ்ந்த தமிழகமே' என்று தட்டிக் கேட்டு நம்மைத் தலைநிமிர வைக்க வந்த தலைமுறைகளின் தலைவர் அறிஞர் பெருந்தகை அண்ணு அவர்கள்.

அண்ணுவின் வருகை ஒரு வரலாற்றுத் திருப்பம்!

அண்ணுவின் வளர்ச்சி ஒரு காலத்தின் கட்டாயம்!

அறிஞர் அண்ணு குழந்தையாக இருந்து தொட்டிலில் உறங்கிய போது இருந்த கோயில்களைவிட அவரது புழ்க உடம்பு மக்கள் வெள்ளத்தில் மிதந்தபோது கோயில்கள் அதிகமாகவேயிருந்தன. ஆனுல் கோயிலுக்குச் செல்கின்ற கூட்டம் குறைவாகவே இருந்தது.

அண்ணு எழுதத் தொடங்கிய காலத்தில் நாள் நட்சத்திரம் பார்க்கின்ற வழக்கம் இளைஞர்களிடத்தில் நிறைந்து இருந்தது.

அண்ணுவின் எழுதுகோல் எழுதி ஓய்ந்த நேரத்தில் நாள் பார்த்தல், நட்சத்திரம் காணுதல், ஜோதிடம் சொல்வதை நம்புதல் முதியவர்களுக்கே சொந்தம் என்கின்ற நிலை முகிழ்த்தது.

தன்மானப் பெரியாரின் தடம்புரளா வழிவந்த தகைமைசால் அண்ணுவின் வாழ்வுச் சரித்திரம் குவித்துவைத்த சாகாத சரித்திரக் குன்றுகள்.

சொலல் வல்லன் சோர்விலன் அண்ணு! வெல்லத் தமிழ் காக்க வெங்களங்கள் பல கண்ட அண்ணு!

செங்காவிச் சிரிப்புக்குள் செகத்தையெல்லாம் சிறை வைத்த அண்ணு!

புவனத்தின் புகழேட்டில் தமிழ்நாட்டைப் பொறித்திட்ட திருப்பனுவல்!

பூந்தாது வாரிவரும் பொதிகை மலைத் தென்றல்!

பூப்பூத்த விழியெல்லாம் புதுக்கவிதை பாடி வரும் வானம்பாடி!

எங்கள் அடிமை இரவுகளின் விடிவை அறிவிக்க விடியல் பாடிய ஆலோலம்!

எங்கள் கோடைகளின் வசந்தம்! எங்கள் அரேபியப் பாலைவனங்களின் அழகு சொட்டும் இனிய சோலை!

அண்ணுவின் இனிய பேச்சு அகிலத்தையே வென்றது. ஆம் அது அவனியையே ஆண்டது

நுங்கும், நுரையுமாகப் பொங்கி வருகிற பெருவெள்ளம், சமவெளிப்பரப்பில் சீராகப் பாய்ந்து சங்கீத நீரோடைபோல் சலசலத்து, கூழாங்கற்களோடும் குலவிக்கொண்டு, நாணல்களைக் கண்டும் நடமிட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு ஒசிந்து ஒசிந்து நடக்கின்ற ஒய்யாரப் பெருநதி அறிஞர் அண்ணுவின் பேச்சு!

அறிஞர் அண்ணுவின் இனிய தமிழ்ப் பேச்சு ரஞர் ஒழுங்கான சங்கீதக்காரனின் உச்சமான கச்சேரி!

விரலோடு கதை பேசும் வீணையின் விசும்பல்!

அது சிவகாசி மத்தாப்பின் சிணுங்கல் அல்ல; உயர்ந்து எரிகிற திருவண்ணுமலைத் தீபம்.

அறிஞர் அண்ணுவின் பேச்சு நாடக மாந்தரின் நளினமான உணர்ச்சி வெளிப்பாடுகள் அல்ல; மாருக அலைகளுள்ள ஆழமான பசுபிக் சமுத்திரம்.

சுறுமீன்களின் சுழற்சிக்கு ஆளாகாத அட்லாண்டிக் பெருங்கடல்.

அரசியல் தோட்டத்தில் செடிகளின் இடையில் முளைத்த ஒரே ஆலமரம்!

அறிஞர் அண்ணுவின் வருகைக்குப் பிறகுதான் தமிழ் முழக்கு மேடை மதிப்புக் கிடைத்தது. காரணம் புலவர் மத்தியில் உலவிய சங்க இலக்கியங்களை பாமர மக்களிடையில் நடமாட விட்டார். எதுகையும், மோனையும் (ழில் நடம்புரிந்தன.

எழுத்திலோ மன்னன். பேச்சிலோ அவர் பேராசான். அரசியலில் அவருக் கிணையாக அவராகவே விளங்கினுர். ஆட்சி நிர்வாகத்தில் அவர் ஒரு புதுமையாளன்.

இவை எல்லாவற்றையும் விட ஓர் இனிய சிறப்பு அந்த ஏந்தலுக்குண்டு!

இந்த பூமியை வெளிச்சக் காடாக்கிவிட்டு விண்ணில் சுற்றிவரும் சூரியன் மட்டுந்தான் மண்ணுக்காக தனக்கொரு வாரிசை விட்டுச் செல்கிறது.

சீனத்தைச் சிவப்பாக்கியவனும், சோவியத் மண்ணில் குருதித் துளிகளால் கோலமிட்டவனும்கூட தனக்குப் பின்னுல் தன் பெயரை உச்சரிக்கும் ஒருவனை வாரிசாக்கவில்லை.

ஆனுல், அண்ணு, விடிய... இரவுகளை விடிய வை...; அந்தப் பேரறிஞன் தனக்குப் பின்னுல் தன்னை ஒத்த ஒரு தலைவனை — கலைஞரை இந்த மண்ணுக்குத் தந்துவிட்டு மண்ணுக்குள் போனுர். அந்தப் புல்லாங்குழல் உடைந்துவிட்டாலும் அதன் ராகங்களை இங்கே ஒருவன் எதிரொலிக்கிருன்!

வணங்கிடும் எங்களை வாழ்த்திடு அண்ணு!

எங்கள் அண்ணனே!
வங்கக் கடற்கரை நோக்கிக் கைகளைக் குவிக்கிறேம்—வணங்கிடும் எங்களை வாழ்த்திடு, அண்ணு!
இன்பத் தமிழகத்துக்கு, நீ பெற்றெடுத்துத் தந்த 'கழகம்' தனது இருபத்தொன்பதாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது!
ஆம்! அன்று நீ சட்டமன்றத்தில் சொன்னபடியே, கழகம் தனது 'அடிகளை' அளந்தே எடுத்து வைக்கிறது!
தடைபல கடந்து தனது 'இலட்சியப் பயணத்'தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது;
தமிழ்மகன் நீ தந்த அறிவு மணிக் கருத்துக்கள் ஒளி நல்கி, வழி காட்டிக் கொண்டிருக்கின்றன.
அண்ணு! நீ காட்டிய அறவழியில்—அமைதி வழியில் அடையாளங் காட்டிவிட்டுச் சென்ற அன்புத் தலைவன் எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிருன்; எங்களுக்கு நாடோறும் உன்பாடம் நடத்திக் கொண்டிருக்கிருன்.
பாசம் கொட்டிப் பாசறை கட்டித் தந்தாய்; பழிகள் சுமத்திப் பாவிகள் வீழ்த்திட எண்ணினர்.
பயிற்சிபெற்றது உன்னிடமல்லவா? துணிந்தார் கலைஞர்!
பயிரிடை வளர்ந்த களைகளை நீக்கி, ஆயிரங் காலத்துப் பயிராம் கழகம் காத்தார்! உனக்குப் பெருமை சேர்த்தார்!
''இயக்கம் கண்ட தலைவருக்குப் பிறகும், அவ்வியக்கம் நின்று நிலைபெற வேண்டும்; அதில்தான் அந்தத் தலைவரின் பெருமை அடங்கியிருக்கிறது.''
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவே!
நீ தந்த இலக்கணத்திற்கு நீயே இலக்கியமானுய்!
அண்ணனே!
மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை இயம்பினுய்! 'மனிதத் தன்மை' முழுமைபெற நாளும் உழைத்தாய்!
மக்களாட்சியைச் சிதைத்து, மனிதத் தன்மையை மாய்த்து, சர்வாதிகாரப் படுகுழியில் தள்ளினர் இந்நாட்டை, ''ஆண்டவர்கள்'
'பதவிச்சுகம் பரம்பரைச் சொத்து' என்று பாரதிர முழக்கினர்!
இந்நிலை கண்டு கொதித்தெழுந்தது கழகம்;
இனிய 'மக்களாட்சி காப்போம்' என முதற்குரல் கொடுத்தது கழகம்!
பதவியைத் துச்சமென மதித்தோம்; 'இயக்கப் பாரம்பரியம்' காத்தோம்;
'பண்பாளர் அண்ணு வழி நடக்கும் ஒரே இயக்கம்' எனப் புகழ் பூத்தோம்!
சர்வாதிகார 'ஆண்டவர்களுக்கு' வெண்சாமரம் வீசி, அடிமை வாழ்வுக்குத் துணைபோன துரோகக் கும்பலுக்கு உன் பெயர் சொல்ல அருகதை உண்டா?
இலங்கைத் தமிழர் இன்னலுற்றபோது, உற்ற துணையாய் தமிழ்த் தலைநகரில் மாபெரும் 'கண்டன ஊர்வலம்' நடத்தி உணர்வுகளைக் காட்டினேம்!
உன் உண்மைத் தம்பிகள் என்பதனை உலகுக்கு உணர்த்தினேம்
''அடித்தளத்து மக்கள் வாழ்வு உயரவும், கலை, மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு காக்கவும், அண்ணன் வழியில் அயராது உழைக்கும்போது ஏற்படுகிற சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக் கொள்வேன். எந்தவிதத் தியாகத்துக்கும் தயாராக இருக்கிறேன்''—உனது அருமருந்தன்ன தம்பியின் 'எதையும் தாங்கும் இதயம்' பேசுகிறது, அண்ணு!
அண்ணனே!
உனது புகழ் பாடியே இயக்கம் வளர்ப்போம்;
உனது கொள்கை முழக்கியே தமிழனின் மயக்கம் கலைப்போம்!
'தாழ்ந்த தமிழகம்' தலைநிமிரும் நாள்வரை ஓய்வு—உறக்கமில்லை;
தமிழின உணர்வும் தன்மான உணர்வும் பொங்கி எழும் நாள் வெகு தொலைவிலில்லை!
அண்ணனே! நீ பிறந்த பொன்னுளில் நீ தந்த கலைஞர் மொழியில் உறுதி மொழிகிறேம்.
''தமிழ்ச் சமுதாயம் ஓரணியின் கீழ் நிற்கும்; அந்த அணி தான் தி.மு.க. ஒரு கொடியின் கீழ் நிற்கும்; அதுதான் அண்ணு உருவாக்கித் தந்த கழகக் கொடி.''

ஐயா-அண்ணா அமைத்த அரண்

— சேன

முகிலைக் கிழித்து முகிழ்த்து எழுந்த முழுமதி போல, மூட நம்பிக்கை இருளைக் கிழித்து வெளிப்பட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்.

அந்தப் பகலவனின் ஒளியை இருண்ட தமிழகம் பெறுவதற்கு 'விடிவெள்ளி'யாகத் தோன்றியவர் பேரறிஞர் அண்ணா.

தமிழ் இனம் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழ, தமிழ், கலை, பண்பாடு காத்திட, தமிழனின் உரிமைக்குக் குரல் கொடுத்திட இன்று ஒரே பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இதனைத் தோற்றுவித்தவர் பேரறிஞர் அண்ணா

பெரியாரால் அண்ணா; அண்ணாவால் திராவிட முன்னேற்றக் கழகம்; அந்தக் கழகத்தால் நாம் — இப்படிப் பின்னிப் பிணைந்துள்ளதை எடுத்துக்காட்டுவதுதான் முப்பெரும் விழா.

பெரியாரும், அண்ணாவும், முன்னேற்றக் கழகமும் பிறந்திராவிட்டால், தமிழகம், இன்றுள்ள நிலையை எப்படியிருக்குமா என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஐம்பதாண்டுக்கு முன் சர். பி. தியாகராயரும் டாக்டர் நடேசனும், டாக்டர் டி. எம். நாயரும், பனகல் அரசரும், அடித்தளமிட்ட தமிழ் இனப் பாதுகாப்புக் கோட்டையாம் நீதிக்கட்சிக்கு, வலிவு மிக்க அரணாகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார்.

தகுதி, திறமை என்ற பெயரால் மேட்டுக்குடி மக்களால் மட்டுமே எட்டிப்பிடிக்கப்பட்டு வந்த பதவிகளை, வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதுதான் கம்யூனல் ஜி. ஓ. என்னும் சமூகநீதி ஆணை.

இந்தக் கம்யூனல் ஜி. ஓ. நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் அமைச்சர் முத்தையா அவர்களின் பெருமுயற்சியால்



கொண்டுவரப்பட்டதாகும்.

கம்யூனல் ஜி. ஓ. என்னும் சமூக நீதி ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், தந்தை பெரியார் அவர்கள் அதனை வரவேற்றுப் பாராட்டி எழுதுகையில், "உங்கள் வீட்டில் பிறக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் முத்தையா என்று பெயரிடுங்கள்" என தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இன்று முத்தையா என்னும் பெயருடைய நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களில் பலருக்கு பெரியாரின் வேண்டுகோள்படி இடப்பட்டதுதான் அந்தப் பெயர்.

கம்யூனல் ஜி. ஓ.வை உருவாக்கியதற்காக, அமைச்சர் முத்தையா அவர்களுக்கு நன்றி காட்டும் வகையில்தான் இந்த வேண்டுகோளைப் பெரியார் விடுத்தார். அந்த அளவுக்குத் தமிழர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும் கம்யூனல் ஜி.ஓ. வைதீகமொழியில் இதை கூறவேண்டுமானால் 'இது ஒரு வரப்பிரசாத'மாகும்.

தகுதி—திறமையின் பேரால் உயர்ந்துவிட்ட ஆதிக்க வர்க்கத்தார் இந்தக் கம்யூனல் ஜி. ஓவை எப்படியாவது ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்தனர்.

தந்தை பெரியார் அவர்களின் இடைவிடாப் பிரசாரத்தாலும், முயற்சியாலும் தான் அது பேணிக் காக்கப்பட்டது. பின்னர், நாடு விடுதலை பெற்றவுடன், புதிய அரசியல் சட்டத்தைக் காட்டி, தலைமை நீதிமன்றம் வரை சென்று அந்தச் சமூக நீதி ஆணையை ஒழித்துக் கட்ட 'அல்லாடி' போன்ற வழக்கறிஞர்களெல்லாம் முழு மூச்சாகப் பணியாற்றினர். இறுதியில் வெற்றியும் பெற்றனர்.

அப்போது பெரியாரும் அண்ணாவும் வகுப்புரிமையை நிலைநாட்டப் போர்க் குரல் எழுப்பியதன் விளைவாக அன்று இருந்த அரசு, தமிழர்களின் உணர்வைப் புரிந்து கொண்டு, சமூக நீதி தொடர்ந்து நீடிக்கும் வகையில் ஏற்பாடு செய்தது.

காங்கிரசு ஆட்சிக் காலத்திலும் கழக ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து நீடித்து வந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஏற்பாட்டை, தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் உயிர்க் கொள்கையாக கொண்டிருந்த அந்தத் திட்டத்தைச் சுக்குநூறாக உடைத்தெறிய முனைந்துள்ளது. இன்றைய ஆளுங்கட்சி!

அண்ணாவின் கொள்கை என்ன — கோட்பாடு என்ன என்பதைக்கூடப்புரிந்துகொள்ளாமல், 'அண்ணாயிசம்' என்னும் பேரால் அண்ணா வழியில் ஆட்சி நடத்துவதாகக் அண்ணாவின் கொள்கைக்கே குழிதோண்டுகிறார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 'பெரியார் போற்றிய கம்யூனல் ஜி. ஓ. வைக் காலால் மிதித்துத் துவைத்துவிட்டுப் பெரியாருக்குச் சிலை திறக்கிறார்கள். அவர்களை நாடுபுரிந்துகொள்ள இதை விட ஒரு நல்வாய்ப்பு இருக்க முடியாது.

கம்யூனல் ஜி. ஓ. இல்லையென்றால் நம்முடைய வீட்டுப் பிள்ளைகளெல்லாம் மாடு மேய்த்துக்கொண்டும், சேறு குழைத்துக்கொண்டும் இருக்கும் நிலையைத்தான் இன்றும் காணமுடியும். ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாகவும், நீதிபதிகளாகவும், வழக்கறிஞர்களாகவும், மருத்துவர்களாகவும் பொறியர்களாகவும் இன்று இருப்பவர்கள் இத்தகைய உயர்நிலையை எய்தியிருக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

காங்கிரசுக் கட்சிப் பெருந்தலைவரான காமராசர் உள்பட, இந்தச் சமூக நீதி நீடிக்கவேண்டும் என்று விரும்பியேகாரியமாற்றினர். ஆனால் இன்று வந்துள்ள — அண்ணாவின் வாரிசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் முதலமைச்சரோ சமூக நீதிக்கே குழிதோண்டி, சமூக அநீதிக்கு 'நல் வரவு' கூறுகிறார்.

இந்த அக்கிரமத்தை — நடக்கக்கூடாத இந்த அநியாயத்தை எதிர்த்துக் குரல் கொடுத்து வருகிறார் தமிழின காவலரான கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஐயாவும் அண்ணாவும் இல்லாத இந்த நேரத்தில் தமிழர்களுக்கு — நமது தமிழ் மொழிக்கு — தமிழ்நாட்டுக்கு இருக்கும் ஒரே பாதுகாவலர் கலைஞர்தான் — ஒரே பாதுகாப்பு அரண் திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

முப்பெரு விழா எடுக்கும் இந்நாளில் ஐயா, அண்ணா துயில்கொள்ளும்திக்கு நோக்கி வணங்கிவிட்டு, அவர்களுக்கு நன்றிக் காணிக்கையாக வகுப்புரிமையை நிலைநாட்டிடச் சூளுரைப்போம்; அவர்கள் காட்டிய வழியில் பயணத்தைத் தொடருவோம். அவர்கள் வழங்கிய அறிவுரைகளைக் கடைபிடிப்போம்.

வாழ்க பெரியார்!
வாழ்க அண்ணா!
வாழ்க கழகம்!
வெல்ல கலைஞரின் தொண்டு!

நெருப்பு மின்மினி

— எஸ். அறிவுமணி

அண்ணா!
இந்த மூன்றெழுத்தே எங்களுக்
குப் பிள்ளையார் சுழி!
செப்டம்பர்—15;
காஞ்சி பூமிக்கு பிரசவ நாள்;
கொஞ்சு தமிழுக்கு பிறந்தநாள்
கழகக் கவிதைகள் பிரசுரநாள்;
காஞ்சி அண்ணனே!
இதோ உன் எழுத்துச்சுவடுகளில்
தம்பிகள் நாங்கள் காகிதப் பாலை
வனத்தில் பேனா ஒட்டகங்க
ளேறிப் புறப்பட்டு வருகின்
றோம்; "மிசா"ப் போரில்
சிட்டிபாபுகளின் பிரமிடுகளையே
படிக்கட்டுகளாக்கி பொறுமைப்
பயணம் வருகின்றோம்!

உதட்டுப் பூமியில் புன்னகை மணிக் கதிர்களை
உதய காலத்து வைகறையில் அறுவடை செய்தவனே!
சித்திரக் கனவுகளைச் செந்தமிழ் நாக்குகளில்
சுதந்திரக் கோலமாய்
வாரியிறைத்த கோமேதகக் கவிஞனே!
மானிட தீபங்கள் மண்ணிலே எரிவதற்குப்
பேனாத் திரியை
உன் தந்த விரல்களால் தூண்டி வைத்தாய்;
எழுத்து இரதங்களில் ஏறிவந்தே
எங்களது நரம்புக் கொடிகளுக்குத்
தன்னையே தந்திட்ட
பாரி அண்ணன் நீ!
இருண்ட கண்டத்திற்கு வந்துசேர்ந்த — நீ
ஒரு நெருப்பு மின்மினி;

கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட மூட முடவர்களுக்கும்
நீ ஏணியாகியிருக்கிறாய்!
ஊமையாகிக் கிடந்த குருட்டு நிலவையும்
அரசியல் வானில்
பௌர்ணமியாக்கியிருக்கிறாய்;
உன் மனுநீதி மாளிகையில் ஆராய்ச்சி மணிகளின்
இரும்பு நாக்கு ஒன்றுதான் ஊமையாகிக் கிடந்தது;
ஆனால்
இன்று எங்கிருந்தோ வந்த சில கூவம்களும் உன்னை தரிசிப்ப
தாகச் சொல்லி
உங்கக் கடலுக்கு வந்து சங்கமமாக நினைக்கின்றன;
ஆனாலும்.. அண்ணனே!
இந்த நாளில் உன் காஞ்சித்தொட்டிலின்
நிழலை வணங்குகிறோம்; வாழ்த்திடுவாய்!

மாநில சுயாட்சி முழக்கம்!

மாநில சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது ''இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும்; நாட்டுக்குப் பெருத்த ஆபத்து வரும்'' என்று கூறுகின்றனர். இது பற்றிய எனது விளக்கத்தைக் கூறுமுன்பு அவர்களிடம் பணிவன்போடும், உறுதியோடும் கேட்டுக்கொள்வேன்:

நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும், நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும்—வழிகாட்டும் திறமையும் உங்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்று நினைத்துப் பேசிட முழு உரிமை யாரால் எந்தக் காரணத்தால் எப்போது உங்களுக்கு அளிக்கப்பட்டது?

குழந்தை தெருவில் சென்றால் கார் வந்து மோதிவிடும்; அதற்கு ஆபத்துவரும் என்று உணர்ந்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றிட எல்லோருக்கும் உரிமையுண்டு; தேவையுமுண்டு. ஏதோ நாங்கள் பாதை தவறியவர்கள் போலவும் அவர்கள்தான் காப்பாற்றும் உரிமை படைத்த பாதுகாவலர் போலவும் பேசுவது ஏன்?

காங்கிரஸ் தலைவர்கள் இப்படிப் பேசுவது 15 ஆண்டுகளுக்கு முன் அனுமதிக்கப்பட்ட தவருக இருக்கலாம். 20 ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு இவையெல்லாம் புரியாத காரணத்தால் சரி என்று கூறி ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் விழிப் படைந்த இந்தக் காலத்தில்கூட அப்படிப் பேசுவது—ஆணவத்திற்கு எடுத்துக்காட்டு என்றுதான் உலகம் கருதும். காங்கிரஸ்காரர்களைத் தவிர நாட்டின் மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது பொருளற்றது; பொருத்தமற்றது; ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியது.

ஆனால் மத்திய அரசின் வேலை என்ன? நாடக மேடையில் வரும் இராஜா, மந்திரியை அழைத்து, மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா'? என்று கேட்பானும். அதுபோல் மாதம் ஒரு முறை மாநில மந்திரிகளை மத்திய மந்திரி டில்லியில் கூட்டி, பள்ளிக்கூடங்களில் கல்வி எப்படி இருக்கிறது? காலரா நோய் தடுக்கப்பட்டு விட்டதா? என்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். இப்படி தர்பார் பேச்சுப் பேசும் பொறுப்புதான் டில்லிக்கு இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

மக்களின் சுக துக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர—மத்திய அரசு அல்ல.

மக்கள் மீது அக்கறை இருக்கலாம் மத்திய அரசுக்கு. அது எப்படிப்பட்ட அக்கறை? குடிசைப் பகுதியில் தீ பற்றியதும் மூன்றுவது மாடியிலுள்ள சீமான்—ஏதோ கரும் புகை தெரிகிறதே; பெரும் தீ விபத்து போலிருக்கிறதே என்று கூறுவானே அதைப் போன்ற அக்கறைதான் அது.

ஆனால் குடிசைப் பகுதியில் தீ பற்றியதும் பதறித் துடிப்பவர் யார்? அந்தக் குடிசைக்குப் பக்கத்தில் உள்ள குடிசைவாசிதான். அதைப்போல மாநில அரசினர்தான், மக்களின் குறைகளை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியவர்கள்.

அதிகாரம் தேவைக்கு அதிகமாகக் குவிந்து விட்டதால் என்ன நடக்கிறது? நான் அண்மையில் டில்லி உணவு அமைச்சகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். எனக்குத் தொலைபேசியில் பேசும் சக்தி அதிகம் இல்லையாதலால் எனது நண்பரைவிட்டுப் பேசச் சொன்னேன். உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் ஊரில் இல்லாததால் துணை அமைச்சர் ஷிண்டே என்பவர் பேசினர். கள்ளக் குறிச்சி சர்க்கரை ஆலையிலிருந்து சர்க்கரையை வெளிக் கொணரும் உத்தரவு டில்லியில் இருந்து வராததால் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்ற விஷயத்தை அவருக்குக் கூற முயன்றேம்.

கள்ளக்குறிச்சி என்ற பெயரைப் புரிந்து கொள்ள 15 நிமிடம் ஆயிற்று. பெயரைப் புரிந்து கொள்ள முடியாததற்காக அவர் மீது நான் குற்றம் சாட்டவில்லை. சர்க்கரை ஆலை இருப்பது தமிழ்நாட்டில்; அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் டில்லியில் என்று அதிகாரத்தைப் பிரித்துத் தந்தார்களே அவர்கள்தான் குற்றவாளிகள்.

ஆனால் மத்திய அரசின் வலிவு, அசாமிற்கு அச்சத்தைத் தர—தமிழ்நாடு தத்தளிக்க, கேரளத்திற்குக் கலக்கம் தருவதற்காகத்தான் என்றால் நமது சுதந்திரச் சிந்தனையைச் சிறுகச் சிறுக அழித்து சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத்தான் என்றால்,

நமது கூட்டுச் சக்தியின் மூலம், நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்ரம வலிவைச் சிறுகச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும்.

மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது மொகலாய சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்; ஆனால் இன்று அந்தச் சாம்ராஜ்யங்கள் எங்கே?

சரிந்த சாம்ராஜ்யங்களுடன்—இப்போது இருக்கிற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருத்தப்படுகிறேன். அந்தச் சாம்ராஜ்யவாதிகள்—நமது சாம்ராஜ்யங்களுக்கு அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவுதான் ஏற்பட்டது என்பதைச் சரித்திரமுணர்ந்தவர்கள் அறிவார்கள்.

ஔரங்கசீப் காலத்தில் இருந்த வலிவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான மத்திய ஆட்சியை சரித்திரத்தில் காண முடியாது. ஆனால் அந்தச் சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நமக்கிருக்கிற கவலை எல்லாம் —தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது; அரசியலுக்கு நல்லது; காரியத்திற்கும் உகந்தது. ஆனால் மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும்; மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல.

மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக் கொள்வதால் மாநிலங்கள் பலவீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டுவிடாது.

நாட்டுப் பாதுகாப்புத் தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொள்ளட்டும்.



தற்போதுள்ள அரசியல் சட்டத்தை ஆராய்ந்து மாநில மத்திய அரசுகளுக்குள்ள அதிகாரப் பங்கீடுகளை மாற்றி அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தர வேண்டும். அதற்கான ஒரு குழு நியமித்து ஆராய வேண்டுமென்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் நான் யோசனை தெரிவித்துள்ளேன்.

இன்றைய தினம் மாநில அரசுக்குள்ள வேலை என்ன? மக்களுக்குச் சோறு போடுவது—வேலை வாய்ப்புத் தருவது—தொழில் நீதியை நிலைநாட்டுவது—சுகாதாரத்தைப் பேணுவது—கல்விச் செல்வத்தை வளர்ப்பது போன்ற எண்ணற்ற வேலைகளைச் செய்ய வேண்டியது மாநில அரசு.

பலமான மத்திய அரசு வேண்டும் என்று கூறுகிருர்கள். மத்திய அரசுக்குப் பலம் எதற்காக? அந்தப் பலம் யாருக்கு எதிராக என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்திட வேண்டும்.

பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம்; தனிப்பட்ட அமைப்புக்கு இருக்கலாம்; மாநிலத் துரைத்தனத்துக்கு இருக்கலாம்; மத்தியத் துரைத்தனத்துக்கு இருக்கலாம். ஆனால் அந்தப் பலம் யாருக்காக—எதற்காகப் பயன்படுத்துவது என்பது பற்றி விளங்கிக் கொள்ளாமலும், விளக்கிச் சொல்லாமலும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.

சீனுவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால் நிச்சயம் அந்த வலிவைத் தேடித்தரத் தயார்.

இப்படிக் கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் இருந்து, காட்பாடி சிறுதொழிற்சாலை வரை எல்லாவிதமான சிறு விஷயங்களிலும் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருப்பதன் விளைவு பெரிய விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்பதால்தான் அதிகாரங்கள் டில்லியில் குவிக்கப்படக்கூடாது என்கிறேம்.

ஆகவே வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களேயானல் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்.

மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது.

—அறிஞர் அண்ணா சென்னைப் பேச்சு
(28—7—68)

குமுத விழிகளைக் கொஞ்சம் திறங்களேன்!

ஜே.எஸ். இராசு.பி.ஏ.பிஇடி

அண்ணனே..!
எங்கள் ஆருயிரே..!
அறியாமை எனும் இருளில் மயங்கி
ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து கிடந்தோம்!
அண்ணனாக அவதரித்தீர்..எங்களுக்கு!
ஆனால்..அன்னையாகவே பரிணமித்து,
தூங்கிய எங்களை எழுப்பிவிட்டீர்!
அதட்டியோ..அடித்தோ அல்ல!
அன்னையல்லவா..! மெதுவாகவே எழுப்பினீர்!
உங்களது அன்புக் கரங்கள்,
எங்கள் மேனியில் பட்டதுகூட,
பஞ்சிழை ஒன்றோ..பட்டுத்துணி ஒன்றோ,
காற்றில் பறந்துவந்து பட்டதுபோல்தான் இருந்தது!
'தம்பி' என்று அழைத்ததுகூட,
காதில் தேன் பாய்வது போலவே இனித்தது!
எழுப்பி விடுவதால் மட்டும் தாங்கள் திருப்தி அடையவில்லை!
விழித்தெழுந்த எங்களுக்குத் தன்மான உணர்வைத் தந்தீர்கள்!
தாய்மொழியின் சிறப்பை உணர்த்தினீர்கள்!
நாடி நரம்புகளில்..ரத்த நாளங்களில்,
தாங்கள் ஊட்டிய தமிழ் உணர்வால்,
பனிபோல் உறைந்திருந்த எங்களின் உதிரம்,
பம்பரத்தின் சுழற்சியைப் பெற்றது!
மெல்ல மெல்ல நாங்கள் தமிழர்கள் என்பதை உணர்ந்தோம்!
அத்துடன் முடிந்ததா தங்கள் திருப்பணி..?
இல்லை!
ஆகவே,
அறியாமைப் படுகுழியில்..ஆரிய மாயையில் சிக்கித் தவித்த எங்களை,
மீண்டும் பகுத்தறிவாளர்களாக உருவாக்க முனைந்தீர்கள்!
அப்பணியில் ஏற்கனவே ஈடுபட்டிருந்த
ஈரோட்டுக் கதிரவனின் இளஞ்சூட்டோடு,
காஞ்சி நிலவாம் தங்களின் தண்ணொளியையும் சேர்த்தீர்கள்!
இலையும் தழையும், செடியும் கொடியும்,
மலைபோல் மண்டிக்கிடக்கும் கானகத்தை,
வெட்டிச் சாய்த்து..விலங்குகளைக் கொன்று,
மேடு தட்டி, பள்ளம் தூர்த்து,
உழுது விதைத்து,
ஊருணி நீர்பாய்ச்சுவானே..உழவன்!..அவனைப்போல

தந்தை பெரியாரின் தலைமகனாகிய தாங்கள்,
அறிவுலகத்திற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து,
அகன்று திரண்டு நீண்டு வளர்ந்திருந்த,
அறியாமை எனும் நச்சுமரங்களை
தமிழனின் இதயபூமியிலிருந்து
வேரோடும்..வேரடி மண்ணோடும் வெட்டி வீழ்த்தினீர்கள்!
மனதில் மண்டிக்கிடந்த,
மதம் சாதி மௌடீகம், என்கின்ற,
செடிகொடிகளைக் களைந்தீர்கள்!
வைதீகப் புற்றுகளை நொறுக்கினீர்கள்!
ஏற்றத் தாழ்வெனும் மேடுபள்ளங்களைச் சமப்படுத்தினீர்கள்!
செப்பனிடப்பட்ட நிலமான செந்தமிழர் நெஞ்சங்களில்
நாவெனும் ஏர்கொண்டு உழுது..
'கருத்துக்கள்' எனும் விதை தூவி..
ஆராய்ச்சி எனும் நீர் பாய்ச்சி..
பகுத்தறிவு எனும் பயிர் வளர்த்து..
தமிழனை தலைநிமிரச் செய்தீர்கள்!
அப்பெரும் பணியில் ஈடுபட்டபோது
தாங்கள் சந்தித்த எதிர்ப்புகள் கொஞ்சமா?
எதிர்க்கட்சிகளின் ஏசல்கள்..இழிமொழிகள்..!
மண்டையிலே என்றுமே ஒன்றுமில்லாத மதவாதிகள்
எழுப்பிவிட்ட ஐதீகப்புழுதி..அழுக்காறு..ஆட்சேபம்!
ஆளவந்தார்களின் அகம்பாவம்..ஆர்ப்பாட்டம்
சிறைச்சாலை..சித்ரவதை..அடக்குமுறை..துப்பாக்கி!
இதயத்தை நோகவைக்கும் இழிவான விமர்சனங்கள்!
அம்மம்மா..! அளவுக்கு அடங்குமோ..அவைகள்?

ஆனாலும்,
ஆற்றலரசே..! எங்களின் அண்ணாவே!
பெருமழைக்கும் பேய்க்காற்றுக்கும் அஞ்சாமல்
'மேரு' எனும் இமயம் செம்மாந்து நிற்பதுபோல்,
தாக்குதலுக்கு மத்தியில் தலைநிமிர்ந்து நின்றீர்கள்!
தங்கமென ஒளிவிட்டீர்கள்!
திறமைகளின் திரட்டாகத் திகழ்ந்த எங்கள் திருத்தலைவரே!
எங்களுக்காக எவ்வளவோ உழைத்தீர்கள்!—குழந்தைக்காகத்
தாய் பத்தியம் இருப்பதைப்போல!
இரவெல்லாம் விழித்திருந்து ஏடுபல படித்தீர்கள்!



நித்திரை துறந்து நித்தம் நித்தம் எழுதினீர்கள்
உணவை மறந்து..ஓய்வை ஒதுக்கிவிட்டு
ஊரெல்லாம் உலாவந்தீர்கள்..உரை செய்தீர்கள்!
சுவைசொட்டும் சொல்லேருழவரே!
'அன்பீனும் ஆர்வமுடமை அது ஈனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு' என்ற குறளுக்கு
இலக்கியமாத் திகழ்ந்து,
அன்பெனும் தளையால் அனைவரையும் அணைத்தீர்கள்!
உள்ளம் கவர்ந்த கள்வரே!
உங்களை நாடி ஓடிவந்தனர்; ஒன்று கூடினர் தமிழர்!
உரக்கக் கத்தின சில நடைபாதை ஜன்மங்கள்!
வயிற்றெரிச்சல் அந்த அஃறிணைகளுக்கு!
வழக்கம்போலவே அவைகளை உதாசீனப்படுத்தி,
தமிழனுக்கு அரசியலில் விடுதலை..
சமுதாயத்தில் சமதர்மம்..
பொருளாதாரத்தில் சமத்துவம்..என்ற
உயிருக்கு நிகரான ஒப்பற்ற கொள்கைகளை,
தமிழ் தவழும் தங்கள் தங்கத் திருவாயால்,
'தம்பீ' என அழைத்துத் தந்தீர்கள்!
கொள்கை நிறைவேற குறுக்குவழி தேவையில்லை..
வேட்டு முறை வேண்டாம்..ஓட்டுமுறையே போதும்..
கண்ணியம் தவறாமல்..
கட்டுப்பாடு குறையாமல்..
கடமை ஆற்றுவீர்!..என,
அறிவுரை அளித்தீர்கள்!
அவ்வாறே எங்களோடு,
நாவால்..நெஞ்சால்..நல்லுடம்பால்
நாளெல்லாம் பாடுபட்டீர்..நலம் சேர்த்தீர் நாட்டுக்கு!

அதனால்,
தமிழ்க்குலம் தங்கள் திருவடிகளில் தலைவணங்கியது!
அறுபத்தேழில் அரியணையில் அமரவும் வைத்தது!
சொன்னதைச் செய்து காட்டிய சோபிதமே!
தமிழ் பூமிக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டினீர்!
வரலாற்று ஏடுகளில் வைரங்களால் பொறிக்கப்படவேண்டிய செயலன்றோ,
அது!

'குலம் ஒன்றே' என்று உலகிற்கு உணர்த்தியவன் தமிழன்!
ஆனால்..அந்த நல்ல தமிழ்க்குலமோ,
நாலாயிரம் பிரிவாய்,
ஜாதியெனும் சாக்கடைச் சகதியில் வீழ்ந்ததேன்?
கேட்டீர்கள் பலமுறை!
அதற்குப் பரிகாரம் காணும் வகையில்,
கலப்பு மணச் சட்டம் கொணர்ந்தீர்!
சமுதாய ஒப்புரவுக்கு வழிவகுக்கும் இது சாதாரண காரியமா?
சீர்திருத்தத் திருமணத்தைச் செல்லுபடியாக்கினீர்கள்.
சீறிப் பாய்ந்தவர்களின் சிரங்களைத் தாழவைத்தீர்கள்!
''வீடுகட்டும் பாட்டாளி வீதியிலே தூங்குகிறானே..நியாயமா?
கூடியந்த மாளிகையில் சிலர் கும்மாளம் போடுகிறார்களே..நீதியா?
என்ன உலகமடா..இது ஏழைக்கே நரகமடா'' என்று
'ஓர் இரவில்' வினா தொடுத்தீர்!
அதை எள்ளளவும் மறக்காமல்
ஏழையர்க்கு இல்லங்கள் எழிலாக அமைதற்கு ஏற்பாட்டினைத் தொடங்கினீர்!
''பானையிலே கஞ்சியில்லாததால்
பசலைகள் கலங்கிக் கண்ணீர் சிந்துகின்றனர்..
மறுபுறமோ..வீணர்கள் தின்றதுபோக
மிச்சத்தை வீதியிலே கொட்டுகிறார்கள்..''
இருவிழியில் நீர்பெருக,
இக்கொடுமை ஏனிங்கு எனக்கொதித்தீர்!

எனவே,
பாராள வந்தவுடன் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டீர்..
பஞ்சைகளின் பனித்த கண்ணீரைத் துடைத்தீர்!
அன்னை மொழி வளர்ந்திட,
அகில உலகத் தமிழ்மாநாட்டை
சென்னையிலே கூட்டிச் சிறப்பித்தீர், சிறப்பானீர்!
அமெரிக்கா சென்று..அகிலத்தின் கவனத்தைக்
காந்தம் போல் கவர்ந்தீர்!
அந்நாட்டு மாணவர்களுக்கு
அருங்குறள் கற்பித்தீர்!
இருளில் ஒளியே!..இவ்வாறெல்லாம்
இன்பத்தின் எல்லையில் எங்களை நிறுத்தினீர்!
எவரும் எட்டவே இயலாத உயரத்தில்
தங்களின் புகழ்க்கொடி பறந்தது!
அண்ணனின் புகழை எண்ணி
அகம் மகிழ்ந்து நடமாடினோம்!
அப்பாவிகள்..நாங்கள்!
அந்த..இன்பம்..எழில்..என்றும்
நிலைத்திருக்கும் என நம்பினோம்!
ஐயகோ!
இன்னொலியை எழுப்பும் யாழின் நரம்பு அறுந்ததுபோல..
அலைகடலில் உல்லாசமாகப் பவனிவந்த கப்பல்,
புயற் காற்றால் சிதறியதுபோல..
நிலவின் அழகை ரசித்துக்கொண்டிருக்கும்போது,
அது, சுக்குநூறாக வெடித்துத் தலையில் விழுவதைப் போல...
வானவில்லின் வர்ண ஜாலங்களை அனுபவிக்கும்போது,
அது, பழுக்கக் காய்ச்சிய இரும்பாக மாறி கண்களைக் குத்தியதுபோல..
எங்கள் இதயமே!
ஏன் பிரிந்தீர்..என்ன கோபம்?
தங்களது செவ்வாய் சிந்தும் வெற்றிலை எச்சில் எங்கள் மீது பட்டால்கூட,
அதைப் பன்னீர்த்துளிகள் என்று மதித்து மனம் மகிழ்ந்தோமே!
உங்களது விழியசைவின் பொருள்கண்டு,
வில்லம்புபோல் பாய்ந்து செயல்திறம் காட்டினோமே!
எங்களைவிட்டு ஏன் பிரிந்தீர்?
அப்பாவிகள் மட்டுமல்ல..
ஏமாளிகளாகவும் அன்றோ போய்விட்டோம்!
ஆனாலும்..எங்கள் அண்ணனே!
கண்ணீர் துடைக்கக் கலைஞர் முன்வந்தார்!
உங்களது இளவல்..
எங்களது இளைய அண்ணன் அன்றோ!
தங்களின் வழிநடந்து, தாயகத்தை ஆண்டார்!
தப்பு விதைகள் சில,
தடம் புரண்டன என்பது என்னவோ உண்மைதான்!
ஆனால்..தங்களின் உண்மைத் தம்பியர் எப்போதும் போலவே,
ஏன்..இன்னும் முனைப்பாகவே,..
ங்கள் சொல்வீர்களே,
வண்டுபோல் சுற்றி..
மலர் முகம் காட்டி..
தேன்போல் மொழி பேசி..பணியாற்றிட வேண்டுமென்று;
அவ்வண்ணமே,
கணந்தொறும் சுரும்பென,
கடமையாற்றி வருகின்றனர்..கலைஞரின் தலைமையில்!
ஆட்சி பீடம்..அரசு கட்டில்..இன்று இல்லை!
அண்ணலே! தாங்கள் சரியாகவே கூறியதுபோல்,
'பதவி' தோளில் போட்ட துண்டு!
நாமாக எடுத்தாலும்,
தானாக விழுந்தாலும்,
பெரிய நட்டமில்லை! — காரணம்
சொந்த லாபம் கருதி நாம் ஆட்சியைப் பிடிக்கவில்லை!
ஏற்ற கடமையை இயன்றவரை இயற்றினோம்!
இன்றும் இதய நிம்மதியோடு
எதிர்க்கட்சியாக நற்பணியாற்றி வருகிறோம்!
மென்மேலும் தொய்விலாத் தொண்டிழைக்க
தங்களின் பிறந்த நாளில்
சங்கற்பம் செய்கிறோம்!
சந்தனப் பேழையுள் சங்கமமாகிவிட்ட,
சங்கத் தமிழே!
மின்சினை போன்ற நுண்மணற் பரப்பு..
மெல்ல ஒலிக்கும் கடலலையின் கீதம்..
கலைஞர் ஏற்றிவைத்த அணையா ஜோதி..
விண்ணிலே தோன்றி,
மண்ணை மயங்கவைக்கும் வெள்ளி நிலவு!
இந்த அழகிய சூழலில்,
ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்!
தங்களின் மணிமார்பு உறங்கும் சலவைக்கல்லின்மேல்
வெண்பனித் தூறல் பொழிகிறது..
எங்கள் கண்களிலும் கண்ணீர் பொங்கி வழிகிறது!
பண்பின் சிகரமே..அன்பின் அருவியே!
இன்றுங்களுக்குப் பிறந்தநாள்!
இன்று ஒருபொழுதாவது..
ஒரு நிமிடமாவது..அல்ல..அல்ல..
ஒரு நொடியாவது..
அமுதமே! தங்கள்
குமுத விழிகளைக் கொஞ்சம் திறந்து
எங்களைப் பாருங்களேன்!

உன் பிறப்பு எம் சிறப்பு

கவிஞர் மணிமொழி

பழமை வாதிகளுக்குத்தான்
கண்ணன் பிறந்தநாள்! நாங்கள்
பகுத்தறிவு வாதிகள் எங்களுக்குத்தான்
அண்ணன் பிறந்தநாள்!

அண்ணனே நீ
நேர்மைத் திருவுடையான்
நிழல் பரப்பும் ஆலத்தின் கருணை நெஞ்சன்
கூர்த்த மதியுடையான்
குறளுக்கோர் பொருளாளன்!
மக்கள் மாமன்றில் மாப்புகழை மணந்தமகன்
மக்கள் குரலே மகேசனின் ஆணையென
மதிக்கும் பெருந்தலைவன்!

'தம்பீ' எனவழைத்துத்
தழுவுகின்ற பூவாடை!
தாய்மைக் கரம் நீட்டி
தந்தை தரும் பந்தமுடன்
பாய்ந்துப் பெருகிவரும்
பாசமிகும் நல்லாறு!
ஆய்ந்து தெளிந்தறிந்த
ஆரவாரமற்ற கடல்!

மான மறவர்களின் மறுமலர்ச்சித் திருத்தூதன்!
ஞான விளக்கேற்றும் நல்லறிவுப் பண்டிதர்கள்
தேனீக் கூட்டமெனத் தேடிவரும் மதுமுல்லை!

சாதி மதமழிக்கும்; சாத்திரத்திரை விலக்கும்
நீதிநெறி விளக்கும் நேர்மைத்திறம் தெறிக்கும்
நல்லறிவுச் சுடர்த்தீபம்!

முன்னைப் புகழ்காத்து முத்தமிழில் சுவைசேர்த்து
அன்னைத் திருத்தோளை அலங்கரிக்கும் பெருங்கலைஞன்!
எழுத்தால் பேச்சழகால் ஈடில்லாப் பண்பதனால்
இழுத்துச் சிறையெடுத்து (மக்கள்)
இதயமெலாம் கொலுவிருப்போன்!

அண்ணலே நீ பிறந்தாய் — நாங்கள் உயர்ந்தோம்!
உன் பிறப்பே எங்களுக்கு சிறப்பு!
ஒளிச்சூரியன் பிறப்பால் உலகத் திசைகள் பொலிவதுபோல்
உன் பிறப்பால் நாங்கள் பொலிவடைந்தோம்!

'விழிப்'பை திறந்து எங்களுக்கு
விழிப்பைத் தந்தவனே —நாங்கள்
விழிப்போடு இருக்கும்வரை
உன்னை வணங்கும் உலகத்தை
நாங்கள் சமைப்போம்! இதுவே உன் பிறந்த நாளில்
நாங்கள்
சூள்கொட்டிச் சொல்லும்
சத்தியம்! சபதம்!

எண்ணப் பண்ணையிலே..

சா. கஜேந்திரன்

அண்ணா முதலமைச்சராகப் பதவியேற்ற போது அரசின் சார்பில் உதவியாளராக இருந்தவரும், சுயமரியாதை இயக்க காலந்தொட்டு அண்ணாவின் நண்பருமான திரு. கஜேந்திரன் தம்முடைய எண்ணங்களில் பதிந்த நினைவுகளை விவரிக்கிறார்.—(ஆர்.)

சவானுக்கு ஓர் உறுத்தல்

முற்பகலில் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 'மெயில்' பத்திரிகை நூறும் ஆண்டு விழாவில் கலந்து கொண்ட போது முதலமைச்சர் அண்ணாவைப் பற்றித் தமது சொற்பொழிவில் அவைமுன் குறிப்பிடும் போதெல்லாம் மையஅரசின் அமைச்சர் ஒய். பி. சவாண் அண்ணாதுரை என்றே குறிப்பிட்டார்.

அந்தக் கால கட்டத்தில் 'மெயில்' 'டைம்ஸ் ஆப் இந்தியா' போன்ற பத்திரிகைகள் யாவும் அண்ணாவை முழுப் பெயரிட்டு அழைக்காமல் நல்லவர் உள்ளந்தோறும், திராவிடர் இல்லந்தோறும் நின்று நிலைத்துவிட்ட "அண்ணா" என்ற பெயராலேயே அவரைப்பற்றி செய்திகள் வெளியிட்டு வந்தன என்பது நினைவுகூர்தல் அவசியமாகின்றது.

அன்றைய விழாவில் கலந்து கொண்ட அந்நாள் மைய அரசின் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் கே. கே. ஷா உட்பட மற்ற அனைவரும் உரையாற்றுகையில் அண்ணா என்றே விளித்தனர்.

அந்த உரிமை கலந்த அன்பையும் பெருமை கலந்த உணர்வையும் கண்டு கேட்டு ரசித்து மலைத்தே விட்டார் சவாண்.

அண்ணாவின் பள்ளிப்பிராயத்தின்போது பெல்காமில் நடைபெற்ற அகில இந்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் மகாசபை (All India Non–Brahman congress) யில் மராட்டியரான தாம் தொண்டராகப் பணிபுரிந்த பழைய நினைவு அவருக்குத் தோன்றியிருக்கலாம்.

மாலை இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற சிவாஜி கணேசன் பாராட்டு விழாவில் சவாண் அறிஞர் பெருந்தகையைப் பற்றிக் குறிப்பிடுகையில் "அண்ணா" என்றே கூறிய போது அவையில் நிரம்பியிருந்தோர் அனைவரும் குதூகலித்து ஆரவாரம் செய்தனர்.

குற்றமுள்ள நெஞ்சம்

அண்ணா சிவாஜி கணேசனைப் பாராட்டு முகத்தான் கூறிய அரிய கருத்துக்களில் ஒன்று: 'தமிழ்த்திரைஉலகில் கிழவர்கள் தங்களுக்குரிய வேடங்களை ஏற்காது, இளம் பெண்களைக் காதலிக்கும் கதாநாயகர்களாக வேடம் புனைந்து நடிப்பது பற்றியது.

அவர் அவ்வாறு கூறியதும் மண்டபமே அதிரும் வகையில் கைதட்டல் எழும்பியது.

தம்மைப் பற்றித்தான் அவ்வாறு குறிப்பிட்டுப் பேசினாரென்று கருதிவிட்ட ஒரு நடிகர் குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும் என்பது போல் கோபங்கொண்டு மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல் அண்ணாவின் இல்லத்துப் பக்கம் தலைகாட்டாமலே இருந்தார் சில நாட்கள் வரையில்!

கக்கனை மறக்காத அண்ணா

அண்ணா கோட்டையில் முதலமைச்சர் அறையில் அமர்ந்து காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஓர் முற்பகலில் முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் பி. கக்கன் தொலை பேசியில் அவரோடு தொடர்பு கொண்டு பேசினார்.

தாழ்ப்பட்டோர் பிரச்சினை குறித்து அண்ணாவோடு தாம் பேச விரும்புவதாகவும்அவரை அது சம்பந்தமாக எப்போது பேட்டி காணலாமென்றும் கேட்டார்.

திரு. கக்கன் அப்போதே உடல் நலம் குன்றி நலிவுற்றிருந்தார். அதை மனத்திற்கொண்டு, மாடிப்படிகளேறி முதலமைச்சர் அறைக்குப் போந்து தம்மைக் காண வரவேண்டாமென்றும் பகல் ஒரு மணி சுமாருக்குக் கீழ்த் தளத்தில் சபாநாயகர்அறையில் அவர் வந்து காத்திருந்தால் தாம் மதிய உணவுக்காக தமதில்லம் செல்லும் போது அவரைக் கண்டு பேசிவிட்டுப் போவதாகவும் அவருக்குப் பதிலளித்தார்.

அப்புறம் ஓயாத வேலை.

கோப்புகளைப் படித்துப் பார்ப்பது, அலுவலர்களுடன் உரையாடுவது, பார்வையாளர்களுக்குப் பேட்டி அளிப்பது, அமைச்சர்களுடன் விவாதிப்பது, ஆய பிற அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்ததில் வீடு திரும்பும் எண்ணத்தில் கீழே வரும் போது கக்கனை அண்ணா மறந்து விட்டார்.

நான் அவரை அறவே மறந்து விட்டேன்.

கார் கடற்கரை சாலையில் பறந்துகொண்டிருந்தது.ராணி மேரி கல்லூரியின் அருகில் வந்ததும், 'திருப்பு, திருப்பு; கோட்டைக்கு விடு' என்று காரோட்டி சண்முகத்தைப் பார்த்து அவசர அவசரமாகக் கூறினார் அண்ணா.

அப்போதுதான் திரு. கக்கனைப் பார்க்க வேண்டுமென்பதைமறந்துவந்துவிட்டோமே என்று நானும் துணுக்குறறேன்.

மணி ஒன்னரையாகியிருந்ததால் 'அண்ணா, நாம் வீடு சென்றதும் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவரை வீட்டுக்கு வரவழைத்துப் பேசலாமே' என்று கருத்தறிவித்தேன்.

"அது முறையல்ல கஜேந்திரன்; மாற்றுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவரை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரச்சொல்லிவிட்டு அவரை அரைமணிநேரம் கழித்து வீட்டுக்கு வாஎன்றெல்லாம் அலைக்கழிப்பது சரியல்ல" என்று அண்ணா பகன்றார்.

கோட்டைக்குக் கார் திரும்ப விரைந்தது. கிட்டத்தட்ட ஒருமணி நேரம் திரு. கக்கன் அவர்களிடம் அண்ணா– சபாநாயக்கர் அறையில் தனியாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அண்ணாவின் பாணியில் கலைஞர்

முதலமைச்சர் மு. க. சில காலம் அடிக்கடி அமைச்சர்களுடனும் பிற தோழர்களுடனும் கடற்கரை காந்தி சிலைக்கருகில் மாலை இருண்டு வரும் வேளையில் அமர்ந்து ஓரிரு மணி நேரம் அளவளாவிக் கொண்டிருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அது வெறும் பொழுது போக்குக்காக என்று தொலைவிலிருப்போர் கருதியிருக்கக் கூடும். சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் பலவற்றைப் பேசித் தீர்த்து முடிவு காண கடற்கரை சந்திப்புப் பயன்பட்டுள்ளதென்றால் மிகையாகாது. இது அண்ணாவின் பாணி.

நகைச்சுவை அண்ணாவின் உரையாடலில் ஊடுருவியிருந்தது போலவே நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது இயற்கையாக, இலகுவாக மு. க. அவர்களின் பேச்சிலும் அது தானாகவே இடம் பெறுவது கண்கூடு.

என். வி. என். பொறாமைக்காரரா?

ஒருநாள் அந்தி நேரத்தில் அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த என்னிடம் 'பொறாமைக்காரர் வருகிறார்' என்று கூறினார்.

நான் யார் வந்து கொண்டிருக்கிறார் என அறியாது திகைத்து தூரத்தே நோக்கினேன்.

ஒரு ஒல்லிய உருவம் நடந்து வந்துகொண்டிருந்தது எங்களை நோக்கி. நெருங்கி வந்தபின் அவர் அமைச்சர் என். வி. என். என்பது தெரிந்ததும் முதல்வரை நோக்கி "அவரை ஏன் பாவம் பொறாமைக்காரர் என்று சொல்கின்றீர்கள்" என்று வியப்பு மேலீட்டால் கேட்டேன் (என்.வி (ENVY) என்றால் ஆங்கிலத்தில் பொறாமை என்பதுதானே பொருள். ஆகவே என். வி. என்.ஐ பொறாமைக்காரர்என் பதில் என்ன தவறு என்று என்னை மடக்கினாரே பார்க்கலாம்!

நானும் மற்றவர்களும் என். வி. என். உட்பட விலாநோக சிரித்து மகிழ்ந்தோம்.

பொடிப் போடுதலும்; வைத்தலும்!

அண்ணா பொடி போடுவார். பொடி வைத்துப்பேசுவதிலும் நிகரற்றவராக விளங்கினார். அண்ணாவின் தம்பி பொடி போடமாட்டார். பொடி வைத்துப் பேசுவதிலாகட்டும், இரு பொருள் படும்படி உரையாடுவதிலாகட்டும், வல்லவராக

தெரிந்த முகம்: தெரியாத வழி!

கடலூர் இளம்வழுதி அவர்களின் புதிய இல்லத் திறப்பு விழா நிகழ்ச்சியில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு திருச்சி புறப்பட்டார். அவருடன் கலைஞர் அவர்களும், சி. வி. ஆர், முல்லை சக்தி ஆகியோரும் காரில் இருந்தனர்.

கடலூரிலிருந்து திருச்சிக்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று குறுக்கு வழி என்று யாரோ இளம்வழுதியின் இல்லத்தில் சொன்ன ஞாபகம். இரவு ஆனதினால்—குறுக்கு வழியைப் பிடித்து வேகமாகச் செல்லலாமே என்று திட்டமிட்டனர் அனைவரும். ஆனால் அந்தக் குறுக்கு வழித்தடம் எங்கிருந்து ஆரம்பிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாத இருட்டு!

"யாரையாவது வழியில் கேட்டு விட்டுப் போகலாமே!" என்று அண்ணா சொன்னார். உடனே வழியில் வந்த ஒருவருக்கு அருகில் காரை ஓரமாக நிறுத்தும்படி கூறினார் அண்ணா. காரும் ஒதுங்கி நின்றது.

சிகிரட்டைப் பிடித்தவாறு தம்போக்கில் சென்று கொண்டிருந்த அந்த மனிதர் வெகு சாவதானமாகப் புகையை ஊதி விட்டு நின்றார்.

இடப்புறமாக அமர்ந்திருந்த அண்ணா தலையை வெளியே நீட்டி, "திருச்சிக்கு இப்படியே ஒரு குறுக்கு வழி இருக்கிறதாமே—அது எங்கே ஆரம்பிக்கிறது?" என்று கேட்டார். இந்தக் குரலைக் கேட்டுத் திரும்பிய அந்த மனிதர் சட்டென்று அண்ணாவைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டார்.

அவர் வாயிலிருந்த சிகரெட்டைத் துப்பினார். வாயைத் துடைத்து விட்டுப் பதறிப் போய், ஓடத் தொடங்கினார்.

'அண்ணா எதிரில் சிகரெட் குடித்து விட்டோமே'— என்கிற மரியாதைக்காக அவர் நழுவி ஓடியதால், அவரிடமிருந்து கிடைக்க வேண்டிய பதிலும் அன்றைக்குக் கிடைக்காமலே போய் விட்டது.

அண்ணாவும், கலைஞரும், மற்றும் காரில் இருந்த அனைவரும், வெகு வேகமாக ஓடிக் கொண்டிருந்த அவரைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தனர்.

அந்த ஆளைப் போய் மறுபடியும் பிடித்து வழி கேட்க வேண்டுமானால் காரை ஒரு பர்லாங்குக்கு மேல் பின்னால் ஓட்டிப் போக வேண்டும் போலிருந்தது.

"பின்னால் மறுபடியும் போவதற்குப் பதிலாக தெரிந்த வழியிலேயே திருச்சிக்குப் போகலாம்; வண்டியை எடு!" என்றார் அண்ணா சிரிப்பை அடக்க முடியாமல்.



விளங்கி நிற்கின்றார் என்பது வெள்ளிடைமலை!

விருகம்பாக்கம் மாநாட்டிற்கென்று ஏற்பாடுகள் வெகு விரைவாய் நடந்து கொண்டிருந்தன. எஸ். ஏ. பி. திருமண மண்டபத்தில் கவிஞர் சு. கருணானந்தம் மேற்பார்வையில் ஓவியங்கள் பல கழகத்தின் கடந்தகால சாதனைகளை விளக்கும் வகையிலும் 1962-67ம் ஆண்டு கழக சட்டமன்ற உறுப்பினர்களின் படங்களும் பல வண்ணங்களில் தீட்டப்பட்டுக்கொண்டிருந்தன.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்தது முதல் எழுத்துரிமைப் போராட்டம், மும்முனைப் போராட்டம், நங்கவரம் போராட்டம், விலைவாசி எதிர்ப்புப் போர், உட்பட 1965–ம் ஆண்டு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வரையில் கழக வரலாற்றைத் தனித்தனியாக பெரிய எழில் மிக்க தட்டிகளிலும் தகடுகளிலும் பகலென்றும் இரவென்றும் பாராது ஓவியர் பலர் தீட்டிக் கொண்டிருந்தனர். விருகம்பாக்கம் மாநாட்டுக் கண்காட்சியில் இடம் பெற அவை யாவும் தயாரிக்கப்பட்டு வந்தன.

•

கண்காட்சியின் கண் ஆதி நாள் தொட்டு அதுநாள் வரை, நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கம், இந்தி எதிர்ப்பு இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியவற்றை ஆதரித்து வெளிவந்த — வெளிவந்து கொண்டிருந்த ஏடுகளைத் தேடிக் கண்டெடுத்து ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியாகச் சேகரித்து வைக்கும் பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்று எனக்கு அண்ணா ஆணையிட்டிருந்த பல அலுவல்களில் ஒரு முக்கிய பணியாக அதனை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன்.

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தல் சம்பந்தமாக நடத்தப்படும் மாநாடாதலால் உடனுக்குடன் பேசித் தீர்க்கப் படவேண்டிய பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றிக் கொண்டேயிருந்தன.

ஒருநாள் மாலை அண்ணா அவர்களைக் காணவும் அவருடன் அளவளாவவும் தமிழகத்துக்கு எத்தனையோ மைல்களைக்கடந்து வந்திருந்த தமிழறியாய்த் தமிழ்த் தம்பதியர் இருவர் அண்ணாவின் இல்லமாம் "தாயக"த்திற்கு வந்து காத்திருந்தனர்.

ஆனால் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள வெளியே சென்றிருந்தார் அண்ணா.

அவ்வமயம் அவர்கள் அண்ணாவைப்பற்றியும் கழகத்தைப் பற்றியும் பல விவரங்கள் என்னைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

பிறகு நானாகவே அவர்களை மண்டபத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றேன். ஓவிய வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு ஓவியத்தையும் வரிசைக்கிரமமாக அவர்களுக்குஆங்கிலத்தில் விளக்கிக் கொண்டிருந்தேன். அப்போது வேறொரு இடத்தில் ஓவியங்களைப் பார்த்துக் கொண்டிருந்த கலைஞர் என்னைக் கண்ணுற்றதும் என்னை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

அவர் என்னருகில் வந்ததும் அவரை அயல்நாட்டுத் தமிழ்த் தம்பதியருக்கு அறிமுகம் செய்து வைத்துவிடலாமென்று எண்ணியிருந்த என்னிடம், "தாங்கள் யார் என்பதை நாங்கள் அறியலாமா" என்று அத்தமிழ்த் தம்பதியர் கேட்டனர்.

நான் என்னைப்பற்றி என்ன கூறுவதுஎந்தவகையில்தெளிவு படுத்துவது என்று திணறிக் கொண்டிருக்கையில், அருகில் வந்துவிட்ட கலைஞர் அத் தம்பதியினரிடம் என் பெயரைக் கூறி அண்ணாவின் நண்பர் (   ) என்று இரத்தினச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி வைத்தார்.



வருங்கால அமைச்சர் ஒருவரை அவர்களுக்கு அறிமுகம்செய்துவைக்கலாமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க ஊழியனான என்னை, கழகப் பொருளாளரே இங்கிதமாக அறிமுகம் செய்து வைத்த பான்மையை எண்ணிய போது எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

அண்ணா சிரிக்கின்றார்

—தனசேகரன்

தீயபகைச் சதிகளினால் அறிவி யக்கத்
தேனடையாம் தமிழரினம் நிலைகு லைந்து
சாய்ந்ததுவே பொய்—மடமைச் சேற்றில் இங்கு!
சாதி மதம் ஆதிக்கச் சூழ்ச்சி யாலே
வாய்பொத்திக் கைகட்டி அடிமையாக
வாழ்ந்ததுவே வையத்தை ஆண்ட கூட்டம்!
ஆயிரங்கா லத்திழிவாம் தமிழி னத்தின்
அவலமிதைத் துடைத்தெறிந்தார், அறிஞர் அண்ணா!

இப்புவியில் தமிழர்இன மேன்மை யொன்றே
இலட்சியமாய்க் கொண்டுதமிழ்ச் செம்மொ ழிக்கும்
ஒப்பரிய தமிழ்மரபி னுக்கும் ஏதும்
ஊறுவரா திருந்திடவும்: ஊறு செய்ய
எப்பெரிய படைவரினும் தமிழு ணர்ச்சி
எரிமலையில் அவ்வெதிர்ப்பைப் பொசுக்கு தற்கும்
செப்பரிய பேரியக்கம் — கழக மென்னும்
செந்தமிழர்க் காவலரண் சமைத்தார் அண்ணா!

ஏட்டினிலே எழுதுதற்கும் பேசு தற்கும்
தடைவிதித்துப் பூண்டறுக்க முயன்ற தாமோர்
காட்டாட்சிக் கடும்புயலில் கழகம் காத்த
கலைஞரைப்போல் அற்றைநாள் அண்ணா வுக்கும்
கோட்டையிலே அரசாள்வோர் சீற்றம்; மேட்டுக்
குடிகளது சீற்றம்; ஓர்குடிலர் கட்டுப்
பாட்டினையே அழித்தாடும் துரோகக் கூத்து!
பற்பலவாம் எதிர்ப்புக்கள்! சோத னைகள்!

பழிவாங்கும் இதயம்ஓர் அணுவும் இல்லாப்
பண்பாளர் நமதண்ணா! பதவி நாட்டம்
துளியேனும் இல்லாதார்: தேர்தல் வெற்றி
தோல்விகளில் துவளாதார் தூய அண் ணா!
தெளிவான கொள்கையுடன் திடமும் கொண்டு
தீமைகளைப் புன்னகையோ டேற்று; நாளைத்
தலைமுறையின் வாழ்வேநம் குறிக்கோள் என்றார்
தன் னலத்திற் கீங்கில்லை பரணி என்றார்!

குடிசைவாழ் சாமான்யர் கூட்டம் தன்னைக்
கோட்டையிலே அமர்ந்தாளச் செய்தார் அண்ணா
நடுவில்சில நாளில்லை ஆட்சி என்றே
நழுவுகின்றோர் தமைக்கண்டு சிரிக்கும் அண்ணன்
வடிவழகுச் சிலைதன்னைக் கழகச் சார்பில்
வைத்திடவும், தன்பெயரைச் சொல்லி ஆட்சி
பிடித்தாள்வோர் தடைபோடும் கொடுமை கண்டு
பேரறிஞர் பெருஞ்சிரிப்புச் சிரிக்கின்றாரே!

அண்ணா 65

கவிஞர் முருகுவண்ணன்

உருவம்

உச்சிமேல் வைத்துவந்துப் போற்றி அறிவுலகம்
மெச்சும் வணம்திகழ்ந்த மேலவன் — கச்சித்
திருச்செல்வர் அண்ணா கலையறிவின் மொத்த
உருவமென் றோதும் உல கு!

மனம்

வாழ்த்து வசைமொழிக்குப் பாராட்டு எதிர்ப்பினுக்கு,
பாழ்த்த பகைக்கும் பரிந்துதவல்— வீழ்த்த
முனைந்தார்க்கும் நன்றே முனைந்தாற்றும் தாயின்
மனந்தான்நம் அண்ணா மனம்!

கண்ணோட்டம்

ஒளியாண் டளக்கும் சுடர்பரப்பை உட்கொள்
ஒளிக்கண்கள் போலும் உடையர் — ஒளிமிகுந்த
பேரறிவுப் பெட்டகமாம் அண்ணாவின் கண்ணோட்டம்
பாரினையே ஈர்க்கும்தன் பால்!

பேச்சு

பேசாரும் பேசவைத்த பேராற்றல்; நாளும் நா
கூசாது தூற்றியோரும் கூசவைத்த — மாசில்லா
வைர மொழிச்சிலம்பம்; வாய்மைக்(கு) அரசரண்ணா
மெய்யுரையின் சொற்கோல மே!

எழுத்து

அமிழ்தப் பெருக்கே; அழியாக் கவிதை;
தமிழின் மறுமலர்ச்சி; தாரே — கமழும்
இலக்கியப் பூங்கா! எழுதுகலை வல்லார்க்(கு)
இலக்கணம் அண்ணா எழுத்து!

நடை

தாய்நாட் டெழுச்சி; தமிழ்க்காப்பு; நந்தமிழைத்
தீய் தீயின் தீயணைப்பு; செந்தமிழ்ச் — சேய்களுக்குத்
தன்னாட்சி வேட்கை; தனையே தரும் அன்பின்
நன்மாட்சி அண்ணா நடை!

அறுபத்தைந்து

எண்ணில் அறுபத்தி நான்குகலை யோடறிஞர்
அண்ணா அறுபத்தைந் தாம்கலையாய்—எண்ணிடவே
ஒண்ணாதோ சொல்லாய் அறிவுக் கலையுலகே
அண்ணா அறுபத்தைந்தாய்!

அன்பே, அண்ணா!

சந்தனத்தேவன்

அண்ணாவின் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகள் சுவையுடன் தொகுக்கப் பட்டிருக்கின்றன:

அண்ணாவுக்கு வந்த ஆயிரம் ரூபாய் 'செக்'

தமிழகத்தின் முதல்வராக இந்த அண்ணாத்துரையா? இனி ஆளப்போவது தி. மு. க.வா! — அவர்களால் தாங்க முடியவில்லை. தமிழக காங்கிரஸ்காரர்கள், ஜனநாயகம் தந்த தீர்ப்பை ஏற்க முடியாமல் புழுங்கிச் செத்தார்கள். சில வேளைகளில் வெளிப்படையாக வந்தது மன அரிப்பு. அதற்கு ஒரு சுதந்திர நாள் கை கொடுத்து உதவியது. சுதந்திரநாள் ஊர்வலம் என்ற பெயரில், மவுண்ட் ரோடே தலைகுனியும் வண்ணம், புழுத்த மொழியில் அண்ணாவைப் பற்றியும் தி. மு. க. தலைவர்களைப் பற்றியும் கூப்பாடுகள்!

ஊர்வலம் மவுண்ட்ரோட்டிலிருந்த 'முரசொலி' அலுவலகத்தை நெருங்குகிறது. குழந்தைச் சிரிப்புடன் திகழ்ந்த அண்ணாவின் 'பேனர்' முரசொலியின் முகப்பை அலங்கரிக்கலாமா? ஊர்வலத்திற்கு போதை தலைக்கேற, சரமாரியாக கற்கள், செருப்புகள், அண்ணாவின் படத்தை நோக்கி! அவர்கள் ஆயுத சாலையின் இருப்பும் குறைகிறது. அவர்கள் கண்களை உறுத்திய அண்ணாவின் படமும் நார் நாராக கிழிந்து இருப்பிடத்திலிருந்து கீழே விழுகிறது. பாரதத் தாயின் விலங்கொடித்த வீரர்களின் முகத்திலே வெற்றிப் புன்னகை! காழ்ப்பைத் தீர்க்க வந்த களிப்பு!

பேயாட்டம் ஓய்ந்தது. மறுநாள். அண்ணாவுக்கு ஒரு கடிதம். எழுதியவர் சிங்காரவேலு. அன்றைய சென்னை நகரப் போலீஸ் ஆணையாளர். உண்மையோ பொய்யோ அவர் காங்கிரசின் ஆதரவாளர் என்ற பேச்சு பரவலாக இருந்த நேரம். அவர் எழுதிய கடிதத்தின் வாசகம் இப்படித்தான் இருந்தது!

''அண்ணா!

நேற்று நடந்த நிகழ்ச்சிக்கு மெத்த வருந்துகிறேன். என் கண் முன்னாலேயே தங்கள் படம் சிதைக்கப்பட்டது. என் மனத்தில் ஏற்பட்டுவிட்ட நீங்கா வடு, என் கடமையை நான்ச் சரிவர செய்யவில்லையே என்ற உறுத்தல். நிலைமையை கட்டுப்படுத்த முடியவில்லை. தலையிட்டிருந்தால் விபரீதம் நிகழ்ந்திருக்கும்.

எனவே தங்கள் படம் கிழிக்கப்பட்டதற்கு நானே பொறுப்பேற்கிறேன். அதே இடத்தில் தங்கள் படம் மறுபடியும் அலங்கரிக்க அதற்கான செலவுத் தொகையாக ரூபாய் ஆயிரத்திற்கான 'செக்'கை இத்துடன் இணைத்திருக்கிறேன். ஏற்றுக்கொள்க.''

வந்த 'செக்'கை அண்ணா எடுத்து வைத்துக்கொண்டு, தன் கைப்படவே கமிஷனர் சிங்காரவேலருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். இலக்கிய நயத்தோடு, மனதையும் தொடுவதாக இருந்தது அக்கடிதம்!

''வருந்த வேண்டாம். இந்நிகழ்ச்சியால், என்பால் அன்பு கொண்ட ஓர் இதயத்தை இனம் கண்டுகொண்டேன். அது போதும் எனக்கு. ஆயிரம் ரூபாய் 'செக்' என்னிடமே இருக்கட்டும். அதை நான் மாற்றுவதாயில்லை. ஓர் அன்பு உள்ளத்தின் நினைவுச் சின்னமாக போற்றி வைப்பேன்''

அண்ணாவுக்கு நாம் நினைவுச் சின்னம் எழுப்பினோம்; அவரோ தனக்கென ஒரு நினைவுச் சின்னத்தை அன்றே அமைத்துக்கொண்டுவிட்டார்.

ஃ ஃ ஃ

வெள்ளாட்டின் வெற்றி !

போக்குவரத்து தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே பெரிய மோதல். இருவருமே சமுதாயத்தின் இரு கண்கள். இதிலே எதை இழக்க இயலும்! அண்ணாவுக்கு மனதில் அமைதி இல்லை. அரசு தொழிலாளர் சார்பாக இருக்கிறது என்ற தவறான எண்ணம் தலைதூக்கி இருந்த நேரம். சென்னை மருத்துவ கல்லூரி முதல்வர் டாக்டர் கோவிந்தராஜுலு, அண்ணா மாணவர்களிடையே சற்று வந்து பேசினால் எல்லாமே சரியாகிவிடும் என்று கணிக்கிறார். அண்ணா, மாணவர்களை சந்திக்க ஏற்பாடும் செய்துவிடுகிறார்.

1300 சிங்கம் புலிகளின் கர்ஜனை உறுமல்களுக்கிடையே ஒரு வெள்ளாடு நுழைகிறது. Down ! Down ! Annadurai! —இப்படி பலமான வரவேற்பு.

'ஒழிக' என்பதை, தமிழில் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும் — இதுவே அண்ணாவின் நினைப்பு. அண்ணா வந்து இறங்கிய காரின் மீது 'திரும்பிப்போ' என்று தார்கொண்டு பட்டை தீட்டுகிறார் ஒரு மாணவர். இயங்கும் மனிதனைச் சோதிக்க வேண்டியதை, இப்படி இயந்திரத்தோடு முடித்துக்கொள்கிறதே என்ற மனக்குறை அண்ணாவுக்கு!

ஹாலில் கூட்டம். அலைவரும் எதிரிகளே! அண்ணாவின் நேர்முக உதவியாளரான திரு. எஸ். கஜேந்திரன், ஒரு பாதுகாவலர். டாக்டர் கோவிந்தராஜுலு ஒரு அணியிலே. எதிரே ஆர்த்து நிற்கும் மாணவர் கூட்டம். இடையே அனல் வீசுகிறது. அண்ணாவுக்கு நா வறட்சி. தண்ணீர் குடித்தால்தான் பேச முடியும் என்ற நிலை. 'தண்ணீர்' என்று ஒட்டிக் கொண்ட உதடுகளையும் மீறி, வேண்டுகிறார் அண்ணா. ''தண்ணீரா! தராதே!'' என்று ஏகோபித்து கூக்குரல்! பாரி வள்ளலின் பரம்பரைக்கு இந்தக் கதியா, என்று எண்ணியபடி உமிழ்நீரையே ஊற்றுநீராக்கி, பேச்சை துவங்கினார் அண்ணா. எதிரே இருந்தவர்களிடம் குடிகொண்டிருந்த கோபம், குரோதம் பதட்டம், எல்லாமே நழுவத் தொடங்கின. ஆத்திரம் இருந்த இடத்தில் அமைதி. என்ன மாயாஜாலமோ சில நிமிடங்களில் அந்த மாணவர்கள் அண்ணாவுக்குள் அடக்கம்!

அவர் வேண்டுமானால் பார்க்க வரட்டும், ஆனால் நாங்கள் அவரை இங்கு பேச விடமாட்டோம் என்று கொக்கரித்தவர்கள், தங்கள் தலைவர்களான 13 பிரதிநிதிகளுடன் அண்ணா தனியறையிலே விவாதிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அண்ணாவை மட்டும் தனிமையில் அனுப்ப செக்யூரிட்டிக்கு அச்சம். ஏதேனும்அசம்பாவிதம்நடந்துவிட்டால்! மாணவர்களோ அண்ணாவைத் தவிர வேறு யாருமே வரவேண்டாம் என்கின்றனர்.

ஐந்தே நிமிடம்—அறைக் கதவும் திறக்கிறது. வெளியே வந்தவர்கள் முகமனைத்தும் புன்னகையே!

''அண்ணா! காப்பி சாப்பிட்டுவிட்டுப் போங்கள்!'— தண்ணீர் தராதே என்றவர்கள், அண்ணாவை தாங்கினர்; போற்றினர். அண்ணா என்றுமே உயர்ந்தவர். அன்றும் உயர்ந்து காட்டினார். ''நான் மட்டுமா? அனைவருமே சாப்பிடுவதாயிருந்தால் நான் தயார்'' — என்கிறார் அண்ணா.

சற்றுமுன் தவித்த வாய்க்கு தண்ணீர் தராத கைகள், இப்போது குடிக்க ''காபி'' தந்ததின் மர்மம் என்னவாயிருக்கும்?

கொடுத்து வைத்திருக்கவேண்டும்

பெரியாரைவிட்டு அண்ணா பிரிந்த நேரம். திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் பொதுக் கூட்டம். அண்ணா பேசுகிறார். மைதானம் கொள்ளாமல், தெருவெல்லாம் மக்கள் திரள். கூட்டம் முடிந்ததும், அண்ணா



தன் நண்பர் குழாம் புடைசூழ கால்நடையாகவே தங்குவதற்கு திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன் வீட்டிற்குச் செல்கிறார். அண்ணாவை விட்டு பிரிய மனமில்லாமல் ஒரு கூட்டம் அவரை விடாதுபின் தொடர, பண்ணை வீட்டில் ஒரே நெருக்கடி. சின்னஞ் சிறு வரவேற்பறையின் நடுவே விரித்திருந்த பாயில் அண்ணா அமர, அவரைச் சுற்றிலும் கழகத்தவர்கள்.

அத்தோழர்களிலே ஒருவர் கையிலே சுருட்டி வைத்திருந்த இதழ் ஒன்று, அண்ணாவின் கண்ணில் படுகிறது. உரிமையோடு உருவுகிறார் அண்ணா. அவரது துருதுருத்த கண்கள் அந்த இதழை ஊடுருவ, அருகே நின்றிருந்த தோழர்கள் அண்ணாவையே பார்த்து நிற்கின்றனர்.

அண்ணா இவ்வளவு ஆவலுடன் படித்த இதழின் பெயர் நகரதூதன்என்பதாம். அதன் ஆசிரியர் மணவை. திருமலைசாமி என்பவர். வலுவான பேனா மன்னன். தாக்க ஆரம்பித்தால் வாள் கொண்டு அறுப்பதுபோல் இருக்கும். அவ்வளவு கூர் மழுங்காப் பேனாமுனை. 'பேனா நர்த்தனம்' என்ற தலைப்பில் கேசரி எனும் புனைப்பெயரில் புகுந்து விளையாடுவார். தாக்குதல் சில வேளைகளில் எல்லை மீறினாலும் அவர் கையாளும் தமிழ்—அது பயிலும் நடை—நடையோடு அதில் ஒளிந்து வரும் அதிரடி, பிரமிக்கத் தக்கன. அண்ணாவை, அவர் தன் பேனாவால் சீண்டிக் கொண்டிருந்தவேளை. அப்படியிருக்க, அண்ணா அவ்விதழை இவ்வளவு ஊன்றிப் படிப்பது கண்ட கழகத் தோழர் ஒருவர், மனம் தாங்காமல் ''அண்ணா! இது நகரதூதன் அல்லவே! நரகல் தூதன் ஆயிற்றே!'' — என்றார்.

இதனைக் கேட்டதும் அண்ணாவின் இதழோரத்திலே களங்கமற்ற புன்னகையின் ஒளிச் சிதறல் மின்னல் கீற்றென நெளிந்தோடுகிறது.

''அப்படியல்ல! பேனாவினால் குத்துவதற்கும் ஒரு தனித்திறமை வேண்டும். நீயும் நானும் அதைச் செய்துவிட முடியாது. மணவை அதற்காவே பிறந்தவர்'' என்றார் அண்ணா.

நகர தூதனுக்கு இதைவிட வேறு விளம்பரம் வேண்டுமா? அண்ணாவை ஓய்வு எடுக்க விட்டுவிட்டு, வெளியே வந்த தோழர்கள் செய்த முதல் காரியம் ஆளுக்கொரு நகர தூதன் இதழை வாங்கியதுதான். அதை முழுதும் படித்துப் பார்த்தால், ரத்தம் கொதிக்கிறது. எதிரே மட்டும், அந்த இதழின் ஆசிரியர் திருமலைசாமி வந்திருப்பாராயின் அவரது எலும்புகள் எண்ணப் பட்டிருக்கும். குறைந்த பட்சம் அந்த எழுத்துகளை எழுதிய விரல்கள் துண்டிக்கப் பட்டிருக்கும் அவ்வளவு ஆத்திரம்!

அண்ணாவை மிகவும் தரக் குறைவாக தாக்கியிருந்தார். வேலி தாண்டி வேல்கொண்டு அண்ணாவின் நெஞ்சிலே குத்தியிருந்தார். அதுசரி, அவர்தான் அப்படி எழுதினார்; இவர் எப்படி அதனை ஜீரணித்தார்? வரிவிடாமல் படித்தார். படிக்குமுன் அவரது முகம் எப்படி இருந்ததோ அப்படித்தானே படித்து முடித்தபோதும் இருந்தது! முகத்திலே ஏதேனும் மாற்றமில்லையே! வாரி வீசிய ஏசலும் தாழ்வும் இவருக்கு பூஜைக்கு வந்த மலரானதா!

அதனால்தான் அவர் 'அண்ணா' ஆனார்.



அவனிக்கு ஓர் திருநாள்

கோகுல்குமார்

அண்ணனே!

எங்கள் இதய வீணையின் உணர்ச்சி நாளங்களிலிருந்து உருவாகும் இனிய கீதமே!

எங்கள் ஆத்மாவின் ஜீவத் துடிப்புகளில் சங்கமித்திட்ட தேவனே!

எங்களின் நாடி நாளங்களை இயக்கும் செங்குருதி யோட்டமே!

எம் இலட்சியச் சொப்பனங்களின் மூலக்கருவே!

எங்கள் அரசியல் வாழ்வின் அஸ்திவாரமே!

எங்கள் வாழ்வில் வந்த வசந்தங்களின் வாசலுக்குத் தோரணமே!

எங்கள் இதயவானின் உதயகாலக் கதிரவனே!

தமிழர்தம் வாழ்வுகள் சங்கமிக்கும் வங்கக் கடலே!

இமயத்தில் பிறக்காத புனித கங்கையே!

மானிட தேவனே!

மண்ணுலகின் புனிதனே!

நற்றமிழர் வாழ்வின் நம்பிக்கைச் சுடர் விளக்கே!

எங்கள் சிந்தனைப் பிரசவங்களின் சிருஷ்டி கர்த்தாவே!

அனுதினமும் நாங்கள் வணங்கும் தி.மு. கழகமென்னும் கொள்கைக் கோவிலின் மூல விக்ரகமே!

எங்களின் அண்ணனே!

உங்களின் பார்வையில் பாசத்தோடு எங்களை வளர்த்தீர்கள். உங்களால் எங்களின் இதயத் தோட்டத்தில் நட்டு வைக்கப்பட்ட சிந்தனை ரோஜாக்கள் மலர்ந்து மணம் வீசிக்கொண்டு இருக்கின்றன.

உங்கள் தோட்டத்தில் நாங்கள் குயில்களாகப் பாடிக் கொண்டிருக்கிறோம். எங்கள் கீதங்களை நீங்கள் கேட்க வேண்டும் என்பதற்காகவே அவை இன்னமும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

அண்ணனே!

நாங்கள், இடுகாட்டின் ஆலமரமாக இருப்பதைவிட, உங்கள் ஆலயத்தின் அருகம் புல்லாக இருப்பதையே பெருமையாகக் கருதுகின்றோம்.

நாங்கள் சைத்தானின் தலையில் பாரிஜாத மலராக இருப்பதைவிட, தேவனுன உங்களின் காலடித் தடயங்களில் பெயர் தெரியாத சிறு பூவாக இருப்பதையே மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஏனென்றால் நீங்கள் உங்களுக்காக வாழ எண்ணாமல், எங்களுக்காகவே வாழ்ந்து காட்டியவர்.

அண்ணா! நீங்கள் நடந்து செல்லுகின்ற பாதையில் தூவ வேண்டும் என்பதற்காக என் வீட்டுத் தோட்டத்தில் நான் மல்லிகைப் பூப்பந்தலைப் பரவ விட்டேன். ஆனால் அவை இரத்தச் சிகப்பாய்ப் பூத்துக் குலுங்குகின்றன!

நீங்கள் பிறந்த நந்நாளில் அம்மல்லிகை மலர்களால் உங்கள் பாதங்களை அர்ச்சனை செய்ய இயலவில்லை. உங்கள் கல்லறையிலாவது சூட்டுவோம் என்று அந்த செந்நிற மல்லிகைகளை வாரிக் கொண்டு ஓடிவந்து கொண்டிருக்கின்றேன்.

எங்களை வழி நடத்திச் செல்ல நீங்கள் இல்லையே என்று எங்களுக்கு ஏக்கமாக இருந்தாலும், உங்கள் வழித்தோன்றலாம் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நீங்கள் நடந்துசென்ற வழித்தடயங்களில் எங்களை நடத்திச் செல்லுகின்றார்.

அந்த ஆத்ம திருப்தியுடன் தான் சூளுரைத்துச் செயல் புரிகிறோம்.

அண்ணா! உங்கள் சொல்லைச் செயல்வழியாய் நினைத்து போற்றித் தோளுயர்த்திச் செல்லுகின்றோம்.

நீ கண்ட தி. மு. கழகமதைக்கேடயமாய் வைத்து—

கலைஞரெனும் வரிவேங்கைப் பாய் புலியை வாளாய்க் கொண்டு—

தாள் பதிக்கும் இடமெல்லாம் வெற்றி கண்டிட உங்கள் பிறந்த நாளில் சபதமேற்கின்றோம், அண்ணா!

ஓர் இளம் உள்ளத்தின் ஏக்கம்

— மு.க.ஸ்டாலின்

1968-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம். கோபாலபுரத்திலிருக்கும் இளைஞர்களுடன் மன்றம் ஒன்றினைத் தொடங்கியிருந்த நேரம். மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாளினை நடத்தும் சிறப்பான முடிவுடன் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களைச் சந்திக்கச் சென்றோம்.

அண்ணா அவர்களை அழைத்துச் சிலம்புச் செல்வரைக் கொண்டு பொன்னாடை போர்த்தச் செய்ய வேண்டும் என்பது இளைஞர் மன்ற நண்பர்களின் ஆசை.

சிலம்புச் செல்வர் அவர்கள் ''அண்ணா அவர்களிடம் தேதி வாங்கிக் கொண்டாயா ஸ்டாலின்?'' என்று கேட்டார்.

''நீங்கள் வருவதற்கு எப்போது வசதிப்படும் என்று சொல்லுங்கள்; அண்ணா அவர்களிடம் போய்ச் சொல்கிறேன்'' என்றேன் நான்.

படிப்பிலே மட்டும் அப்போது நான் மாணவனாக இருக்கவில்லை; அரசியலிலும் மாணவன் என்பதைச் சூசகமாக உணர்த்தினார் சிலம்புச் செல்வர்.

''ஸ்டாலின்! முதலில் அண்ணா அவர்களைப் போய்ப் பார். எந்தத் தேதி அவருக்கு வசதியான தேதி என்று விசாரித்துவிட்டு அதன் பிறகு வா. பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தும் அந்த அரிய வாய்ப்புக்கு நான் எப்போதும் காத்திருக்கிறேன்!'' என்றார் சிலம்புச் செல்வர்.

அப்போதுதான் எனக்கே சட்டென்று புரிந்தது. அண்ணாவைச் சந்தித்துவிட்டு அதன் பிறகு சிலம்புச் செல்வரைச் சந்தித்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

நாடெங்கும் அண்ணன் பிறந்த நாள் நடந்து கொண்டிருக்கிற அந்த நாட்களில், கோபாலபுரம் இளைஞர் மன்றச் சார்பில் அண்ணாவை அழைத்துப் பொன்னாடை போர்த்திப் பெருமைகொள்ள வேண்டும் என்கிற தணியாத ஆர்வத்தின் காரணமாக நான் அண்ணன் உடல்நிலை குறித்துச் சிந்திக்கவே இல்லை.

அண்ணா அவர்களின் இல்லத்திற்கு உடனே புறப்பட்டேன்.

ஆனால் — அவென்யூ சாலையில் அண்ணா அவர்களின் இல்லம் வந்தபோதுதான் எனக்கு அந்தச் செய்தி கிடைத்தது. கடுமையான வயிற்று வலி காரணமாக அண்ணா, யாரையும் சந்திக்காமல் தமது அறையில் படுத்திருக்கிறார் என்று சொல்லப்பட்டது.

வந்த வேகம் அப்படியே குன்றிப்போய் வாசலில் சிறிது நேரம் நின்றுவிட்டு ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பினேன்.

கோபாலபுரம் செல்லும்போது என் நெஞ்சில் ஒரு குமுறலும் இருந்துகொண்டே இருந்தது. என்னுடைய ஆர்வமும், துடிப்பும் உடனே நிறைவேற இயலாது போயிற்றே என்கிற குமுறல்தான் அது!

வீடுபோய்ச் சேர்ந்த மறு நிமிடமே தொலைபேசி அலறியது. அண்ணா அவர்களின் இல்லத்திலிருந்து என்னை அழைப்பதாகக் கூறினார்கள். தொலைபேசியை வாங்கினேன்.

என்னால் நம்ப முடியவில்லை, அண்ணா அவர்களே தொலைபேசியில் பேசினார்கள்.

''என்ன ஸ்டாலின்! வந்துவிட்டுத் திரும்பிவிட்டாயாமே..'' என்று கேட்டார் அண்ணா! என் நெஞ்சம் துள்ளியது.

''இதோ வருகிறேன் அண்ணா!'' என்று கூறிவிட்டு, மிகுந்த பரபரப்புடன் மறுபடியும் அண்ணா அவர்களின் இல்லம் நோக்கி விரைந்தேன். அண்ணா அவர்களைச் சந்தித்தேன். விவரத்தைச் சொன்னேன்.

செங்காவிப் புன்னகையை உதிர்த்த அண்ணா அவர்கள், ''அப்படியா?'' என்று வியந்தவாறே — ''சரி; தேதியைப் பார்த்துச் சொல்கிறேன்'' என்றார்.

''இப்போதே சொல்லுங்களேன் அண்ணா!'' என்றேன் நான்.

அண்ணா மறுபடியும் புன்னகை பூத்தார்.

''அப்பாவைப் போலவே நீயும் பிடிவாதக்காரனாக இருக்கிறாயே..'' என்றார் அவர்.

நான் தேதியைக் கேட்பதிலேயே ஆர்வமாக இருந்தேன்.

''தேதியைப் பார்த்து அப்பாவிடமே சொல்லி அனுப்புகிறேன் ஸ்டாலின்! பரபரப்பு இல்லாமல் மற்ற காரியங்களைப் பார்!'' என்றார் அண்ணா.

'அப்பாவிடம் சொல்லி அனுப்புகிறேன்' என்று சொன்ன பிறகுதான் என் முகத்தில் மகிழ்ச்சியே படர்ந்தது. குதூகலத்துடன் அங்கிருந்து விடை பெற்றுக்கொண்டு வந்து நண்பர்களிடமெல்லாம் சொன்னேன்.

அன்று இரவு என் தந்தை கலைஞர் அவர்கள், அண்ணா தேதி கொடுத்திருக்கும் விவரத்தைச் சொன்னபோது இரவெல்லாம் பற்பலவாய்த் திட்டங்கள் போட்டேன்.

விழாவை எப்படி எல்லாம் நடத்தவேண்டும் என்பது பற்றிய கற்பனைகள் விரிந்தன. மறுநாள் காலையில் முதற்காரியமாக சிலம்புச் செல்வர் அவர்களின் இல்லம் சென்று சேதியைக் கூறிவிட்டு, தேதியையும் சொல்லி விட்டு வந்தேன்.

போஸ்டர்கள் எப்படிப் போடுவது என்ற ஏற்பாட்டிலும், கோபாலபுரம் தெருக்களில் கொடி தோரணங்கள் கட்டும் ஏற்பாட்டிலும் இளைஞர்களுடன் பரபரத்தேன்.

அண்ணா தேதி கொடுத்த நாளுக்கு முந்தைய தினம்— டாக்டர்களின் ஆலோசனையின்பேரில் உடல் நலப் பரிசோதனைக்காக அண்ணா அவர்கள் அமெரிக்கா புறப்படுவது என்று ஏற்பாடாகி விட்டது. என் கற்பனைகள் இடிந்தன!

ஆனால் நான் இடியவில்லை. இம்முறை அண்ணா அவர்களை அழைத்துப் பொன்னாடை போர்த்தும் பெருமைகிடைக்கவில்லை என்றாலும் — அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவாக நடைபெற இருக்கும் மறு ஆண்டு நிச்சயம் என் கற்பனைகளில் கண்டதுபோல் அண்ணா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தத் தான்போகிறோம் என்கிற நம்பிக்கையுடன் விழாவை அதன் அனுமானம் சிதையாமல் நடத்தினோம்.

மறுநாள் இளைஞர் மன்றத்தின் அண்ணா விழாவிலே கலந்துகொண்ட சிலம்புச் செல்வர் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டு, ''இந்த ஆண்டு அண்ணா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துகி[illegible] வாய்ப்பு எனக்குக் கிட்[illegible] வில்லை என்றாலும் — அடுத்[illegible] ஆண்டு நிச்சயம் கிட்டு[illegible]! அந்தப் பெருமையை நா[illegible] நிச்சயம் பெறுவேன்!'' என்[illegible] கூறி விழாவைச் சிறப்பு[illegible] நடத்திவைத்தார்.

மறு ஆண்டு..? நான் நம்பியிருந்ததும்; சிலம்புச் செல்வர் அவர்கள் காத்திருந்ததுமான விழா வந்தது. ஆனால் பொன்னாடையை அணிவிக்க அண்ணா அவர்களின் புகழுடம்புதான் இருந்தது.

கோபாலபுரம் இளைஞர் மன்றம் ஒருமுறை மூன்று மாநில முதல்வர்களை அழைத்து அண்ணா விழாவை நடத்தியது. மற்றொரு முறை அனைத்துக் கட்சியினரும் பங்கேற்ற அண்ணா விழாவினை நடத்தியது. ஆனால்..அவையாவும் என் கற்பனைகளில் கண்ட, — மறு ஆண்டேனும் காண இருந்த— விழாவாக அமையவில்லை என்ற மனக்குறை ஒவ்வொரு முறையும் நெஞ்சில் அழுத்திக் கொண்டே இருந்தது; இருக்கிறது.

இந்த அழுத்தம் நெஞ்சை நெருடும்போதெல்லாம் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று அண்ணா அவர்கள் கூறிய மணிமொழிதான் இதைத் தாங்கிக் கொள்கிறது!

புதுயுகத்தின் திறவுகோல்!

—மாயூரம் இளமாறன்

செப்டம்பர் 15,

மன்பதை மக்கள் இனத்திற்கு மகிழ்ச்சித் திருநாள். தமிழ் மண்ணில் வாழ்வோர்க்கு எழுச்சிப் பெருநாள்.

அந்த நாள், முத்தமிழ் வழங்கும் உலகின் முடிசூடா மன்னனின் பிறந்தநாள்—

இருள் கப்பிய தமிழகத்தின் 'விடிவு'க்கு வழிவகுத்த விடிவெள்ளி தோன்றிய நாள்—தென்னகத்தின் அரசியலில் பெரும் திருப்பத்தை விளைவித்து அடித்தள மக்களும் ஆட்சியில் அமர முடியுமென்ற நிலையை மலரச்செய்த அரசியல் வித்தகனின் வரலாறு துவங்கிய நாள்.

பேரறிஞர் அண்ணா ஒரு தனி மனிதரல்ல; அவர் ஒரு சக்தி வாய்ந்த நிறுவனம். அவரது வரலாறு ஒரு தனி மனிதரின் வாழ்க்கைக் குறிப்புகளின் தொகுப்பு அல்ல; அது ஒரு இனத்தின் வரலாறு — அந்த இனத்தின் எழுச்சிக்காகப் போராடிய ஒரு மாபெரும் இயக்கத்தின் வரலாறு.

''அவர் ஒரு தனி மனிதர் என்ற முறையில் மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்ல; அவர் ஒருகாலத்தின் சின்னம்; எழுச்சியின் அடையாளம்; மறுமலர்ச்சியின் உருவகம்'' என்று, அண்ணல் காந்தி மரணத்தை முத்தமிட்டபோது மாமேதை நமதண்ணன் புகழாரம் தொடுத்திட்டார். அந்தச் சொல்லோவியமே அண்ணாவின் வாழ்வை, வரலாற்றை இந்த வையகத்திற்கு விளக்கிடும் காவியமாக-கருத்தோவியமாக— விளங்கக் காண்கிறோம்.

பேரறிஞர் அண்ணா தமிழ் நாட்டில் உரிமைப் போராட்டம் உச்சநிலையை அடைந்த ஒரு காலத்தின் சின்னமாக — அரசியலிலே — சமுதாய அமைப்பிலே மாற்றம் ஏற்படுத்திய மாபெரும் எழுச்சியின் அடையாளமாக —மூட நம்பிக்கை எனும் தளைகளால் பூட்டப்பூட்டு முன்னேற்றப் பாதையில் தளிர் நடை போட முடியாமல் தவித்த தமிழினத்திற்குப் புரட்சிப் புதுயுகத்தின் தலைவாயிலைத் திறந்துவிட்ட சகாப்தமாக, துறைகள் தோறும் புதுமரபு தோன்றிய மறுமலர்ச்சிக் காலத்தின் துவக்கமாக போற்றப்படுகின்றார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியலில் மட்டுமின்றி, அனைத்துத் துறைகளிலும் ஆற்றல் பெற்ற மாமனிதராகத் திகழ்ந்தார்.

அவர் தனது நாவசைவின் மூலம் இந்த நாட்டு மக்களின் இதயங்களை அசைத்தவர். 'ஆற்றோரம்' ''நாடும் ஏடும்'' ''நல்ல தீர்ப்பு'' ''நிலையும் நினைப்பும்''''ஏ' தாழ்ந்த தமிழகமே'' ''தமிழரின் மறுமலர்ச்சி'' என்றெல்லாம் தலைப்பிட்டு அண்ணா பேசிய பேச்சுக்கள், தமிழ் நாட்டில் ஒரு மௌனப் புரட்சிக்கு வித்திட்டதை யார்தான் மறுக்கமுடியும்?

எழுத்துலகில் அண்ணா சாதித்தவை ஏராளம். அவர் கையாண்ட புதிய நடை தமிழ்மொழியை செழுமைப்படுத்தியது. அவர் 'கலை கலைக்காக' என்ற கருத்தோடு இலக்கியங்கள் படைத்தாரில்லை. மாறாகச் சமுதாய நோக்கோடு — பாசி படர்ந்த பழைய சமுதாயஅமைப்பினைத் தகர்க்கவேண்டுமென்று சீரிய இலக்கியங்கள் படைத்தார்.

''மன்னனின் கரத்திலுள்ள செங்கோலை விட,மதக்குருவின் கையிலுள்ள சிலுவையைவிட வலிமை படைத்தது என் கரத்திலுள்ள பேனா'' என்று முழக்கமிட்ட வால்டேர்—

''ஏடுகளை துப்பாக்கியாக்கி, எண்ணங்களை குண்டுகளாக்கி அரசாங்கத்தைக் குறிவைத்துச் சுட்ட எமிலிஜோலா—

''என்னைப் பொறுத்த வரையில் மனிதனுக்கு அப்பால் எந்தக் கருத்துகளும் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் மனிதன்தான் எல்லாப் பொருள்களையும்—எல்லாக் கருத்துகளையும் படைப்பவன்'' என்றுரைத்த புரட்சி எழுத்தாளன் மாக்ஸீம் கார்க்கி—

ஆகியோர் இன்று வாழ்ந்திருந்தால் அண்ணாவின் எழுத்துக்களை, அவை நாட்டில் உண்டாக்கிய எழுச்சியைப் பாராட்டி வாழ்த்தியிருப்பார்கள். அத்தகைய ஆற்றல் பெற்ற எழுத்தாளராக அண்ணா திகழ்ந்தார்.

''உலகிலேயே மனிதாபிமானமிக்க மாபெரும் தலைவர்'' என்று மாவீரன் லெனினைப் பற்றிச் சொல்வார்கள். அவரைப்போல் பேரறிஞர் அண்ணா அவர்கள் மனிதாபிமானம் பேணிடும் தலைவராக, மனித கௌரவம் காத்திடும் மகத்தான காவலராக வாழ்ந்தார்.

ஆரவாரம் மிகுந்த அரசியல் அரங்கில் அண்ணன்—தம்பி உறவு முறையைப் புகுத்தினார்—பாசத்தையும் பண்பையும் உரமாக இட்டு அரசியல் பயிர் வளர்த்தார். ''அரசியல் என்பது அமளிகளற்ற கருத்தரங்கம் — அது ஒளி தரவேண்டும் — வீணான வெப்பத்தை அல்ல'' என்ற தூயநிலை பிறந்ததே அண்ணாவின் அரும்பணியால்தான் என்றால் அது மிகையாகாது.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய கட்சியில் சேர்ந்துகொள்வதில் பெருமை இருப்பதாகக்கருதிய காலத்தில், பேரறிஞர் அண்ணா நீதிக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

சமுதாயத்தில் இழிவுபடுத்தப்பட்டு, பொருளாதாரத் துறையில் சுரண்டலுக்கு ஆளாகி, எண்ணிக்கைக்கேற்ப கல்வி - வேலை வாய்ப்புகளில் இடம்பெறமுடியாமல் உரிமையற்ற நிலையில் தவித்த ஒரு இனத்தின் ஏற்றத்திற்காக நீதிக்கட்சி பாடுபட்டது.

பார்ப்பனரல்லாத மக்களின் வளர்ச்சிக்காக—வாழ்வு மேம்பாட்டிற்காக பாடுபட்ட நீதிக்கட்சியை ''வகுப்பு வாதக்கட்சி'' என்று வர்ணித்தவர்கள் உண்டு.

ஆனால் அது ஒரு வகுப்பு வாதக் கட்சி அல்ல. நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஏ. பி. பாத்ரோ குறிப்பிட்டதைப் போல, பார்ப்பனரல்லாதாரின் இயக்கம் (நீதிக்கட்சி) எதிர்மறை இயல்பு கொண்டதோ—இந்திய மண்ணின் ஒரு பகுதிக்கோ அல்லது அதில் வாழும் எந்த ஒருஜாதிக்கோ எதிரானதல்ல. மாறாக, ஓரினம் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்ள உருவாக்கிக் கொண்ட இயக்கமாகும்.

இத்தகைய மாபெரும் இயக்கத்தில் சேர்ந்து வெள்ளுடைவேந்தர் தியாகராயர், டி. எம். நாயர், டாக்டர் நடேசனார் ஏற்றிய தீபம் ஒளிவிட்டு எரிந்திட அண்ணா, தனது அறிவை, ஆற்றலைப் பயன்படுத்தினார்.

பார்ப்பனரல்லாதாரின் இயக்கம் பணக்காரர்களிடம் தஞ்சம் புகுந்து, அவர்களது பாதுகாப்புக் கேடயமாக ஆனபோது, அண்ணாவின் புகழ்மிக்க தீர்மானம் — நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றியது.

ஆமைகளாய் அடங்கிக் கிடந்த மக்கள் ஆதிக்கச் சக்திகளை எதிர்த்துப் போராடும் மனவலிமை பெற்றார்கள் என்றால், அது திராவிடர் இயக்கத்தின் விளைவாகும். அந்த இயக்கத்தின் மாபெரும் உந்துசக்தியாக பேரறிஞர் அண்ணா இருந்தார்கள்.

பின் பெரியாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு கழகம் கண்டபோது, வழிகாட்டிய தலைவரை வீழ்த்த எண்ணவில்லை; வளர்த்துவிட்ட இயக்கத்தை அழிக்கக் கருதவில்லை; ஏற்றுக் கொண்ட கொள்கைகளையும் தூற்றவில்லை.

திராவிடர் இயக்கம் அழியுமென மாற்றார் மகிழ்ந்த வேளையில் — அறிவியக்கத்தின் தானைத் தளபதி அண்ணா ''வாழையின் அடிக்கன்றாக மாறி தாய் வாழையை அழிக்கமாட்டோம்; ஆலின் விழுதாக இருந்து அடிமரத்தைக் காப்போம்'' என்று அறிவித்தார்கள். அரசியல் இயக்கமாக கழகம் பரிணமம் பெற்ற பின்னும் ''அறிவுப் புரட்சி சமுதாய மறுமலர்ச்சி' என்னும் இலட்சிய இலக்கு மாறாமல் கழகத்தை இயங்க வைத்தார். அதனால் தான் திராவிட இயக்கத்தின் சரியான வழித் தோன்றலாக வளர்ச்சியின் அடையாளமாக வரலாற்றாசிரியர்களால் கழகம் போற்றப்படுகின்றது.

ஒருமுறை நிருபர்கள் அண்ணா அவர்களிடம் நேருவைப்பற்றி வினவிய போது, ''நேரு கட்டி முடிக்கப்பட்ட கோபுரம். நான் கொட்டிக் கிடக்கின்ற செங்கல்; ஆனால் ஒரு காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட கோபுரமாக மாறுவேன்'' என்று குறிப்பிட்டார்.

பேரறிஞர் அண்ணா, தனிப்பட்டமுறையில் நேருவும் தானும் அரசியலில் வகித்த இடத்தை ஒப்பிட்டு அவ்வாறு கூறினாரில்லை.

முதிர்ந்த காங்கிரஸ் கட்சிக்கும், முகிழ்த்த நிலையிலிருந்த கழகத்திற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கிடத்தான் அப்படி கூறினார்.

நேருவினால் கட்டி முடிக்கப்பட்ட காங்கிரஸ் கோபுரம் இடிந்து நினைவுச் சின்னம் எழுப்பவேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால் அண்ணா அடித்தளமிட்டு உருவாக்கிய கழகமோ, இன்று கலைஞரின் தலைமையில் கோபுரமாக—யாராலும் தகர்க்கமுடியாத கோட்டையாக விளங்குகிறது. இதனை எண்ணிடும் போதுதான் அண்ணனின் தீர்க்கதரிசனம் தெளிவாகிறது.

இந்திய நாட்டில் மத்திய—மாநில உறவில் கீறல் விழுந்த போது, ஆதிக்கவாதிகளுக்கும் அதிகாரப் பகிர்வுச் சக்திகளுக்கும் மோதல்கள் வளர்ந்த போது—இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவையை எதிரொலிக்க இயலாமல் போனபோது, தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா 'மாநில சுயாட்சி'த் தத்துவத்தை விளக்கிடும் சிந்தனைத் தந்தையாக விளங்கினார்.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், இந்திய அரசியல் சட்டம் இயங்கும் முறையை, அதனை மாற்றியமைக்கவேண்டியதற்கான அவசியத்தை அண்ணா தெளிவுபடுத்தி இருக்கிறார்.

''இந்திய அரசியல் சட்டம் காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவியலுக்கு வழி வகுப்பதாகவும் அமைந்திருக்கிறது'' என்று அண்ணா தெரிவித்திருக்கிறார்.

அண்ணா, தம்பிக்கு எழுதிய இறுதி முடங்கலில் ''பதவியில் இருப்பதன்மூலம்; இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர முடியுமானால், அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்'' என்று குறிப்பிட்டு இருந்தார்கள்.

அண்ணாவின் அந்த இறுதி முடங்கல்தான் அண்ணாவின் உயில்.

அது வலியுறுத்தும் 'மாநில சுயாட்சி' தான் அண்ணாவின் கட்டளைச் சாசனம்—காவியத்திற்கான தலைப்பு.

அண்ணன் தந்த தலைப்பில் ஆற்றல் மறவர் டாக்டர் கலைஞர் தலைமையில் காவியம் பாடிமுடிப்போம்.

நான்காம் செந்தமிழின் சகாப்தம்

ஷெல்லைவன் கோதை

ஈங்குள மடமை இருட்டினை மாய்த்திட
ஓங்குதீப் பந்தம் உயர்த்திய கரமுடன்
அண்ணன் தோன்றினார்! அண்ணன் தோன்றினார்!
அண்ணனா தோன்றினார்? அல்லவே அல்ல!
தென்னக துந்துபி! திராவிட பேரிகை
தென்புல மறவர் திருக்கரத் துறைவேல்!
புதிய சிந்தனை பூத்திடும் காடு!
சதியார் மடமையைச் சாய்த்த பூ கம்பம்!
இதய தீபம்! இனியபொற் காவியம்!
இனவர லாற்றின் எழுச்சித் திருப்பம்!
அயர்ந்த தென்னவர் ஆர்த்தெழுந் திடவே
உயர்ந்த ஓர் கால ஒளிப்பிர கடனம்!
'' இனிய தென்புலம் எழுக''வென் றுசுப்பிய
தனியொரு தலைமுறை! சந்தனச் சகாப்தம்!
இயலிசை கூத்தென இயம்புமுத் தமிழொடு
நயம்படு பேச்செனும் நான்காம் செந்தமிழ்!
இவைகளே தோன்றின! இவைகளே தோன்றின!
இவைதோன் றியதால் இனமது நிமிர்ந்தது!
தென்றலும் திங்களும், செந்தமிழ்த் தேனும்
ஒன்றியே அண்ணனாய் இங்குருப் பெற்றன!
எங்கள் வான்மிசை எழுந்தசெம் பரிதியே!
எங்கள் வயல்களின் இனமழைப் பெருக்கே!
எங்குசெந் தமிழுக் கிடர்தோன் றிடினும்
கங்குலைக் கிழித்தெழு கதிரா னவரே!
நூறுநூ றாண்டுகள் நோற்ற தவத்தின்
பேறாய் நாட்டில் பிறந்தபே ரறிஞரே!
ஞாயிறு வாழும் நாள்வரை நும்புகழ்
ஆயிரங் காலம்எம் அவனியில் வாழ்ந்திடும்!
அண்ணனே! கொள்கையாம் அகல்விளக் களித்தாய்!
மண்மிசை எந்த மாப்புயல் வீசினும்
கண்ணென அதனைக் காத்து நடப்போம்!
காலச் சாலையில் கவின்தடம் பதிப்போம்!

அஞ்சுகம் பதிப்பகத்திற்காக சென்னை - 600034, முரசொலி அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியா் மாறனால் 52-ஏ, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சென்னை 600034— லிலிருந்து வெளியிடப்படுகிறது.

Tel : JEKAYKAY

Phone : 669 (Bhavani)

J. K. K.

Textile Processing Mills

Post Box No. 55

Pudur Perumapalayam

KOMARAPALAYAM - 638183

We proudly announce that we have started our new Processing Mills, Near new Cauvery Bridge, Komarapalayam with most modern sophisticated machineries and that cloth bleaching, dyeing and finishing will be done to the entire satisfaction of the customers.

Managing Partners :

J K K Angappan
J K K Sundararajah
J K S Manickam
J K A Kandasamy
J K A Asokan



ஏ பி டி பார்சல் சர்வீஸ்,

11/231-B டாக்டர் நஞ்சப்பா ரோடு,

போஸ்ட் பாக்ஸ் நெம்பர்-3789

கோயமுத்தூர்-641018

அன்புடையீர்,

பாரத நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெறும் சரக்குப் போக்குவரத்து துறை மேம்பாடு அடையவும், இத்துறையைச் சார்ந்தவர்களை திருப்திப்படுத்தும் வகையில் சேவை செய்யவும், **ஏ பி டி பார்சல் சர்வீஸ்** தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

பாரதம் முழுவதும் பரவியுள்ள 850–க்கும் மேற்பட்ட நிலையங்களை இணைத்து சரக்குகளைப் போக்குவரத்து செய்து வருகிறது.

ஏ பி டி பார்சல் சர்வீஸின் கட்டணம் ஒரு குவிண்டாலுக்கு (100 கிலோகிராமுக்கு) ஒரு கிலோ மீட்டருக்கு 3.8 பைசா, மட்டுமே. அதாவது 4 பைசாவுக்கும் குறைவு.

மக்கள் விரும்பி அணியும் **கைத்தறி மற்றும் கதர்** ஜவுளிகளுக்கு 600 கிலோ மீட்டருக்கும், அதிகமான தூரமுள்ள ஊர்களுக்கு புக் செய்தால் முழு தூரத்திற்கும் **40% கட்டணச் சலுகை வழங்குகிறோம்.**

600 கிலோமீட்டருக்கு குறைந்த தூரமுள்ள ஊர்களுக்கு அனுப்பப்படும் கதர், கைத்தறி ஜவுளிகளுக்கு வழக்கம்போல 25% கட்டணச் சலுகையும் உண்டு. தவிர கதர், கைத்தறி ஜவுளிகளுக்கு மட்டும் குறைந்தபட்ச கட்டணம் ரூ. 4·50 ஆக 1—8—77 முதல் குறைக்கப்பட்டுள்ளது.

எல்லாவிதமான பார்சல் சரக்குகளுக்கும் **ஏ பி டி பார்சல் சர்வீஸ்** நிலையங்களுக்கிடையே 600 கிலோ மீட்டர் தூரமும் அதற்கு மேலும் தூரமுள்ள நிலையங்களுக்கு 25% கட்டணச் சலுகை உண்டு, இந்த 25% கட்டணச்சலுகை முழு தூரத்திற்கும் பொருந்தும்.

ஏ பி டி பார்சல் சர்வீஸில் 'டெர்மினல்' கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை.

எல்லா ஊர்களுக்கும் 'டுபே' (To-Pay) புக்கிங் வசதி உண்டு.

சரக்குகள் டெலிவரி நிலையம் சென்றடைந்த தேதியிலிருந்து 10 நாட்கள் வரை டெமரேஜ் வசூலிப்பதில்லை.

ஏ பி டி பார்சல் சர்வீஸின் கோவை, சென்னை, திருச்சி, மதுரை திருநெல்வேலி, கும்பகோணம், சேலம், பெங்களூர் ஆகிய சரக்கு மாற்று நிலையங்களில் 24 மணி நேரமும் சரக்குகள் புக்கிங்கிற்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஏ பி டி பார்சல் சர்வீஸின் மூடப்பட்ட பாடி லாரிகள் சரக்குகளுக்கு பூர்ண பாதுகாப்பு அளிக்கிறது.

மின்னல் வேக சர்வீஸ் : முக்கிய நகரங்களுக்கு நாள்தோறும் மின்னல் வேக சர்வீஸ் உண்டு.

குறைவான கட்டணம் ! **விரைவான டெலிவரி !!**

திருப்தியான சேவை !!!

இவையே ஏ பி டி பார்சல் சர்வீஸின் நோக்கங்கள்.

ANNA MALAR-- 1977, SUPPLEMENT TO MURASOLI 17—9—77 Regd. No. M-7436



COVER PRINTED AT
ORR JAY PROCESS
MADRAS-2 PHONE: 812204